அறைவு 04 இயம் 14 Oct 31 - Nov 06, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

"நேர்மையாய் வாழ
வேண்டுமாயின் வதைபடுதலும்,
மரியாதையை இழப்பதும்
எந்நேரமும் போராடுதலும்,
இடறி விழுவதும்,
முட்டி மோதுவதும்
அவமானப்படுதலும்
எந்நேரமும் இழப்புக்கு
உள்ளாவதும்
தவிர்க்க முடியாதவை....
மீண்டும் எழுந்து போராடு"

லியோ டால்ஸ்டாய்

HELLO MOBILE WORLD




122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

சிலருக்கு மட்டும் பிணை... பலருக்குத் தொடரும் சிறை

# தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு இல்லை!

## சனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் உறுதிமொழிகள் காற்றாகும் அபாயம்



தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்குவதில்லை என்ற முடிவை பிரதமர் தலைரமையில் கூடி ஆராய்ந்தவர்கள் எடுத்துள்ள நிலையில் நவம்பர் 7ம் திகதிக்குள் அரசியல் கைதிகளின் நிலை தீர்க்கப்படுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

தமது விடுதலையை வலியுறுத்தி தமிழ் அரசியல் கைதிகள் கடந்த சில நாட்களுக்கு முன்னர் மேற்கொண்ட பட்டினிப் போராட்டம் சனாதிபதியன் உறுமொழியை 17

3வது படுகொலை

## நொச்சிக்குளத்தில் புதைக்கப்பட்ட சடலம் யாருடையது???




நொச்சிக்குளத்தில் புதையுண்டிருந்த சடலம் யாருடையது என்பதைக் கண்டறியும் சட்ட தைத்திய அதிகாரியின் விசார - ணைகள் ஆரம்பமாகி - யுள்ளன.

கடந்த சில நாட்கள் பெய்த கடும் மழையால் பாதுகாக்கப்பட்டு வந்த அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் சட்ட வைத்திய அதிகாரி தற்போது விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது. 17

## ஐநா தீர்மானத்திற்கு எதிரான நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளது

ச.வி.கிருபாகரன்



ஐநாசபையில் நிறைவேற்றப்பட்ட மனித உரிமைத் தீர்மானத்திற்கு எதிரான நடவடிக்கைகள் ஸ்ரீலங்காவில் ஆரம்பமாகி விட்டன என மனித உரிமையாளரும் கடந்த பல வருடங்களாக மனித உரிமை அமர்வுகளில் கலந்துகொள்பவருமான ச.வி.கிருபாகரன் தெரிவித்துள்ளார்

கொழும்பு டெலிகிராப் இணையத்திற்கு எழுதியுள்ள கட்டுரையில் அவர் இத்தகவல்களை பட்டியல்படுத்தியுள்ளார்.

கைகிய நாடுகள் சபையினால் நிறைவேற்றப்பட்ட மனித உரிமைத் திர்மானத்திற்க எதிர்காலத்தில் என்ன நடக்கப் போகின்றது என்பதை இந் நடவடிக்கைகள் தெளிவாக எடுத்துக் காட்டுவதாக உள்ளன எனத் தெரிவித்துள்ள அவர், சர்வதேசத்தை- விசேடமாக ஐக்கிய ராச்சியம், அமெரிக்கா மற்றும் கனடா ஆகியவற்றை.... 17

எரிக் சொல்ஹெய்ம்

## ஈழத்தமிழர்கள் போராடியே தமது உரிமைகளைப் பெற வேண்டும்



ஈழத்தமிழரின் அரசியல் உரிமைகளை சிங்கள- வர்கள் ஒருபோதும் அன்பளிப்பாகத் தரப்- போவதில்லை என்று நோர்வே நாட்டின் இலங்கைக்கான முன்னாள் சமாதானத் தூதர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்திருக்கிறார்.

லண்டனில் நேற்று மாலை இடம்பெற்ற புத்தக - வெளியிட்டு நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், தமிழர்கள் தமது உரிமைகளைப் போராடியே பெறவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்காவில் புதிய ஆட்சி ஏற்பட்டிருப்பது நம்பிக்கையளிப்பதாக இருக்கின்ற போதிலும், ஈழத்தமிழர்கள் களத் - திலும், புலத்திலும் தொடர்ச்சியாகப்.... 17

## "தனிநாட்டுக்குச் சர்வதேசம் உடன்படாது"

துரைரெட்ணசிங்கம் நா.உ



17

லங்கா-இந்திய

## கடற்பயிற்சிகள் ஆரம்பம்




இந்தியக் கடற்படை கப்பல் மேலாளர்களுடன் கிழக்குப் பிராந்திய ஸ்ரீலங்கா கடற்படை கட்டளை அதிகாரி

திருகோணமலையை மையமாகக் கொண்டு இந்தியாவும் இலங்கையும் கடற்படை பயிற்சிகளை ஆரம்பித்துள்ளன.

நான்காவது முறையாக இடம்பெறும் இந்தப் பயிற்சிகள் எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கடற்படை உறவை விருத்தி செய்துகொள்வ 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

## விடுதலைக்குத் தடை சர்வதேசமா?

தமிழர்கள் புதிதாகத் தமது விடுதலையைத் தேடுகின்றார்கள் என்பதாக எழுப்பப்படுகின்ற வாதங்களில் இருந்து வரலாற்று உண்மை வேறாக இருப்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

1800களில் ஆங்கிலேய ஆட்சி அறிமுகமான சிலோன் என்று அழைக்கப்பட்ட நாட்டில் ஆதிகாலம் தொட்டுத் தனித்தனியான தேசங்களாக வாழ்ந்த சிங்களமொழி பேசும் வந்தேறுகுடிகளும் தமிழ்மொழி பேசிய ஆதிக் குடிகளும் ஒன்றிணைக்கப்பட்டனர்.

விரும்பியோ விரும்பாமலோ ஆயுத ஆட்சியின் கீழ் காலனித்துவப் பண்புகளுடன் இணைக்கப்பட்ட அந்த இரண்டு தேசத்தவர்களுள் ஒரு தேசத்திற்கு உரிமையானவர்களான தமிழர்கள் தமது இறையாண்மையை மீட்டுக்கொள்வதற்காக இன்று ஸ்ரீலங்கா என்ற நாட்டில் போராடி வருகின்றனர்.

சிலோன் என்ற நாட்டில் தனித்துவத்துடனும் தமது இறையாண்மையுடனும் அண்டைய தேசங்களில் வாழ்ந்த சிங்கள மக்களுடன் விட்டுக்கொடுப்புக்களுடனும், வர்த்தகத்திற்காக வந்திறங்கிய இஸ்லாம் மதத்தைப் பின்பற்றி - யவர்களையும் அரவணைத்துப் பயணித்த தமிழ்த் தேசத்தவரை அடக்கியொடுக்க முனைந்த பேரினவாதத்தின் கரங்களில் இருந்து தமது சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்கான போராட்டத்தை தமிழ் மக்கள் தொடர்கின்றனர்.

சுதந்திரம் என்பது வெறும் கம்பளிப் பாதைகளுக்குள்ளும் தடையரன்கள் அற்ற போக்குவரத்திற்குள்ளும் அடங்கிப் போவதில்லை. நாங்கள் சுதந்திரமாக இருக்கின்றோம் என்பதை உணரும் வரைக்கும் தமிழர்களின் பிரச்சனை தீரப் போவதில்லை.

அண்மையில் திருகோணமலை மாவட்டத்தின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் "தமிழர்களுக்கு தனிநாட்டை வழங்க ஒருபோதும் சர்வதேச நாடுகள் விரும்பாது" எனக் கூறியிருந்தார்.

இந்தக்கருத்தைக் கேட்ட பின்னர் தான் இரண்டு விருப்பங்கள் தம்மிடையே முட்டிமோதிக்கொள்கின்றன என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது. அவ்விரு விருப்பங்களில் முதலாவது தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கை. இரண்டாவது தமிழர்களின் அக்கோரிக்கை தொடர்பான சர்வதேசத்தின் நிலை.

1976ம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் தாயகப் பிரதேசத்தை மீட்கும் தீர்மானத்தைத் தமிழர்கள் எடுத்திருந்தனர்.

அன்றைய தினத்திலேயே தமிழர்களின் தாயகம் தமிழீழம் என முன்மொழியப்பட்டது. 1976ல் முன்மொழியப்பட்ட அத்தீர்மானத்தை சர்வதேச சமூகம் வெளிப்படையாக ஆதரிக்கவில்லை. ஆனால் அப் பிரகடனத்தை எதிர்க்கவும் இல்லை. இதேவேளை இந்திய அரசின் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட வடக்குகிழக்கு மாகாண சபையின் முதலாவது முதலமைச்சரான வரதராசப்பெருமாள் தனது பதவியின் அந்திம காலத்தில் தமிழீழப் பிரகடனத்தைச் செய்தார். அப்போதும் சர்வதேச நாடுகள் அத்தீர்மானம் தொடர்பாக அமைதிகாத்தன.

அதற்குப் பின்னரான காலப்பகுதியில் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்துப் போரிட்ட விடுதலைப் புலிகளுடன் சர்வதேசம் பலதடவைகள் பேச்சுக்களை மேற்கொண்டது.

ஆகவே தனிநாட்டுக்கான தமிழரின் கோரிக்கை என்பதைச் சர்வதேசம் மதலில் எதிர்க்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

கால, தேச, வர்த்தமானத்தின் மாற்றங்கள் தமிழரின் போராட்டத்தைப் பயங்கரவாத முகம் கொள்ள-வைத்ததை அடுத்து தமிழர்களின் போராட்டத்தின் மீது உலகளவிய போர் தொடுக்கப்பட்டு அப்போராட்டத்தை முன்னெடுத்த ஆயுதப்படை நடவடிக்கைகள் அழிக்கப்பட்டனவே தவிர தமிழ் மக்களின் பிரச்சனைக்கான சரியான தீர்வு எதுவென்பது தொடர்பாகத் தமிழ் மக்களே தீர்வை முன்வைக்க வேண்டும் என்பதையே சர்வதேசம் எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றது.

ஏனெனில் திணிக்கப்படும் தீர்வுகள் எந்தக் காலத்திலும் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை சர்வதேசம் தெளிவாகப் புரிந்துகொண்டுள்ள நிலையில் தமிழர்களின் தீர்வு எது என்பதை முன்வைக்கவேண்டிய மிகப்பெரும் பொறுப்பு தமிழர்களால் தேர்ந்தெடுக்கப்-பட்ட தலைமைக்கு உண்டு.

அந்த நிலையில் தமிழர்களுக்கு எது தேவை என்பதை உறுதியுடன் வெளிப்படுத்தாமல், உலகநாடுகளுக்கு எது விருப்பமோ அதனைச் செயற்படுத்தவே அத்தலைமை விரும்புவதை திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினரின் கூற்று தெளிவாக்கியுள்ளது.

தமிழர்களின் வரலாற்றின் மீள்வாசிப்பு என்பது மிக முக்கியமாக எம் அனைவருக்கும் தேவைப்படுகின்றது. போராடும் வழிமுறைகளில் தவறுகள் இருக்கும்... ஆனால் அத்தவறுகளால் அப்போராட்டமே தவறானது என நிரூபிக்கமுற்படல் சரியானதா???

## கடற்படையினரின் குறி சூட்டுப் போட்டி

திருகோணமலை கடற்படை பயிற்சிக் களத்தில் நடைபெற்ற குறிசூட்டுப் பொட்டியின் நிறைவு நிகழ்வில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்தன முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டுள்ளார்.

கடந்த 29ம் திகதி நடைபெற்ற இப்போட்டியில் பேசிய அவர் தாய்நாட்டைக் காப்பதற்குக் களநடவடிக்கைகளை நிலப்பகுதியில் மேற்கொள்ளக்கூடிய வினைத்திறன் வாய்ந்த கடற்படையினரைக் கட்டியெழுப்புவதற்கான பயிற்சிப் போட்டியாக இப் போட்டி அமைந்திருப்பதாகத் தெரிவித்தார்.



முதலிக்குளம்

## பூட்டிக்கிடக்கும் வீடுகளை வீடற்றவருக்கு வழங்குவோம்

### குடியிருக்காத வீடுகளில் குற்றச் செயல்கள்

வழங்கப்பட்ட வீடுகளில் குடியிருக்காதவர்களை அகற்றி வீடில்லாத மக்களுக்கு அவ்வீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப் போவதாக முதலிக்குளம் பிரதேசச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பூட்டிக்கிடக்கும் வீடகளில் பல சட்டவிரோத நடவடிக்கைகள் நடைபெறுவதாலேயே இந்த நடவடிக்கையினை எடுக்கவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

யுத்தப்பாதிப்பிற்கு உள்ளான நாச்சிக்குளம், ரொட்டவெவ, சாந்திபுரம் ஆகிய கிராமங்களில் கிராமத்திற்கு இருபத்தைந்து வீடுகளை அமைத்து 2006ம் ஆண்டில் அரசு வழங்கியிருந்தது.

எனினும் மிகச் சொற்பமான மக்களே அவ்வீடுகளில் வசிக்கின்றனர். அதேவேளை 2009ம் ஆண்டின் பின்னர் குறித்த கிராமங்களுக்கு வருகை தந்த மக்கள் வீடுகளின்றி அவலப்படுகின்றனர்.

பராமரிப்பின்றி அழிவடையும் வீடுகளைத் தமக்குத் தருமாறு அம்மக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்தே பூட்டப்பட்டு பராமரிப்பின்றிக் கிடக்கும் வீடுகளின் உரிமையாளர்களுக்குக் கடிதம் மூலம் அறிவுறுத்தலை விடுத்துள்ளதாகப் பிரதேசச் செயலாளர் தெரிவித்தார்.

கிண்ணியா

## பூவரசன்தீவில் சடலம் மீட்பு

பூவரசன் தீவில் வீட்டிற்குள் இருந்த ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. கிண்ணியா காவல்துறை-யினருக்கு கிடைத்த தகவலை அடுத்தே கடந்த 26ம் திகதி இச்சடலம் மீட்கப்பட்டது.

குறித்த நபரின் வீடு பூட்டப்பட்டுக் கிடந்ததை அடுத்து வீட்டினை உடைத்துப்பார்த்தபோதே குறித்த நபர் மரணமாயிருப்பதைக் கண்டுகொண்டவர்கள் காவல்துறைக்குச் செய்தியைத் தெரியப்படுத்தியிருந்தனர்.

சேருநுவர

## வங்கியின் உட்புறத்தைப் படம் பிடித்தவருக்குப் பிணை

சேருநுவரவில் அமைந்துள்ள அரச வங்கியான்றின் உள்ளக கட்டமைப்பைக் கையடக்க அலைபேசியில் படம்பிடித்தவர் கைதாகிப் பிணையில் விடுவிக்கப்-பட்டுள்ளார்.

மூதூர், பாரதிபுரம் பகுதியைச் சேர்ந்த அப்துல் ஜபார் என்பரே சந்தேகத்தில் கைதாகியுள்ளார்.

சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதுடன் வங்கியின் உள்ளக அமைப்புக்களை அவர் படம்பிடிப்பதை அவதானித்த வங்கி அலவலர் ஒருவரின் தகவலைப் பெற்றுக்கொண்ட காவல்துறையினர் சடுதியாக வங்கிக்குள் பிரவேசித்து குறித்த நபரைக் கைது செய்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இச்சம்பவத்தின் பின்னர் அவர் நீதிமன்றில் முன்நிலைப்படுத்தப்பட்டு சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் எதிர்வரும் 3ம் திகதி மீண்டும் நீதிமன்றில் முன்நிலையாகுமாறு கட்டளையும் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிண்ணியா

## "பேனா" கவிதைச் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

கான்

கிண்ணியாவில் இருந்து வெளிவரும் பேனா கவிதைச் சஞ்சிகைக்கு கவிதைகளை அனுப்பும்படி எழுத்தாளர்களுக்குக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

காலாண்டு இதழாக வெளிவரும் இக் கவிதை சஞ்சிகைக்கு ஆக்கங்களைத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அச்சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் பெரோஸ்கான் கோரிக்கை விடுத்துள்ளார். முகவரி - பேனா, இல. 92/4 உமறுப் வீதி, மஹரூப் நகர், கிண்ணியா.

நகரம்

## குறிஞ்சிச்சாரல் நிகழ்வு திருமலையில்...

அச்சுதன்

பேராதனை பழ்கலைக்கழகத்தின் தமிழ்ச்சங்கம் குறிஞ்சிச்சாரல் என்னும் நிகழ்வை வருடா வருடம் நடாத்தி வருகின்றது.

இம்முறை 2015ம் ஆண்டிற்கான குறிஞ்சிச்சாரல் நிகழ்வினை திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் 31.10.2015 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடாத்த உள்ளனர்.

இந்நிகழ்வில் திருகோணமலை எழுத்தாளர் நந்தினி சேவியருக்கு சான்றோர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. நந்தினி சேவியர் ஈழத்து எழுத்தாளர்களில் மிகவும் முக்கியமானவர் எழுத்து துறையில் சுமார் 50 வருடங்களை கடந்து நிற்கும் அவருக்கு கடந்த மாதம் 10ம் திகதி கொழும்பில் கொடகே நிறுவனம் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

நகரம்

## போதைப்பொருள் விற்பவரின் மனைவியுடன் தகவல் தொடர்பு

## காவல்துறை அலுவலர் சந்தேகத்தில் கைது..!

திருகோணமலையில் தகவல்களை வெளிப்படுத்தியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் காவல்துறை அலுவலர் ஒருவர் கைதாகியுள்ளார்.

திருகோணமலைத் தலையலுவலகக் காவல்நிலையத்தில் பணியாற்றும் மேற்படி அலுவலர் கடந்த வியாழக்கிழமை விசேட புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டதாக தெரிகின்றது.

குறித்த அலுவலர் பாலையூற்றுப் பகுதியில் போதைப்பொருள் விற்பவர் எனச் சந்தேகிக்கப்படுபவரின் மனைவியுடன் கையடக்கத் தொலைபேசித் தொடர்பாடல்களை மேற்கொண்டிருப்பதாகக் கிடைத்த துப்பினை அடுத்து குறித்த அலுவலரின் கையடக்கத் தொலைபேசித் தொடர்பாடல் பட்டியல் சோதனைக்குட்படுத்தப்பட்டதாகவும் அதனையடுத்தே அவர் கைதானதாகவும் தெரிகின்றது.

கைதுசெய்யப்பட்டவர் அபேரத்ன என்ற காவல்துறையினர் என தேசிய ஊடகச் செய்தி தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
மட்டக்களப்பு செய்திகள்

# கூட்டணியுடன் இணைந்தாரா?

## விநாயகமூர்த்தி முரளிதரன்



தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் சேர்ந்து அரசியல் எதிர்காலப் பயணத்தினைத் தொடங்கவிருப்பதாக அறிவித்தமை, தன்னுடைய தனிப்பட்ட முடிவு என முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார். மேலும் யாருடைய திணிப்பின் நிமிர்த்தமும் நான் இவ்வாறு செயற்படவில்லை எனவும் இவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து விலகி, வீ.ஆனந்தசங்கரியின் தலைமையிலான, தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்துகொள்ளப் போவதாகவும், தமிழர் விடுதலைக் கூட்டணி என்பது பாரம்பரியம் மிக்க கட்சி. இக்கட்சியினூடாகத்தான் அமிர்தலிங்கமும் எதிர்க்கட்சித் தலைவராகினார்.

ஆனந்தசங்கரி ஐயாவும் தமிழ் மக்களைச் சுரண்டி வாழ நினைப்பவரில்லை. மக்களின் நன்மைக்காகவே குரல்கொடுத்து வந்திருக்கின்றார். ஆகையினால்தான், ஜனநாயகத்துக்காகக் குரல்கொடுக்கும் அக்கட்சியுடன் சேர்ந்து செயற்படும் எனது ஆசையினை அறிவித்திருந்தேன்.

இதற்கிடையில் கருணா உட்பட பல கட்சிகளை இணைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமையில் புதிய கூட்டமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அக்கட்சித் தலைவர் ஆனந்தசங்கரி, ஊடகவியியலாளர்களைச் சந்தித்து கருத்து தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு முழுமையான அக்கறை இல்லை. அவர்கள் வெறுமனே தேர்தல் காலத்தில் மட்டும் குறை குற்றம் கூறி கட்சிகளுக்கிடையில் முட்டி மோதிக் கொண்டு தேர்தல் முடியும் வரை மட்டுமே கூட்டமைப்பாக செயற்படுகின்றனர்.

தேர்தல் முடிவடைந்த பின்னர் அவர்களுக்குள் கட்டமைப்போ அல்லது கொள்கையோ கிடையாது என மேலும் தெரிவித்தார்.

### கருணா தெரிவிப்பு

# படுகொலை தொடர்பாக முன்னால் பா.உ அரியநேத்திரனை விசாரிக்கப்படவேண்டும்

கிங்ஸிலி இராஜநாயகம் கொலை தொடர்பாக அரியநேத்திரனிடம் விசாரிக்க வேண்டும் என ஊடகங்களில் கருணா கூறிய கருத்து தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் அவர்களிடம் கேட்டபோது படுகொலை சம்பந்தமாக விசாரணை செய்து, சம்பந்தப்புட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. அதற்காக என்னை விசாரிக்க வேண்டும் என்று விநாயகமூர்த்தி முரளிதரன் என்ற கருணா கூறுவது அவரின் கடந்த கால துரோகத்தனத்தை மறைக்கும் அப்பட்டமான குரோத எண்ணமே என தெரிவித்தார்.

அவர் மேலும், கிங்ஸிலி இராஜநாயகம் கொலை செய்யப் படுவதற்கு முன்னமே நான் பாராளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்து கடமை புரிகின்றேன் எனவே நான் தெரிவாக முன்னரே இப் படுகொலை இடம்பெற்றது எனக்கூறுவது அப்பட்டமான பொய் என ெரிவித்தார்.

# பிள்ளையான் மீதே சந்தேகம்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலையில் தொடர்பிருப்பதாக சிவநேசதுரை சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையான் மீது சந்தேகம் எழுந்துள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலை செய்யப்பட்டமை தொடர்பிலேயே பிள்ளையான் மீது ஆரம்பத்தில் சந்தேகம் எழுந்தன. இந்த சந்தேகத்தின் காரணமாகவே குற்றப் புலனாய்வு பிரிவினரால் பிள்ளையான் கைது செய்யப்பட்டார்.

பின்னர் அவரை தடுத்து வைத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

எப்படியிருப்பினும் தற்போது வரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் நடராஜா ரவிராஜ் கொலைக்கும் பிள்ளையானுக்கு தொடர்பிருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# மண் அகழ்வை தற்காலிகமாக

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக தாழ் நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கடந்த சனிக்கிழமை முதல் பெய்துவரும் கடும் மழை ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் கோரளைப்பற்று தெற்கு கிரான் - தொப்பிகல பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

எனினும் மக்கள் இடம்பெயரவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. வெள்ளப்பெருக்கு காரணமாக கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் புலிபாந்தகல் மற்றும் தொப்பிகல பிரதேசங்களை அண்மித்த கிராமங்களுக்கான தரைவழிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கூரை மீதேறி தம் எதிர்ப்பைக் காட்டினர் கைதிகள்



மட்டக்களப்பு சிறைச்சாலையில் தண்டனை விதிக்கப்பட்ட எட்டு கைதிகள் நேற்று வெள்ளிக்கிழமை மாலை சிறைச்சாலையின் கூரை மீதேறி போராட்டம் நடத்தி வருகின்றனர்.

சிறைச்சாலையில் தாங்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்துவருவதாகவும் தமக்கு நீதி வேண்டும் எனக்கோரியே இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். அத்துடன் தம்மை பார்க்க வரும் உறவினர்களும் கெடுபிடிகளுக்கு உள்ளாவதாக போராட்டத்தில் பங்குகொண்டோர் தெரிவித்தனர். சிலருக்கு சிறைச்சாலையில் பல சலுகைகள் அளிக்கப்படுவதாகவும் தாங்கள் துன்புறுத்தப்படுவதாகவும் கைதிகள் தெரிவித்தனர். இவர்கள் அரசியல் கைதிகள் அல்ல இவர்கள் கப்பம் பெற்றமை, திருட்டு உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களுக்காக சிறைத் தண்டனை வழங்கப்பட்டவர்கள் என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சட்ட விரோத வியாபாரத்தில் ஈடுபட்டோர் கைது

நிறைகுறைந்த பாணை விற்பனை செய்த இரு வர்த்தகர்களுக்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் தலா 5000 ரூபாய் தண்டப்பணம் அறவிட்டதுடன் முத்திரையிடப்படாத அளத்தல் நிறுத்தல் கருவிகளை கொண்டு வியாபராத்தில் ஈடுபட்ட இரு வர்த்தகர்களுக்கு தலா 2000 ரூபாய் வீதமும் தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போது 45 வர்த்தக நிலையங்கள் சோதனையிடப்பட்டன.

இதன்போது மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது 4 வர்த்தகர்கள் கைதுசெய்யப்பட்டு இவர்கள் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# திங்கள் காணாமல் போனவர் கடலில் சடலமாக

காத்தான்குடிக்குட்பட்ட றிஸ்வி நகர் கடற்கரையோரத்தை அண்டிய வெள்ள நீரில் இருந்து பெண்ணொருவரின் சடலம் கடந்த வியாழக்கிழமை காலை மீட்கப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

குறித்த சடலத்தை கண்ட சிலர், இது தொடர்பில் காவல்துறையினருக்கு தகவல் வழங்கியதன் அடிப்படையில் இந்த சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை காணாமல் போன மஞ்சந்தொடுவாய் பிரதேசத்தில் வசிக்கும் 79 வயதான எம்.பாத்துமுத்து என்பவரின் சடலமாக இருக்கலாம் என காவல்துறையினர் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்க உதவி

கிழக்கு மாகாணத்தில் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கில் அவுஸ்திரேலிய அரசு 20 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்களை வழங்கவுள்ளதாக இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் கார்லோட்டே ப்ளண்டெல் தெரிவித்துள்ளார். நேற்று வெள்ளிக்கிழமை காலை மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்த உயர் ஸ்தானிகர் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட்டை சந்தித்து பேச்சு நடாத்திய-போது இதனை தெரிவித்தார். சட்டரீதியற்ற முறையில் அவுஸ்திரேலி-யாவிற்குள் நுழையும் இலங்கையர்-களை தடுப்பதில் பாரிய பங்குளிப்பு செய்த இலங்கை காவல்துறை-யினருக்கும் அவர் நன்றியும் தெரிவித்துள்ளார்.

# புலம்பெயர் சர்வதேசத்தின் உதவியில் அணைக்கட்டு

புலம்பெயர் சர்வதேச அமைப்பின் ஊடாக மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்ட வவுணதீவு மண்முனை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாவடி ஆறு அணைக்கட்டு இன்று அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் திருமதி.றொபின் முட்டேயினால் திறந்து வைக்கப்பட்டது. 5.2 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட இந்த அணைக்கட்டின் மூலம் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவின் இலுப்படிச்சேனை பிரதேசத்தின் 300க்கும் மேற்பட்ட ஏக்கர் வயல் நிலங்களில் வேளாண்மை செய்கை பண்ணக் கூடியதாக இருப்பதுடன், இப்பிரதேசத்தில் ஏற்படும் வெள்ளப்பாதிப்பும் தவிர்க்கக்கூடியதாக இருக்கும்.



# கூரிய ஆயுதத்தால் பெண் தாக்கம்

கல்முனை சேனைக்குடியிருப்பில் நேற்று காலை 8.30 மணியளவில் குறித்த கிராமத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவரினால் யுவதி ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுள்ளார். குறித்த பெண் 16 தையல்கள் போடப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக மட்.வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் ச.உதயராஜ் அவர்களை கைது செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றவாளிகளாயினும் காப்பாற்றப்படுவார்கள்

## இலங்கை அரசு தெரிவிப்பு

கொழும்பு

ஜெனீவா தீர்மானத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்தாலும், அதில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு படையினர் ஆகியோர் தண்டிக்கப்படமாட்டார்கள் என அரசு நேற்று அறிவித்துள்ளது. அவர்களது பாதுகாப்பு உறுதி செய்யப்படும் எனவும் அரசின் அமைச்சர் மஹிந்த அமரவீர நேற்று கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இலங்கை அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்தாலும், அதிலிருந்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புத்துறையின் முன்னாள் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முப்படையினர் ஆகியோர் காப்பாற்றப்படுவார்கள் என அமைச்சர் மஹிந்த அமரவீர செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால் இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச விசாரணையொன்று மேற்கொள்ளப்பட திட்டமிட்டிருந்தால், நாடு பொருளாதாரத் தடைகளை எதிர்கொண்டு பெரிய பிரச்சினைகளை சந்திக்கும் அபாயம் ஏற்பட்டிருக்கும் எனவும் அமைச்சர் மஹிந்த அமரவீர அந்த செய்தியாளர்கள் கூட்டத்தில் மேலும் தெரிவித்தார்.

மலைமுரசு
MALAIMURASU
இலங்கைச் செய்திகள்

## சட்டத்தரணிகள் உதவி புரிகின்றனர்

### கொண்டயாவிற்கு ஆதரவு

கம்பஹா

கம்பஹா – கொட்டதெனியாவ பிரதேசத்தில் சிறுமி சேயா சதெவ்மியின் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள கொண்டயா எனப்படும் துனேஷ் பிரியசாந்தவிற்கு சார்பாக குரல் கொடுத்து வரும் சட்டத்தரணிகளின் நோக்கம் என்னவென காவல்துறை ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர ஊடகவியலாளர் சந்திப்பில் கேள்வி எழுப்பியுள்ளார்.

சந்தேகநபர்களை தனிமைப்படுத்தி காவல்துறையினர் தாக்குதல் நடத்துவதாக கருத்துகள் பரவுவதாகவும், எனினும் கடந்த 10 வருடங்களில் இவ்வாறான சம்பவங்கள் எதுவும் நடைபெற்றதற்கான எவ்வித ஆதாரங்களும் இல்லையெனவும் அவர் கூறியுள்ளார்.

## விசாரிக்க பிரதமர் உத்தரவு



பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சம்பந்தமாக மகஜரொன்றை சமர்ப்பிக்க நேற்று உயர் கல்வி அமைச்சு நோக்கி சென்று கொண்டிருந்த பல்கலைகழக மாணவர்களின் பேரணி மீது காவல்துறையினர் கண்ணீர் புகைக்தாக்குதல்களை மேற்கொண்டு மாணவர்களை தாக்கியதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இதையடுத்து காவல்துறையினர் மேற்கொண்ட தாக்குதல் சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சட்டம் ஒழுங்கு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த தாக்குதல் சம்பந்தமாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்று பல தரப்பினரால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்களை ஆராய்ந்த பின்னர் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

## கொலை செய்துவிட்டு விருந்தில் பங்கேற்பு

அநுராதபுரம்

அநுராதபுரம் இரவு விடுதி உரிமையாளர் வசந்த சொய்சா கொலைச் செய்யப்பட்டதனைத் தொடர்ந்து, கொலையாளிகள் அருகில் இருந்த காட்டுப்-பகுதியில் மகிழ்ச்சியைக் கொண்டாடியுள்ளதாக தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

அநுராதபுரத்தில் இருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் சிராவஸ்திபுர தேக்குமரக் காட்டுப் பகுதியிலேயே குறித்த இந்த விருந்து வைபவம் நடைபெற்றுள்ளது. இதன்போது, கொலையாளிகள் கொலைக்குப் பயன்படுத்திய கோடரி, மற்றும் இரத்தம் தோய்ந்த ஆடைகள் என்பவற்றை தீயிட்டு எரித்துள்ளதுடன், கோடரியின் இரும்பு பாகத்தினை மண்ணிற்குள் புதைத்துள்ளனர்.

இவ்வாறு புதைக்கப்பட்ட கோடரரியின் இரும்புப் பாகத்தினை காவல்துறையினர் மீட்டெடுத்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர்.

## "என்னை மனதளவில் தாக்குகின்றனர்" – முன்னால் சனாதிபதி –

வாக்குமூலம் பெறுவது என்பது என்னை மனதளவில் தண்டிப்பதாகும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பாரிய நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் கடந்த வியாழக்கிழமை அன்று முன்னிலையானதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கலைஞர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வர்த்தகர்கள், இராணுவத் தளபதிகள், என அனைவரையும் அழைத்து வாக்குமூலம் பெறப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் அரச தொலைக்காட்சிகளில் மேற்கொள்ளப்பட்ட பிரசார விளம்பரங்களுக்கான கட்டணத்தை செலுத்தத்தவறிய குற்றச்சாட்டை மஹிந்த ராஜபக்ச எதிர்கொண்டுள்ளார்.


இது தொடர்பாக அவர் இரண்டு முறை ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் வாக்குமூலம் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விமல் குற்றச்சாட்டு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் புலம்பெயர் மக்களின் அறிவுறுத்தல்களுக்கு அமையவே அரசாங்கம் தீர்மானங்களை மேற்கொள்வதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட அழைப்பிற்கு அமைய உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை இமானுவெல் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறெனினும் தீவிரவாத செயற்பாடுகளுடன் தொடர்புபட்டுள்ளமையால் நாட்டிற்குள் விஜயம் மேற்கொள்ள அருட்தந்தை இமானுவெல்லிற்கு கடந்த அரசாங்கத்தினால் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



## வெள்ளைக்கொடி ஏந்திய நிலையிலும் படுகொலை இடம்பெற்றது

### மனந் திறந்தார் எரிக் சொல்கைம்



இறுதிக்கட்ட யுத்தத்தின் போது வெள்ளைக்கொடி ஏந்திய நிலையிலும் படுகொலைகள் இடம்பெற்றதாக இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத்தூதுவரும், அமைச்சருமான எரிக் சொல்கைம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உள்நாட்டுப் போரில் நோர்வேயின் வகிபாகம் குறித்து 'சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருதல்' (To end a civil war) எனும் தலைப்பில் மார்க் சோல்டர் எழுதிய புத்தக வெளியீட்டுவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே எரிக் சொல்கைம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், இலங்கையில் தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதாயின் தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட வேண்டும். ஆயுதப் போராட்டத்தின் மூலமாக பெறமுடியாத தமிழர்களின் உரிமைகளை, அப் போராட்டம் நசுக்கப்பட்ட தற்போதைய நிலையில் தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் தொடர்ச்சியான போராட்டங்கள் மூலமாக மட்டுமே வென்றெடுக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

## "தீபாவளியை அனைத்து இந்துக்களும் துறப்போம்"

### அகில இலங்கை இந்துமா மன்றம் கோரிக்கை

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்காமல், ஸ்ரீலங்கா அரசு தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாட முனைந்தால், அதில் எந்தவொரு இந்து மகனும் கலந்து கொள்ளாமல் பகிஷ்கரிக்க வேண்டும் என்று அகில இலங்கை இந்துமா மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும், அரசியல் கைதிகள் விமோசனம் கிடைக்கவேண்டும் என வேண்டி, நேற்று வெள்ளிக்கிழமை நாடு பூராகவும் இந்து ஆலயங்களில் வழிபாடுகளில் ஈடுபடுமாறும் இந்துமாமன்றம் கோரிக்கை விடுத்திருந்தது.

தீபாவளிக்குமுன், 14 சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள 217 தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படவேண்டும் என்று ஜனாதிபதிக்கும் அரசுக்கும் நாம் ஏற்கனவே வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

உண்ணாவிரதம் இருந்த கைதிகளுக்கு நவம்பர் 7 ஆம் திகதிக்கு முன் தீர்வு காணப்படும் என்று ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழியைத் தொடர்ந்து அந்த உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டது. அது நிறைவேற்றப்படாவிட்டால் அந்தக் கைதிகள் மீண்டும் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்க நேரிடும் எனவும் தெரிவித்துள்ளனர்..

## ஆசியாவிற்கு இறுதி விஜயம்

மிதக்கும் உலக புத்தக கப்பல் தற்போது கொழும்பு துறைமுகத்தில் தரித்துள்ளது. இதில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட விடயங்களைக் கொண்ட பல தரப்பட்ட புத்தக கண்காட்சி இடம்பெறுவதாக இக்கப்பலின் தொண்டர் ஊழியராக இடம்பெற்றுள்ள ஸ்ரீலங்கா அதிகாரியான எப். வின்ஸ்டன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஸ்ரீலங்காவில் மீண்டும் வருகை தந்துள்ள லோகோஸ் ஹோப் கப்பலின் மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் பயன் பெறக்கூடிய வகையில் எட்டு இலட்சத்திற்கும் அதிகமான பலதரப்பட்ட புத்தகங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## இலங்கைப் பெண் ஆஸி முதல்வரானார்

அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியாவின் மோர்லாண்ட் நகர மேயராக இலங்கைப் பெண் ஒருவர் முதல்முறையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவுஸ்திரேலியாவின் கிறீன் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்ட சமந்தா இரட்ணம் என்ற பெண்ணே இவ்வாறு மேயராகத் தெரிவாகியுள்ளார்.

இலங்கையில் பிறந்த சமந்தா இரட்ணம், உள்நாட்டு யுத்தம் காரணமாக பெற்றோருடன் கடந்த 1989 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் குடியேறியுள்ளார்.

வெற்றியைப் பொறுத்தவரை கடந்த இரு வருடங்களைவிட இவ் வருடம் அதிக நம்பிக்கையுடன் இருந்ததாக சமந்தா தெரிவித்துள்ளார்.

## உணவகம் ஒன்றில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம்

அமெரிக்கா

### 9பேர் உயிரிழப்பு 177 பேர் கைது

அமெரிக்காவில் உள்ள ரெஸ்டாரண்ட் ஒன்றில் கடந்த மே 17ஆம் திகதி பைக் ஓட்டும் இரண்டு கும்பலுக்கு இடையே பயங்கர மோதல் ஏற்பட்டது.

இதையடுத்து இரண்டு கும்பலை சேர்ந்தவர்களும் துப்பாக்கி மூலம் ஒருவரை ஒருவர் சுட்டுக்கொண்டனர். இதில் 9 பேர் உயிரிழந்தனர். மேலும் 177 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்த சம்பவம் தொடர்பான கண்காணிப்பு கமெராவின் வீடியோ காட்சிகள் தற்போது வெளியாகியுள்ளன.

தங்களுக்குள் யார் பெரியவர்கள் என்ற மோதலில் இரு கும்பலை சேர்ந்தவர்களும் ஈடுபட்டதாலேயே இந்த தூப்பாக்கிச் சூடு சம்பவம் நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




## ஒரு வருடத்தின் பின் பிரித்தானிய பிரஜை விடுவிப்பு

சவுதி

சவுதி அரேபியாவில் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட பிரித்தானியப் பிரஜையொருவர் ஒரு வாரத்திற்குள் விடுதலை செய்யப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தெரியவருவதாவது, வீட்டில் தயாரிக்கப்பட்ட சட்டவிரோத மதுபானத்தை குறித்த நபர் வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, சவுதி அரேபிய காவல்துறையினரால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். 74 வயதான கார்ல் அந்திரீ என்பவரே ஒரு வருடத்துக்கும் மேலாக சிறைச்சாலையில் வைக்கப்-பட்டுள்ளார்.

இந்த நிலையில், சவுதி அரேபியாவில் இவருக்கு கசையடி வழங்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இவருடைய விடுதலை தொடர்பில் சவுதி அரசாங்கத்துடன் பல தடவைகள் கலந்துரையாடியதாக பிரித்தானிய வெளியுறவுத் துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## வெடிக்க வைத்து மரண தண்டனை - ஐ.எஸ்.ஐ

சிரியா

ஐ.எஸ். தீவிரவாதிகள் சிரியாவிலுள்ள பண்டைய நகரான பல்மைராவிலுள்ள தூண்களில் மூவரை கட்டி வைத்த பின்னர் அந்த தூண்களை வெடி வைத்து தகர்த்து அவர்களுக்கு மரணதண்டனை நிறைவேற்றியுள்ளதாக சிரிய மனித உரிமைகள் அவதான நிலையம் தெரிவித்துள்ளது.



கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறைவேற்றப்பட்ட இந்த மரண தண்டனைகள் குறித்து சர்வதேச ஊடகங்கள் செவ்வாய்க்கிழமை செய்திகளை வெளியிட்டுள்ளன.

மேற்படி மூவருக்கும் எதற்காக மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது என்பது தொடர்பில் தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை.

அந்த மூவருக்குமான மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட இடத்திற்கு உள்ளூர்வாசிகள் சென்ற போது அங்கிருந்த அலங்காரத் தூண்கள் வெடித்துச் சிதறியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## பாலியல் பலாத்காரம் தொடர்பில் விசாரணை

டொரன்ரோ

பான் விளையாட்டு போட்டிகளிடையே இடம்பெற்ற பாலியல் தாக்குதல் தொடர்பில் பொது விசாரணை நடத்த டொரன்ரோ காவல்துறையினர் தீர்மானித்துள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் 25ஆம் திகதி டவுன் டவுன் பகுதியிலுள்ள இரவு களியாட்ட விடுதி ஒன்றிற்கு சென்றிருந்த பிரேஸில் நாட்டைச் சேர்ந்த Dominguez Piazon மற்றும் Andrey Da Silva Ventura ஆகிய இரண்டு விளையாட்டு வீரர்களும், அங்கு வந்திருந்த 20 வயதுடைய யுவதியையும், அவரது நண்பியையும் பாலியல் தொந்தரவு செய்ததாகவும் அவர்கள் இணங்காததை அடுத்து அவர்களது வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து பாலியல் தாக்குதல் நடத்தியிருப்பதாக பாதிக்கப்பட்டோர் சார்பாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறித்தே விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

## மனித மாமிசம்

### உண்ணாதோருக்கு மரண தண்டனை

ஆப்பிரிக்கா

ஆப்பிரிக்க அமைதி மற்றும் பாதுகாப்பு அமைப்பு வெளியிட்ட ஓர் அறிக்கையில் பிரதமரின் பாதுகாப்பு படையை சேர்ந்தவர்கள் Nuer இன மக்களை கொடுமைப்படுத்தியது பற்றி தெரிவிக்கப்-பட்டுள்ளது.

அதன்படி போரின் போது இறந்து போனவர்களின் மாமிசத்தை சாப்பிட ரேநச இன மக்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர் என்றும் மறுத்தவர்கள் கொலை செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. அத்துடன் ஏராளமான கற்பழிப்பு சம்பவங்களும் நடைபெற்றுள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் இரு தரப்பினரும் போர் குற்றங்களில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒசாமா பின்லேடன்

### குறித்து வெளியாகிய மர்மங்கள்



அல்கொய்தா இயக்க தலைவன் ஒசாமா பின்லேடன் கொலை பற்றிய ரகசியங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

கடந்த 2011 மே 2ம் திகதி பாகிஸ்தானிலுள்ள அபோதாபாத்தில் பதுங்கி இருந்த ஒசாமா பின்லேடனை, அமெரிக்க படையினர் தங்களின் அதிரடி தாக்குதல் மூலம் கொன்றனர். பாகிஸ்தானுக்கே தெரியாமல் அமெரிக்கா நாட்டிலேயே நடந்த இத்தாக்குதலுக்கு சட்ட வழிமுறைகளை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் வழக்கறிஞர்கள், ஸ்டீவன் பிரஸ்டன், மேரி டிரோசா, ஜெஹ் ஜான்சன், ஜேம்ஸ் கிராபோர்ட் ஆகிய 4 பேர் வகுத்து தந்துள்ளனர்.

தாக்குதல் வெளியே கசிந்து விடக்கூடாது என்பதற்காக அமெரிக்க அட்டர்னி ஜெனரலிடம் கூட இது தொடர்பாக கலந்தாலோசிக்கப்-படவில்லையாம். தாக்குதலுக்கு முதல் நாள் தான் அவருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே போல் பாகிஸ்தானுடன் போர் தொடுக்காத நிலையில் அவர்கள் நாட்டில் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்துவது பற்றியும் விவாதிக்கப்பட்டது.

பாகிஸ்தானிடம் அனுமதி வேண்டினால் அது சமரசம் செய்வது போலாகும் எனவும், பின்லேடன் தப்பிக்க கூடும் எனவும் வெள்ளை மாளிகை கருதியது. இறுதியில் இத்தாக்குதலை விதிவிலக்காக எடுத்துக்கொள்ளலாம் என வழக்கறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த வழக்கறிஞர்கள் தான், பின்லேடனின் உடலை பெற்றுக்கொள்ள சவுதி அரேபியா மறுத்தால், பின்லேடனின் உடலை கடலில் புதைக்கும் வழியையும் கொடுத்துள்ளனர். உடலை பெற சவுதி மறுத்ததையடுத்த உடல் கடலில் புதைக்கப்பட்டது. தற்போது இந்த தகவல்களை 'தி நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## நாடு கடந்து வாழ்வோர் தாக்கப்பட்டனர்

ஈராக்

பாக்தாத் விமான நிலையத்துக்கு அருகே உள்ள லிபர்ட்டி முகாம் என்று அழைக்கப்படும் இடம் தாக்குதலுக்கு உள்ளானதில், தமது உறுப்பினர்கள் 23 பேரும், 3 காவல்துறை அதிகாரிகளும் கொல்லப்பட்டதாக இரானிய மக்கள் முஜாஹிதீன் அமைப்பு கூறியுள்ளது.

1979ஆம் ஆண்டின் இரானிய புரட்சியை அடுத்து இந்த அமைப்பினர் நாடு கடந்து வாழ்கிறார்கள். 2013 இலும் இந்த லிபர்ட்டி முகாம் இரு தடவைகள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தற்போதைய தாக்குதலுக்கு முக்தார் இராணுவம் என்னும் ஈராக்கிய சியா ஆயுதக்குழு உரிமை கோரியுள்ளது.

## போலந்து அரசிடமே முடிவு

போலந்து

1978ஆம் ஆண்டில் ஒரு 13 வயது சிறுமியுடன் பாலியல் உறவு கொண்ட குற்றத்திற்காக தண்டனை பெறவிருந்த ரோமன் போலான்ஸ்கி, தண்டை அறிவிக்கப்பட சில மணி நேரத்தில் அமெரிக்காவை விட்டு வெளியேறினர்.

பிரான்ஸ் மற்றும் போலந்து ஆகிய இரு நாட்டு குடியுரிமை பெற்றுள்ள இவர், ஒரு திரைப்படம் எடுப்பதற்காக போலாந்து சென்றிருந்தார்.

அவர் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப் படுவாரா என்ற இறுதி முடிவை போலாந்து நீதித்துறை அமைச்சர் எடுப்பார் என தெரியவருகிறது.

இதற்கிடையில் போலான்ஸ்கி அமெரிக்காவில் நீதியை எதிர்கொள்ள வேண்டும் என்று போலாந்தில் புதிதாக பதவியேற்றுள்ள கன்ஸர்வேட்டிவ் அரசாங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு MALAIMURASU

# தாயகச் செய்திகள்

## தாபரிப்புப் பணம் பெறுவதற்காக

### தந்தையை மாற்றி பொய் வழக்கு தொடர்ந்த பெண்

தாபரிப்பு பணத்தினை பெற்றுக் கொள்வதற்காக தனக்கு பிறந்த குழந்தைக்கு வேறொரு இளைஞன் ஒருவனை தந்தையாக்க பெண்ணொருவர் முயன்றுள்ளார்.

தனக்குப் பிறந்த குழந்தைக்கு அவ்வூரைச் சேர்ந்த இளைஞரொருவன் தான் காரணம் என்றும், குழந்தையை வளர்ப்பதற்கு தாபரிப்பு பணம் வழங்கவேண்டுமெனக் கோரி, பெண் ஒருவர் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

ஆனால் அக்குழந்தை அவ்விளைஞனுக்கு பிறந்தது அல்ல என்று மரபணு பரிசோதனையின் ஊடாக அம்பலமாகி-யுள்ளது.

இந்நிலையில், அப்பெண் பொய்யான குற்றச்சாட்டை மேற்கொண்டமை தெரிய வந்தமையால் குறித்த இளைஞனுக்கு நட்டஈடு செலுத்தவேண்டுமெனவும், இனி இவ்வாறானதொரு பொய்யான வழக்கு தொடரப்படுமிடத்து கைது செய்யப்படுவார் எனவும் நீதிமன்ற நீதிபதியால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## 25 வருடங்கள் கடந்ததையிட்டு கண்டனப் போராட்டம்

கடந்த 25 வருடங்களுக்கு முன்னர் முஸ்லிம்கள் வெளியேற்றப்-பட்டதை நினைவுகூறும் வகையில் யாழ். முஸ்லிம் மக்கள் நேற்று வெள்ளிக்கிழமை கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 25 வருடங்களுக்கு முன்னர் முஸ்லிம் மக்கள் சோதனையிடப்-பட்ட யாழ். ஜந்துசந்தி பகுதி-யிலேயே இன்றைய கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றிருந்தது.

இதன்போது, 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் 30ஆம் திகதி எமது வாழ்வின் கரி நாள். அந்நாளை எம்மால் மறக்கவோ, எம்மை வெளியேற்றியவர்களை மன்னிக்-கவோ முடியாது என்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்-தனர்.

மேலும், யாழ். முஸ்லிம்களுக்கு நீதியை பெற்றுத் தரும் வகையில், முஸ்லிம்களுக்காக ஆணைக்குழு அமைக்க கௌரவ அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உதவி செய்ய வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அத்துடன் அவர்களது மீள்குடி-யேற்றம் தொடர்பிலும் இந்த போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது.





## அடுத்த வருடத்தில் கிளிநொச்சியில்

தேசிய விளையாட்டுப் போட்டிகளை அடுத்த வருடம் கிளிநொச்சியில் நடத்த தயாராகி வருவதாக விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் தமிழ் மக்களுடன் இருக்கும் பிணைப்புகளை மேலும் வலுப்படுத்த எண்ணியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கிரிக்கெட், கால்பந்தாட்டம், மெய்வல்லுநர் விளையாட்டுக்களில் திறமையான விளையாட்டு வீரர்கள் யாழ்ப்பாணத்தில் உருவாகி வருவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## கைவைப்பினால் கைவிலங்கு



நெல்லியடி பிரதான வீதியில் அமைந்துள்ள நகைக்கடையின் கூரையைக் கடந்த 27ஆம் திகதி அதிகாலை பிரித்து நுழைந்து அக்கடையில் கொள்ளை-யிட்டதாக கூறப்படும் சந்தேகநபர், கந்தானைப் பகுதியில் வைத்து, கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக நெல்லியடிப் காவல்துறையினர் தெரிவித்தனர்.

நகைக்கடையிலிருந்து திருடப்பட்ட 10 பவுண் நகையும் சந்தேகநபரிடமிருந்து மீட்கப்-பட்டுள்ளது. நகைக்கடையின் கூரையைப் பிரித்து உள்நுழைந்து அங்கு சேமித்து வைக்கப்பட்டிருந்த 1 மில்லியன் ரூபாய் பெறுமதியான 23 பவுண் கொள்ளையடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடையில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கமெராவின் உதவியுடனேயே சந்தேக நபர் கைதாகினார் எனவும் தெரிய வருகின்றது.

## உணவகம் ஒன்றில் பலத்த சோதனை

யாழ் நகரில் உள்ள குறித்த உணவகத்தில் கொத்து ரொட்டி பாசல் ஒன்றை வாங்கிய வாடிக்கையாளர் ஒருவர், அதனுள் தீக்குச்சி மற்றும் இறைச்சியில் அகற்றப்படாத ரோமம் ஆகியன உள்ளமை கண்டு குறித்த உணவகத்திற்குச் சென்று கேட்ட நிலையில் அவர்கள் அதனை மூடி மறைக்க முற்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, குறித்த வாடிக்கையாளர் பொதுச்சுகாதார பரிசோதகரிடம் சென்று முறைப்பாடு கொடுத்துள்ளார். உடன் முறையீடு செய்யப்பட்ட உணவகம் சோதனை செய்யப்பட்டதுடன் அதன் மீது வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## எல்லைப்புறங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்படுகின்றன!!

யாழ்ப்பாணத்தில் உள்ள அதியுயர் பாதுகாப்பு வலயப்பகுதி எல்லைப்புறங்களில் படையினர் தமது நிலைகளை பலப்படுத்தி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன்காரணமாக மக்கள் மத்தியில் சந்தேக சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்-பட்டுள்ளது. முன்னதாக இந்த பகுதிகளில் காணிகளை படையினர் விடுவித்த பின்னர் மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர். எனினும் எல்லைப்புற அரண்கள் பலப்படுத்தப்படுவதால் அவர்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

தமக்கு சாதகமாக ஜெனீவா யோசனை நிறைவேற்றப்பட்டுள்ள நிலையிலேயே படையினர், இந்த நடவடிக்கையை மேற்கொள்வதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணத்தால் தமக்கு மீள அங்கு வசிக்க முடியாத நிலை ஏற்பட்டு விடுமோ என்கின்ற அச்சம் எழுவதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். நல்லாட்சியிலும் அம்மக்கள் பயந்து வவாழவேண்டிய சூழல் உருவாகியுள்ளமை கருத்தில் கொள்ளப்படவேண்டியது.



## தொடர்ந்தும் அபகரிக்கப்படும் மக்களின் நிலங்கள்

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட தனியாருக்கு சொந்தமான காணியை பிரிகேடியர் வனசிங்க தலைமையிலான 682 ஆவது காலால் படைப்பிரிவு கையகப்படுத்தியுள்ளதாக காணியை இழந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கில் புதுக்குடியிருப்பு - புதுமாத்தளன் வீதியையும், கிழக்கில் வைத்தியசாலைக்கு முன்னாலுள்ள வீதியையும், தெற்கு, மேற்கு ஆகிய பகுதிகளில் வைத்தியசாலைக்கு முன்னாள் உள்ள வீதிகளையும் கையகப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




இந்த காணியில் ஏழே முக்கால் ஏக்கர் காணி மக்களுடையது எனவும் ஏனைய 10 ஏக்கர் காணி அரசாங்க காணி எனவும் எனினும் குறித்த காணியில் மக்கள் 30 வருட காலமாக வாழ்ந்து வந்ததாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

பிரதேசசெயலாளரிடமிருந்து காணி உறுதிகளை பெற்றுக்கொண்ட இராணுவத்தினர் குறித்த காணிகளை கையகப்படுத்தியுள்ளதாகவும், குறித்த வளங்களையும் இராணுவத்தினரே பெற்று வருவதாகவும் காணி உரிமையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

## போர்க்கைதிகளும் இராணுவத்தினரும் ஒன்றா??

### சி.வி.விக்னேஸ்வரன்

அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு அளித்து விடுவிக்க வேண்டுமென்று கூறும்போது இராணுவத்தினரையும் விடுவிக்க வேண்டுமென்று கேட்பது நகைப்பிற்குரிய விடயம் என வடமாகாண முதலமைச்சர் சீ. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு கடந்த வியாழனன்று விஜயம்செய்த அமெரிக்காவின் பெண்கள் விவகார விசேட பிரதிநிதி மற்றும் கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களை சந்தித்த முதலமைச்சர், தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க முடியாது என்ற சிறிலங்கா அரசின் அறிவிப்பு குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையின் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கு உதவி செய்தற்கு அமெரிக்கா தயாராக இருப்பதாகவும், ஆயினும் அந்த உதவிகள் இலங்கை அரசாங்கத்தின் வழியாகவே செய்ய முடியும் யாழ்ப்பாணம் வந்திருந்த அமெரிக்க குழுவினர் தெரிவித்ததாக யாழ் ஆயர் ஜஸ்டின் பேணாட் ஞானப்பிரகாசம் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசு - என் பெண்ணே

நீ பேசாத... இரவொன்றில் நிலவு
எறித்துக் கிடக்கிறது...
சுவையில்லை - நிலவில்
குளிர்மையின்றிக் - குன்றில்
எறித்துக் கிடக்கிறது...
நீ பேசாத அவ்விரவின் நிலவு...

காதல்
பூத்துக் கிடந்த போதென்
எண்ணமெங்கும் - இசை
பாடிய நிலவா? அது...
நீரில் தெறிக்க - இரத்தினச் சொரியலாய்
என் கால் வரை தேடிவந்த அந்நிலவே
இன்று...
சுவையின்றிக் கிடக்கிறது...
எம் குன்றின் மீது

அதரம் திறக்கத்
தெறிக்கும் வார்த்தைகள் - பொங்கிப்
பிரவாகமாய்ப் பேசிப்... பேசிப்...
பேசு பொருள் மறந்து...
பெண்ணே...
உன் மோகனச்
சிரிப்பழகில் - விறைத்துப்
போய்விடும் என்
விழிகள்...
இன்று நீ
பேசா இரவில் - நிலவு
பூத்துக் கிடந்தும் - இமை
மூடிய விழிகளிற்
படர்கிறதே கருமை...
பேசு என் பெண்ணே...

உன் சரணடைதல் பற்றிப் பேசு...

நத்திக் கடல் தாண்டி - நீ
நடந்த அக்கணத்தைப் - பேசு

தயவு செய்து
பேசு... என் பெண்ணே

ஆடையின்றிப் பிணமாய்
அரையில் ஒரு சூடு - இடது
மார்பில் மறு சூடாய் - கைகள்
பிணித்திருக்கும் கச்சை கூறுதடி - உன்
ஆவி கரைந்த கதை...

சேற்றில் முக்கியுன் - மீது
முயங்கியோரெல்லாம் - பின்
ஆற்றைக் கடக்கவும் - வெண்
ஆடை போர்த்தவும் கண்டோம்
காணொலியாய்...

நாட்களின் முடிவில்
அம்மணமாய் - என்
பெண்ணே நீ
முகஞ்சிதைந்து மரணமுற்றதைப் - பற்றிப்
பேசு...

இந்த
பாழாய்ப் போன நிலவு
மட்டும் என்ன... நினைப்போல்ப்
பேசா மடந்தையாய் - கிடக்குதிங்கு

உன் உடலைப்
புசித்த ஒலிகள் - இன்னும்
ஓங்கி வளர்ந்த எங்கள்
மயானக் காட்டில்...
ஊளையிடுகின்றன...

உன் பேசா மொழியும்
புகழுடலும் - புதைந்த மண்ணில் எம்
மறவர் புதைந்தனர் - எனினும்
எம்மனம் விட்டகலா
ஒளியாகி ஒளிரும் - உங்கள் வாழ்வும்
வீழ்வும்...

எம்மிடமும்
எஞ்சிக் கிடக்கிறது...
எறித்த நிலவுகளும்
ஒலியில்லா - மௌனங்களும்
என்று மட்டும் எண்ணல் வேண்டாம்

கனல் நெஞ்சும்
குறி நோக்கி நகரும் வலுவுள்ள பாதங்களும்...

ஊமைகள் பேசும் நாளில் உலகில்
ஓர் தேசம் உடைந்து போகலாம்...
யார் கண்டார்.

மாயன்

# கவலையே!

பத்துப் பெட்டித் தரையதன்
பக்கமாயோர் வரவையாம்,
ஒத்த வரவை யோரமாய்
உண்ணிப் போறை நாவலாம்,
கொத்துக் கொத்தாய்ப் பழுக்குமாம்,
கூறொணாத சுவையதாம்,
எத்தும் கச்சான் சொரித்திட
எழுந்து காலை பொறுக்கலாம்!

கண்டல் காட்டுத் திடல் வயல்
கண்ட நாவல் - புளி - விளா
உண்ட காலம் போனதாம்,
ஓடும் குல்லா சவளினால்!
நண்டு - மட்டி - கவாட்டியும்,
நல்ல கம்பு - கொள்ளியும்
கொண்டு வந்த நாட்களைக்
கூறக்கூறக் கவலையே!

தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு - கிண்ணியா)

# விரைந்தெடுக்கும் விசாரணைகள் நீதியே வேண்டும்!

சேனையூரான்
மூதூர் கிழக்கு

குடாநாட்டில்
கூடாவொழுக்கம்
கொடி கட்டி பறப்பது
கூடவே கூடாது:

அடாவடிகள்
அத்துமீறும் பாலியல் வன்புணர்வுகள்
நடமாடி வருவது
நாட்டுக்கு கூடாது:

தமிழர் பண்பாடு
தலை கீழாக மாறி
அலை மோதுவது
அழகாகாது :

போதைவஸ்து பழக்கங்கள் .
பொல்லாப்பு குரோதங்கள்
நல்லாட்சிப் பிரதேசத்தில்
நடக்கக் கூடாது :

இழுத்தடிக்கப் படும்நீதி விசாரணைகள்
நிறுத்தப்பட்டு: விரைந்து
எடுக்கும் நீதி விசாரணைகள்
தொடுக்கப்பட்டு
குற்ற வாளிகளுக்கு உடனே
கொடுக்கப்பட வேண்டும்
கொடூரமான தண்டனை :



# கவி முரசு

# ஆவன செய்ய வேண்டும்

கலாபூஷணம் சிவஸ்ரீ அ. அரசரெத்தினம்

ஆடு கோழி பலியிடும்
அசுரப் பூசையினை
அவசியமாய் தடை செய்ய
அரசு ஆவன செய்ய வேண்டும்!

மிருகவதைத் தடைச்சட்டம்
மிகவிரைவில் வர வேண்டும்
கருக்கலைப்புச் செய்வோரும்
தண்டிக்கப்பட வேண்டும்!

பருப்பு கடலைக்கும்
குறைக்கப்பட வேண்டும் விலை
துருப்பிடித்த ஊழல்களை
துடைத்தெறிந்தாக வேண்டும்!

அரசு விலை குறைத்த
அனைத்து பொருளுக்கும்
கடைகளிலே விலைவிபரம்
காட்சிப் படுத்த வேண்டும்!

நல்லாட்சி கோலோச்சுதற்கு
எல்லோரும் உதவவேண்டும்
எல்லோரும் இந்தநாட்டு
பிரசைகளாய் வாழ வேண்டும்!

# புலராத பொழுதுகள்

- சேனையூர் இரத்தினா
நூல் : பொன்னாவரை

தினம் விடியலுக்காய்
ஏங்கும்
இதயங்கள் தான் எத்தனை
வயது வந்தும்
வாழ்வு கிடைக்காதோர்
உயர் கல்வி கற்றும்
உத்தியோகத்திற்காய்
தினம் ஏங்குவோர்
உறவுகள் பல இருந்தும்
தனிமையை வாழ்வாக்கியோர்
அரசுதீர்வுகள் இன்றி
தினம் பேச்சிலே
நாட்களாகத் தீர்த்தவர்கள்
ஆசை இருந்தும்
அன்பினைப் பெறாது
ஆண்டுகள் பலவற்றைத் தொலைத்தவர்கள்
பிள்ளைகள் இருந்தும் ஏதிலியாய்
இறுதி நாளை எதிர்ப்போர்
காத தூரத்தில்
சொந்த ஊர் இருந்தும்
சேர முடியாது
கனவுகளாகச் சுமந்தவர்கள்
உறவுகள் பக்கத்திலிருந்தும்
உணர்வுகளோடு எதிர்பார்ப்பே
வாழ்வாக கழித்திருப்போர்
இன்று விடியும்
நாளை புலரும் என்று
நாட்கள் நகர்ந்ததேயன்றி
ஏமாற்றமும் எதிர்பார்ப்புக்களுமே
எஞ்சியவையாயிற்று
இவர்கள் வாழ்வில் - இருந்து
விடியலுக்காய் விழித்திருக்கின்றார்கள்
தினம் ஏக்கங்களைச்
சுமந்த இதயங்களோடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிலங்காவின் எதிர்கட்சித் தலைவரே சம்பந்தன்

# தமிழர் தலைமைப் பதவி வெற்றிடம்

## கைதிகள் விடயத்தில் ரணிலின் சூழ்ச்சிக்கு பலியானார் சம்பந்தன்!!!

பகலவன் –

இரண்டாவது முறை தமிழரைப் பிரித்தாள்வதில் ரணில் வெற்றி பெற்றுவிட்டார். அதேபோல மீண்டுமொரு தடவை தான் சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவரே-யொழிய தமிழினத்தின் தலைவரல்ல என்பதை சம்பந்தன் ஐயா நிரூபித்துவிட்டார்.

ரணில் புலிகளிடமிருந்து கருணாவைப் பிரிப்பதில் எவ்வாறு வெற்றி கண்டார் என்பதை கருணாவின் நண்பர் அலிஸாஹிர் மௌலானா அண்மையில் தெளிவாக எடுத்துரைத்திருந்தார். சமாதான காலத்தில் (2005) நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது கருணா பிரித்தது தமது தலைவரின் சாமர்த்தியம் என யாழ்.நூலக எரிப்பு மூலம் 'புகழ்' பெற்ற காமினிதிஸாநாயக்காவின் மகன் நவீன் சொல்லப் போய் அதனால் நடந்த விளைவுகள் அனைவரும் அறிந்ததே. இப்போது தமிழ் அரசியல் கைதிகளைப் பிளவுபடுத்த சம்பந்தன் ஐயாவையே பயன்படுத்திக் கொண்டார் ரணில். சாகும் வரை உண்ணாவிரதமிருந்த தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பாக அரசுத்தரப்புடன் காணப்பட்ட உடன்பாடு பற்றி சம்பந்தன் ஐயா எடுத்துரைத்தார்.

'பாரதூரமான சம்பவங்களில் ஈடுபட்டோர் தவிர ஏனையோரின் விடயங்கள் தொடர்பாக இருதரப்புக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது' எனக் குறிப்பிட்டார். கைதிகள் விடயத்தில் சகலருமே உண்ணாவிரதத்தில் பங்குபற்றிருந்தனர். சகல தமிழ் அரசியல் கைதிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை கூட்டமைப்பு தலைமையால் கௌரவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

1977 பொதுத் தேர்தலில் போட்டியிட்ட ஐ.தே.க. தலைவர், ஜே.ஆர். தான் ஆட்சிக்கு வந்தால் தடுப்பிலிருக்கும் சகல ஜே.வி.வி. உறுப்பினர்களும் விடுவிக்கப்படுவர் என வாக்குறுதியளித்தார். இந்த வாக்குறுதியும் பாராளுமன்றில் ஐந்தில் நான்கு பெரும்பான்மையுடன் ஜே.ஆர். ஆட்சியமைக்க வழிகோலியது. தனது வாக்குறுதியை ஜே.ஆர். நிறைவேற்றினார். அடுத்து வந்த கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் ஜே.வி.பியினர் முதன்முதலாக மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். அதே போல முஸ்லிம் காங்கிரஸ் அரசியலிலிருந்து வெளியேறிய போது ஆட்சியைத் தக்க வைக்க ஜே.வி.பி.யினரை சந்திரிக்கா நாடினார். அச்சந்தர்ப்பத்தில் ஒரு பகிரங்கப் படுத்தப்படாத உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. நன்னடத்தை அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தப் போவதாக அறிவித்த ஜே.வி.பி. தனது இரண்டாவது கிளரச்சிக்காலத்தில் (1987-1989) கைதான சகல ஜே.வி.பி. உறுப்பினர்களையும் விடுவிக்க சந்திரிக்காவுடன் இணக்கத்தை ஏற்படுத்தியது. அன்று சிறையிலிருந்த ஜே.வி.பியினர் சுவரொட்டி ஒட்டியதாலோ, போராடியவர்களுக்கு சாப்பாடு கொடுத்ததாலோ, அவர்களுக்கு புகலிடம் வழங்கியதாலோ கைதானவர்-களல்ல. அனைவரும் பாரதூரமான சம்பவங்களிலீடுபட்டவர்கள் தான். சந்திரிக்காவின் கணவரும், ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தலைவருமான விஜயகுமாரதுங்காவின் படுகொலைச் சம்பவமும் அதில் ஒன்று. ஆட்சியைத் தக்க வைக்க தனது கணவரைக் கொன்றவர்களையே ஏதோ ஒரு சூத்திரத்திரமோ மந்திரமோ பயன்படுத்தி விடுதலை செய்தார் சந்திரிக்கா. இதில் பொது மன்னிப்பு என்ற சொல்லே அடிபடவில்லை. சட்டம் சிங்களம் என்றால் எப்படியும் வளைந்து கொடுக்கும் என்பது இதிலிருந்து புலனாகிறது. விடுதலை-யானோரில் 17 வருட சிறைத்தண்டனை பெற்ற ரோஹண புஸ்பகுமாரவும் ஒருவர் என உண்ணாவிரதத்தின் போது கைதிகளைச் சந்தித்த அரசியல்வாதியான ஒரு சட்டத்தரணி கூறினார். ஜே.வி.பி.யினரின் ராஜதந்திரமே அவர்களின் உறுப்பினர்களின் விடுதலை. இது ஏன் சம்பந்தன் ஐயாவினால் முடியாமற் போனது?

எப்போதுமே சிங்களத்தரப்பின் பக்கம் நின்று சிந்திப்பது தான் தமிழரின் சாபக்கேடு. ஹெல உறுமய, பொதுபலசேனா எதிர்க்கும், அரசுக்குச் சங்கடம் உண்டாகும் என்று அவர்களுக்கு வரக்கூடிய நெருக்கடி பற்றி இவர்கள் மண்டையைப் போட்டு உடைப்பர். நாங்கள் எதிர்பார்ப்பது எங்கள் தரப்பு சட்டத்தரணிகளாக எமது தலைமைகள் இருக்க வேண்டும் என்பது தான். புலிகளின் காலத்தில் நடந்த பேச்சுவார்த்தைகளின் போது இராணுவம் பழைய நிலைகளுக்குத் திரும்பி மக்களின் மீள்குடியேற்றத்துக்கு வழிவகை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. உடனே 'ஆனந்த சங்கரி அப்படியாயின் புலிகளும் ஆனையிறவைப் படையினரிடம் ஒப்படைக்க வேண்டும். ராணுவம் பழைய நிலைக்குத் திரும்ப வேண்டும் என்றால் இதுவும் நடைபெற வேண்டும்' என்று கூறினார். இது தான் தமிழர் தரப்பின் கோளாறு. இவர்கள் (சம்பந்தனோ, ஆனந்தசங்கரியோ) சிங்களத்தரப்பில் நின்று சிந்திக்கிறார்கள். 'முயற்சி செய்பவனுக்குத் தான் பாதைகள் புலனாகும். சோம்பிக் கிடப்பவனுக்குத் தடைகளே பெரிதாய்த் தோன்றும்' என்று வேலுப்பிள்ளையின் மகன் அடிக்கடி கூறுவதுண்டு.

> ஜே.வி.பியினரின் ராஜதந்திரத்தால் அவர்களது உறுப்பினர்களை இரு தடவைகள் வெளியே கொண்டு வர முடிந்துள்ளது. இது ஏன் சம்பந்தன் ஐயாவின் சாணக்கியத்தால் முடியவில்லை??!! எப்போதுமே சிங்களத் தரப்பின் பக்கம் நின்று சிந்திப்பது தான் தமிழரின் சாபக்கேடா?

'பாரதூரமான சம்பவங்கள் என்ற வகையில் இன்னொரு விடயமும் சுட்டிக்-காட்டப்பட வேண்டியுள்ளது. ஜே.வி.பி.யினருடன் சந்திரிக்கா பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு ஏதுவாக லண்டனிலிருந்து அக்கட்சியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்ஹ நாட்டுக்கு வருகை தந்திருந்தார். இவர் ஏற்கெனவே [illegible] நாட்டிலிருந்து [illegible] உண்மையில் இவர் திரும்பி வந்த போது குடிவரவு- குடியகல்வு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும். அவர் இலண்டன் பிரஜை என்று சாக்குப் போக்குச் சொல்லலாம். ஆனால் ரத்மலான பகுதியில் ஆற்றிய உரை வில்லங்கமானது. 'இந்திய விமானங்கள் எமது வான் பரப்புக்குள் புகுந்து உணவுப் பொட்டலங்களை வீசின. அச்சமயம் ஸ்ரீலங்கா வான்படை அந்நடவடிக்கையைத் தடுக்கவில்லை. அதனாலேயே வான்படை முகாம் மீது தாக்குதல் நடத்தினோம்' என்ற உரை பாரதூரமானது. இதை ஒரு வகையில் ஒப்புதல் வாக்குமூலம் என்று கொள்ளலாம். ஒளி நாடாவை ஆதாரமாக வைத்து வழக்குப் போடக் கூடிய பாரதூரமானது. கொழும்பிலிருந்து தினக்குரல் தலைப்புச் செய்தியாக இவரது பேச்சை வெள்ளியிட்டிருந்தது.

> பாரதூரமான சம்பவங்களில் ஈடுபட்டோர் என்ற சொற்பதத்தின் மூலம் தமிழ் அரசியற் கைதிகளைப் பிளவுபடுத்த சம்பந்தன் ஐயாவை ரணில் நன்றாகவே பயன்படுத்திக் கொண்டார்.

இப்படியெல்லாம் இருக்கையில் 'பாரதூரமான சம்பங்களில் ஈடுபட்டோர்' என்ற சொற்பதத்தின் மூலம் தமிழ் அரசியற் கைதிகளைப் பிளவுபடுத்த சம்பந்தன் ஐயாவை ரணில் நன்றாகவே பயன்படுத்திக் கொண்டார். ரணிலும் சம்பந்தன் ஐயாவும் 1977 தேர்தலில் தான் பாராளுமன்ற அரசியலுக்கு அறிமுகமாயினர். ரணில் தொடர்ந்து எம்.பி.யாக உள்ளார். சம்பந்தன் ஐயா இருதடவை தோல்வி கண்டார். அரசியல் அனுபவம் என்ற வகையில் பார்த்தால் இருவருக்கும் ஒரேயளவினதாக இருக்க வேண்டும். ரணிலை விட இவருக்கு வயதும் கூட. அதே போல ஜே.வி.பி. யினரை விடுவிக்க பேச்சுவார்த்தை நடத்தியோர் இன்னும் இளையவர்கள். ஆனால் தமிழரின் சாபக்கேடு எதையெதைப் பெற்றுக் கொள்ளலாம் என்று சிந்திப்பதைவிட எதுவரை விட்டுக்கொடுக்கலாம் என்று சிந்திப்பது தான்.

வடமாகாண சபை இலங்கையில் நடந்தது இனப்படுகொலையே என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது, அதுபோல இறுதிப் போரில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை வேண்டும் என்று ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றியது. இவ்விடயங்கள் தொடர்பான பிரேரணைகள் ஏகமனதாக நிறைவேறின. ஆனால் இந்த இருவிடயங்களிலும் அரசாங்கத்தின் பக்கம் நின்று வாக்களித்த தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக நடந்து கொண்டது சம்பந்தன் ஐயா- மாவை- சுமந்திரன் தரப்பு. இத்தீர்மானங்களைக் கொண்டு வந்ததற்காக வடக்கு முதல்வர் மீது நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்துள்ளது. இந்த வன்மம் சிங்களத் தரப்பு முதல்வர் மீது கொண்டுள்ளதை விட மோசமானது. ஐரோப்பிய நாடுகளில் வடக்கு முதல்வர் தொடர்பாக சுமந்திரன் கூறும் மோசமான கருத்துக்கள் அவரது சொந்தக் கருத்துகளாகக் கொள்ள முடியாதவை.

குறைந்த பட்சம் சர்வதேச விசாரணையிலிருந்து காப்பாற்றியதற்கு நன்றிக் கடனாகத் தானும், அல்லது சுமந்திரன் - மாவை- சம்பந்தன் ஐயா வெட்டிப் பிடுங்கிவிட்டார்கள் என்று காட்ட சகல அரசியல் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கியிருக்க வேண்டும். ஆனால் அரசியற் கைதிகள் என்று [illegible]. குற்றமிழைத்த-வர்கள் மட்டுமே தடுத்து வைக்கப்பட்டு-ள்ளார்கள் என்பது அரசின் குறிப்பாக நீதியமைச்சரின் நிலைப்பாடு. இப்போது விடுதலையாகும் ஓரிருவரை வைத்து சம்பந்தரின் சாணக்கியம் என்று தமுக்கடிப்பார்கள்.

இலங்கையில் நிலவுவது இரட்டை நீதி. உயர் நீதிமன்றை அவமதிப்பது பாரிய குற்றம். ஆனால் இங்கோ நீதித்துறையே இரண்டாகப் பிளவு பட்டுள்ளது. கணேசரட்ணம் சாந்ததேவன் (கைதி எண் 1424) முருகையா கோமகன் (1425) ஆகியோரின் விடயங்கள் இதற்கு உதாரணம். இவர்கள் இருவரும் வழங்கியதாகக் கூறப்படும் ஒப்புதல் வாக்கு மூலங்களை நிராகரித்து இவற்றின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை வவுனியா நீதிமன்று தள்ளுபடி செய்துள்ளது. இத்தீர்ப்பைக் கௌரவிக்க கொழும்பு மேல் நீதிமன்று தயாராக இல்லை. இருவரது ஒப்புதல் வாக்குமூலங்கள் தொடர்பான விசாரணைகளை அது தனியே நடத்தி வருகிறது. இவ்வழக்கை விசாரிப்பவர்தான் அண்மையில் 300 வருடங்கள் 290 வருடங்கள் என இருவருக்கும் சிறைத்தண்டனை விதித்தவர். அது மட்டுமல்ல இவ்வழக்கிலிருந்து விடுதலையான திருமதி.வசந்தி ரகுபதிசர்மா கடந்த பதினைந்து வருட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டி-ருந்தமைக்கு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் காரணமல்லர் எனவும் தனது தீர்ப்பில் குறிப்பிட்டவர்.

இந்நிலையில் பாரதூரமான விடயங்களைச் செய்தோர், ஏனையோர் என்று தமிழ்க் கைதிகளைப் பிரிக்க சம்பந்தன் ஐயா- சுமந்திரன் கூட்டணி உடன்பட்டுள்ளது. கடந்த பொதுத் தேர்தலில் 'தகுதியானோருக்கு வாக்களியுங்கள்' என்று கூறினார் வடக்கு முதல்வர். இதை ஏற்றுக் கொள்ளாமல் ஒட்டுமொத்தமாக தமிழ்க் கூட்டமைப்புக்கு (பல போராளிகள், பொதுமக்களின் படுகொலைக்குக் காரணமான ஜனா, இராசதுரைத்தினம் உட்பட) வாக்களியுங்கள் என்று முதல்வர் கூறியிருக்க வேண்டும் என்று கருதும் இக்கூட்டணி கைதிகள் விடயத்தில் மட்டும் பயங்கரமான சம்பவங்களில் ஈடுபட்டோர், ஏனையோர் என்று பிரிக்க ஏன் உடன்பட்டது?

ரணில் சிங்கன் தான். பிரித்தாள்வதில் அவருக்கு நிகர் யாருமே இல்லை. ஒவ்வொரு தேர்தலின் போதும் ராமர் அணை கட்டும் கட்டும் போது அணில் உதவியது போல தம்மால் முடிந்த சகல வழிகளின் ஊடாகவும் கூட்டமைப்புக்கு வாக்களி-யுங்கள் என்று கூறிய அரசியற் கைதிகள் தான் பாவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 77

# பெண்ணியம்

(வி.என்.சந்திரகாந்தி)



**பெண்ணியம்** என்ற எண்ணக்கரு தோற்றம் பெறுவதற்கும் வளர்ச்சியடைவதற்கும் ஒரு போராட்டமாக உருவெடுப்பதற்கும் காரணமாக அமைந்தது. ஆண்கள் தமது சுயநலத்திற்காக அவளை ஒரு பகடைக்காயாக கையாண்டதுதான். ஆண்களுக்கு என்று ஒரு தனி உலகம் இருந்து அங்கு யாரோ பெண்களை பலவந்தமாக படைத்துவிடவில்லை. ஆண் என்று தோன்றினானோ. அன்றே பெண்ணும் தோன்றினாள். ஆணிடம் வலிமை இருந்தது. பெண்ணிடம் மென்மை இருந்தது. காந்தத்தின் எதிர் துருவங்கள் ஒன்றை ஒன்று ஈர்ப்பது போல வலிமையும் மென்மையும் இணைந்து உருவாக வேண்டியதே வாழ்க்கை!

ஆரம்பம் முதலே பெண்ணை உள ரீதியில் அல்லாமல் உடல் ரீதியில் அணுகும் சுயநல பாங்கே சமூகத்தில் பரவி காணப்பட்டது. பெண் வீட்டில் முடங்கியிருக்க வேண்டியவள்.... மற்றவர்களுக்கு அடி பணிந்து நடக்க வேண்டியவள்.... சேவகம் செய்வதே அவளது பிறப்புரிமை என்றெல்லாம் அவளுக்கு புகட்டப்பட்டது. அவள் யாரையும் எதற்காகவேனும் எதிர்த்துக்கதைப்பதை சமூகம் அங்கீகரிக்கவில்லை. வீட்டுக்கு வரும் விருந்தினர்கள் முன் தலைகாட்டுவதும் கதைப்பதும் கூட பெரும் குற்றம் என்று கணிக்கப்பட்டது. உத்தியோகம் பார்ப்பதும் பணம் சம்பாதிப்பதும் வெளி வேலைகளை கையாள்வதும் எல்லாமே ஆண்களுக்கு உரித்தான கடமைகள் என்றும் பெண்ணானவள் சமையல் செய்வதற்கும் பாத்திரம் தேய்ப்பதற்கும் ஆடைகளை துவைப்பதற்கும் மட்டும் பொறுப்பானவள் என்றும் உணர்த்தப்பட்டாள்.

பெண்களுக்கு செய்யப்பட்ட துரோகங்களில் மிக மிக கவலையளிப்பது கல்வி மறுக்கப்பட்டது. அவளுக்கு எதற்கு கல்வி? உத்தியோகமா பார்க்க போகிறாள்? அவ்வாறான ஒரு நிலைப்பாடு உறுதியாக இருந்தது. உடை விடயத்திலோ மிகுந்த கெடுபிடி கடைப்பிடிக்கப்பட்டது. கணுக்கால் தெரிய உடை அணியக்கூடாது. என்று ஒரு கண்டிப்பு இருந்ததென்றால் பாருங்களேன். பெண்ணிற்கான பிரதான அடிமைத்தளையாக தாலி சித்தரிக்கபட்டது. ஒரு ஆண் வேண்டுமென்றால் எத்தனை பெண்களுடனும் விவாக பந்தம் வைக்கலாம். ஆனால் தாலிகட்டிய பெண் பிற ஆடவர்களை நிமிர்ந்து பார்ப்பது கதைப்பது பழகுவது எல்லாமே பாரதூரமான குற்ற செயல்கள் என கணிக்கப்பட்டன.

சீர்திருத்தவாதியான ஈ.வே.ரா. பெரியார் பெண்களுக்கு அறிவுறுத்துகையில் இரண்டு மூக்கிய விடயங்களை கூறினார். ஒன்று அவர்களது அடிமைச்சின்னமான தாலியை கழற்றி வீசும்படி வேண்டினார். மற்றது ஒவ்வொரு பெண்ணும் கல்வி கற்று தனது சீவனோபாயத்திற்காகவேனும் பணம் சம்பாதிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். இன்று அவர் எம்மத்தியில் இல்லை. ஆனால் அவருடைய கருத்தின் முக்கியத்துவம் அவதானிக்கப்பட வேண்டியது.

வெள்ளையர்களின் வருகையும் இலவசக் கல்வி முறையும் நன்கு பயன்பட்டது பெண்களுக்கே! பாதிரிமார்களின் தூண்டுதல் காரணமாகவும் பெண்ணியவாதிகளின் அழுத்தம் காரணமாகவும் பெண்கள் கல்வி கற்பதை பெற்றோர்கள் ஏற்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானார்கள். கல்வி கற்ற பெண்கள் தமக்கு சமூகத்தில் சம அந்தஸ்து உண்டு என்பதை உணரத் தொடங்கினார்கள். அதனால் அவர்கள் இரண்டு விடயத்தை வற்புறுத்தினார்கள். ஒன்று தமக்கு அரச அலுவலகங்களில் தொழில்வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென்பது. அடுத்து சீதனம் வழங்கி தம்மை ஒரு ஆணுக்கு அடிமையாக்க கூடாது என்பது.



எந்த ஒரு பெண்ணிய எழுத்தாளரும் சீதனக்கொடுமை பற்றி பேசாமல்... எழுதாமல் இருந்திருக்க நியாயம் இல்லை! சீதன கொடுமை காரணமாக பல ஏழைப்பெண்கள் மணம் முடிக்க இயலாமல் இருக்கும் நிலை இன்றும் கூட நீடிக்கின்றது. எனவே பெண்ணியம் சார்ந்த முக்கிய பேசு பொருளாக அது ஊடகங்களை நிறைப்பதில் ஆச்சரியமில்லை.

ஒரு பெண்ணை கல்வி கற்க விடாமலும் தொழில்புரிய தடைசெய்தும் அநியாயம் செய்த ஆண்கள் அவர்களை மணம்புரிந்து குடும்பம் நடாத்துவதற்கு அவளுடைய பெற்றோரிடம் சீதனம் கேட்டு நிர்ப்பந்திப்பது எப்படி சாதாரணமாகும்! பெண்கள் என்ன பிறக்கும் போதே வீடு, வாசல், நகை நட்டு, பணம் பண்டம், வாகன வசதி ஆகியவற்றை கொண்டா பிறக்கின்றாள்?

இனி விதி வசத்தால் விவாகமாகிவிட்டால் கூட புகுந்த வீட்டில் மாமியார் கொடுமை! அதைக்கொண்டு வா, இதை கொண்டுவா, என்று கட்டாயப்படுத்தும் நிறைய சந்தர்ப்பங்கள் உண்டு. ஆணின் வருவாயுடன் மாமியார் நாத்தனார் என்று அனைவரது செலவுகளையும் ஈடுகட்டி சமாளிக்க வேண்டும். போதாக்குறைக்கு ஆண் குடிகாரனாக இருந்து தொலைந்தால் கேட்கவேண்டியதில்லை. முதலில் அவள் விவாகமாகி வரும்போது சீதனமாக கொண்டுவந்த பணம் தொலையும். பின்னர் அவளது காப்பு, சங்கிலி முதற்கொண்டு தோடுவரைக்கும் பறிமுதல் செய்யப்படும். அப்போதுதான் அவளது மனம் வருந்த தொடங்கும்....

அம்மா அப்பா எவ்வளவு கஷ்டத்தின் மத்தியில் எனக்கு இவற்றை சீதனமாக கொடுத்தார்கள். எனது நல் வாழ்க்கையை முன்னிட்டு அவர்கள் கொடுத்த சொத்துக்கள் கணவனது குடிக்கும் அவரது உறவினர்களின் செலவிற்கும் போகின்றதே என்று அவள் மனம் புழுங்கத்தொடங்கும் நேரம் 'செலவுக்கு பணம் இல்லை... போய் வீட்டை விற்றுவா' என்று கணவன் நிர்ப்பந்திக்க தொடங்குவான். ஒரு பெண் புகுந்த வீட்டில் சந்தோசமாக இருக்க வேண்டும் என்பதே பெற்றோரின் அவா. அதை முறியடிக்கும் படியான எந்த நடவடிக்கையிலும் ஒரு பெண் இறங்குவாளா? எனவே அடி உதை!

பெண்ணியம் என்ற எண்ணக்கரு இன்று செழித்து வளர்ந்து பெரும் விருட்சமாவதற்குரிய அடிப்படை காரணிகளே இவை.!

இன்று பெண்கள் அரச நிறுவனங்களிலும் தனியார் துறைகளிலும். பெரும் எண்ணிக்கையில் பணி புரிகின்றார்கள். கல்வியில் சாதனைகள் புரிந்துகொண்டிருக்கின்றார்கள். உலக நாடுகள் பலவற்றுக்கும் துணிவுடன் சென்று பணிபுரிவதுடன் தமது உறவுகளுக்கும் கைகொடுக்கின்றார்கள். ஜனநாயக நாடுகளில் பாராளுமன்ற அங்கத்துவம் கேட்டு தேர்தல்களில் போட்டியிடுகிறார்கள்!

அண்மையில் எம் நாட்டிலும் பெண்கள் தேர்தல்களில் பல கட்சிகளில் போட்டியிட்டுள்ளார்கள். சிலர் தெரிவாகியும் உள்ளார்கள். சிலருக்கு அமைச்சு பதவிகள் கூட கிட்டியுள்ளன. கணவன் மனைவி இருவருமே மன ஒற்றுமையுடன் தேர்தல் களத்தில் இறங்கி பாராளுமன்றத்துக்கு சோடியாக சென்றுமுள்ளார்கள்.

பெண்கள் 'காவல்துறை' சேவையிலும் இணைந்து பணியாற்றுகின்றார்கள். அனேகமான காவல் நிலையங்களில் மகளிர் காவல் பிரிவு திறமையுடன் இயங்குகின்றது. அவர்கள் பெண்களின் பாதுகாப்பிற்கு பெரும் உத்தரவாதமாக விளங்கு கின்றார்கள். அது மட்டுமன்றி பெண்கள் சட்டத்தரணிகளாகவும், நீதிபதிகளாகவும் கூட முன்னேறியுள்ளார்கள்!

பெண்ணிய கோட்பாடு என்பது சமூகத்தை தலைகீழாக புரட்டிப்போடும் நோக்கிலானதோ, ஆண்களை அவமதிக்கும் நோக்கிலானதோ அல்ல. இறைவனின் படைப்பில் ஆண் பெண் இருபாலாரும் சமமாக நோக்கப்பட வேண்டியவர்கள். ஆண்களுக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து சந்தர்ப்பங்களும் பெண்களுக்கும் கிட்டுவதாக இருக்க வேண்டும் என்பதே வாதம்!

பெண்ணானவள் நாகரீகத்தின் சின்னமாகவும் கலாச்சாரத்தின் மையமாகவும் திகழ்பவள். ஒரு நல்ல சமூகம் என்று கணிக்கப்படுவதற்கு பிரதானமான காரணியாக விளங்குபவள் பெண்ணே! ஒரு பெண்ணின் நடத்தை அவளது கல்வி உயர்ச்சி ஆடை அணிகளை பண்பு தவறாமல் உடுத்தும் முறை எல்லாமே ஒரு சமூகத்திற்கு பெருமை சேர்க்கின்றன. பெண்கள் தமது சமூகத்துக்கு முன்னின்று சேவை புரிகின்றார்கள். அன்னை தெரேசாவை உதாரணத்துக்கு எடுத்துக்கொள்ள முடியும் பெண்களிடம் தான் பணிவும் கனிவும் அன்பும் பெருகி கிடக்கின்றன். ஒரு குடும்ப தலைவி என்ற ஸ்தானத்திலிருந்து ஒரு பெண் செயற்படும் போது அவள் தனது பிள்ளைகளை பண்புள்ளவர்களாக உருவாக்குகின்றாள். அருகிலிருந்து அவர்களது ஒவ்வொரு நடத்தையையும் கண்காணித்து சரி எது? தவறு எது? என்று உடனுக்குடன் உணர்த்துகின்றாள். அவர்களை பிறர் மீது அன்பு செலுத்துபவர்களாக வளர்க்கின்றாள். அடிப்படைக் கல்வியை போதிப்பதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாக அவர்களை ஆளாக்குகின்றான்.

ஒரு பெண்ணானவள் கணவனுக்கு சிறந்த பக்க துணையாக செயற்படுகின்றாள். அவனை குடும்ப பொறுப்புள்ள ஒருவனாக உருவாக்குகின்றாள். தீய பழக்கங்கள் அவனை அண்டாமலும் தீயோருடன் அவன் சேராமலும் கண்காணிக்கின்றாள். குடும்பத்திற்காக சேமிக்கும் பழக்கத்தை அவனுக்கு சொல்லிக் கொடுக்கின்றாள். அவனது நன் நடத்தை காரணமாக சமூகத்தில் அவனுக்கு உயர்ந்த ஸ்தானம் கிடைப்பதற்கு வழி வகுக்கின்றாள்.

பெண்களிடமே விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை அதிகம் காணப்படுகின்றது. அவளிடம் சிறந்த ஆளுமை இருப்பது இந்நாட்களில் நன்கு வெளிப்படுகின்றது. அவளிடம் மழுங்கடிக்கப்பட்டிருந்த போர்க்குணமும் நினைத்ததை செய்து முடிக்கும் மனோவலிமையும் மேலோங்கிவிட்டது. அவளை தமது சுகபோகத்துக்காக உடல் ரீதியில் அணுகும் ஆண்கள் அனைவரும் அதனை அவசியம் சந்திக்கவேண்டிய காலம் நெருங்கிவிட்டது !

# பேயாகிய தன் இரண்டாவது அண்ணா!!




திருகோணமலையில் 4ம் குறுக்குத் தெருவில் நிகழ்ந்த ஓர் உண்மைச் சம்பவம்.....

அக்குடும்பத்தில் நான்கு பிள்ளைகளும் அம்மா, அப்பாவும் இருந்தனர். அதில் மூவர் ஆண்கள் ஒரே ஒரு செல்லப் பெண் பிள்ளை. அவள் பத்தாம் ஆண்டில் கல்வி கற்கின்றாள். இரண்டாமவன் தன் தங்கை பயந்த சுபாவம் கொண்டவள் என்பதற்காக அடிக்கடி அவளை பயமுறுத்தி அழ வைப்பவன். அவளுக்கோ தொட்டதற்கெல்லாம் பயம். அவர்கள் வீட்டில் ஓர் பூனைக்குட்டி வளர்கிறது. அதுவும் இவர்கள் போலவே செல்லப் பிள்ளை இல்லை செல்லப் பூனை....

அன்று தந்தை இரவு நேர வேலைக்குச் சென்றிருந்தார். மற்றவர்கள் அனைவரும் அன்று மாயா படம் பார்த்தனர். அவளோ தாய்க்கும் மூத்த அண்ணாவிற்கும் நடுவில் அமர்ந்து ஒளிந்த வண்ணம் பார்த்துக் கொண்டிருந்தாள். படம் சரியாக இரவு பதினொரு மணிக்குத் தான் முடிந்தது. அதுவரை ஒழுங்காக இருந்த அவள் படம் முடிந்த பின் தன் தாயுடன் படுக்கட்டுமா என கெஞ்சினாள். ஆனால் தாயோ இல்லை நீ பழக வேண்டும். நாங்கள் இவ்வளவு பேர் இருக்கின்றோம் பிறகு ஏன் பயம் கெதியா போய் படு என திட்டி அனுப்பி வைத்தாள். இதைக் கவனித்து கவனியாதவன் போல் இரண்டாமவன் மெல்ல எழுந்து தன் அறைக்குச் சென்றான். இவளுக்கோ அழுகை கண்ணை முட்டியது. தன்னை சரி செய்தவளாக தன் அறைக்குச் சென்றாள். சென்றவளுக்கு நித்திரை என்பது பத்து கட்டை தூரம் தள்ளி நின்றது.

தனது இதயத் துடிப்பும் மணிக்கூட்டின் டிக் டிக் சத்தமும் ஏதேதோ ஞாபகங்களை மனக்கண் முன்னே வரவழைத்தன. தனது போர்வையை தலை மூடி போர்த்திக் கொண்டு கண்களை இறுக்கிக் கொண்டாள். சற்று நேரத்தில்......

அவளருகில் யாரோ வந்து அமர்வதை உணர்ந்தாள். பயந்த குரலில் யாரு? என கேட்டாள் அவள். பதில் ஏதுமில்லை. மெல்ல இரு கைகள் அவள் கழுத்தருகில் வந்தன..... கத்தினாள். அவள் கத்தல் அவளுக்கே கேட்கவில்லை.

தொண்டை காய்ந்து தண்ணீர் தேடியது. கண்கள் இருட்டிப் போனது. மீண்டும் யாரு என கேட்டாள். பதிலில்லை. நிமிடங்கள் மணித்தியாலங்களாகிப் போயின. அந் நள்ளிரவு நேரத்தில் எங்கிருந்து மாடு வந்ததோ தெரியவில்லை. மாடு பயங்கலந்த குரலில் அலறியது அவள் காதுக்குள் கேட்டது. மாடு இவ்வாறு கத்துவது கூடாது என அம்மா அடிக்கடி உரைப்பது நினைவிற்கு வர. கண்கள் அவளை மீறி கண்ணீரை தாரை தாரையாக இரைத்தது.

போர்வையினூடே வெளியில் உற்று நோக்கினாள். நிழலாடியது. போடப்பட்டிருந்த விசிறி நின்றது. மீண்டும் இயங்கியது. அவளுக்கோ போர்வையை விலக்கிப் பார்க்கவும் பயமாக இருந்தது. கண்களை மூடவும் பயமாக இருந்தது. சற்று நேரத்தில் கீதா என மிகவும் அசிங்கமான குரல் கேட்டது. வியர்த்துக் கொட்டியது இவளுக்கு. சிந்தனை செயற்பட மறுத்தது. கை மற்றும் கால்கள் அசைய மறுத்தன. மீண்டும் அவள் கட்டிலில் அது ஏறி மெல்ல ஊர்ந்து வந்தது. பலமாக காற்றடித்தது... இவள் அறை யன்னல்கள் அடித்தன. அறை முழுவதும் திடீரென இருட்டு சூழ்ந்தது.

இருட்டில் பயந்தவள் போர்வையை சட்டென விலத்தினாள். தன் மீது ஓர் அசிங்கமான உருவம். வீணி வடித்தது போல் வாய் முழுதும் இரத்தம் வடிந்தது. கை நகங்கள் பெரிதாய் இருந்தன. தலைமுடி காற்றில் பேய் போல் பறந்தன. தன் முழு சக்தியையும் வரவழைத்தவள் உரக்கக் கத்தினாள். கண்கள் சிவந்தன. எழுந்திருக்க முடியவில்லை. கத்தியவள் மயங்கிப் போனாள்.

சற்று நேரத்தில் கண்கள் விழித்தன. தான் தாயின் மடியில் படுத்திருப்பதையும் தன் மூத்த அண்ணா இரண்டாமவனுக்கு திட்டுவதையும் கண்டாள். அப்போதுதான் வந்தது பேய் அல்ல தன் அண்ணா என்பதை எண்ணி புன்முறுவல் பூத்தாள்.

(தன்யா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம்

விஜய் மில்டனின் இயக்கத்தில்

# "10 எண்றதுக்குள்ள"

விக்ரம், சமந்தா நடிக்கும்



இந்தியாவின் ஒதுக்கப்பட்ட வடகிழக்கு மாநிலத்தில் இன்றும் சாதி கொடுமைகள் நடந்து வருகின்றது. அந்த வகையில் உத்ரகாண்ட் மாநிலத்தில் கீழ் சாதியினர் அத்து மீறி கோவிலுக்குள் நுழைந்ததால் 40 பேரை வெட்டி கொல்கின்றனர். அங்கிருந்து கதை சென்னை நகர்கிறது. விக்ரம் 10 எண்றதுக்குள்ள யார் என்ன சொன்னாலும் செய்து முடிக்கும் திறமைசாலி. அந்த வகையில் பசுபதி கேங்கிற்கு வரவிருக்கும் பொருளை விக்ரம் அந்தரத்தில் காரில் பாய்ந்து அலேக்காக தூக்கி செல்கிறார். அதே நேரத்தில் ஒரு ட்ரைவிங் ஸ்கூல் டீச்சராகவும் விக்ரம் தன் வாழ்க்கையை பயணிக்க. அந்த ட்ரைவிங் ஸ்கூலில் குறும்பு பெண்ணான சமந்தா மாணவியாக சேர்ந்து விக்ரமை டார்ச்சர் செய்கிறார். பசுபதி கொடுக்கும் வேலைகளை எல்லாம் விக்ரம் அசால்டாக முடிக்கிறார். இதற்கிடையில் வட இந்திய கூலிப்படை ஒன்று சமந்தாவை கடத்த சொல்லி பசுபதிக்கு வேலை கொடுக்கிறது. அவர்களும் சமந்தாவை கடத்த, அவர்கள் வரும் வண்டியை கா.துறை பிடிக்கின்றது. அவர்களிடம் இருந்து வண்டியை மீட்டெடுக்க விக்ரம் உதவியை நாடுகிறது பசுபதி குரூப். அவரும் காரில் பறந்து வந்து பல்டி அடித்து காரை மீட்டெடுக்க, அவரையே அந்த காரை வில்லன் குரூப்பிடம் ஒப்படைக்க சொல்கிறார் பசுபதி. ஆனால் வண்டியில் சமந்தா இருப்பது விக்ரமிற்குமே தெரியாது, பின்பு சமந்தா வண்டியில் இருப்பது சில பிரச்சனைகளால் அவருக்கு தெரிய வர, பிறகு பையா ஸ்டைலில் வட இந்தியா வை நோக்கி பயணம் போகிறது. விக்ரம் கடைசி வரை கார் தான் ஒப்படைக்க வேண்டும் என நினைக்க பிறகு தான் தெரிகின்றது சமந்தாவிற்காக தான் அந்த கும்பல் அழைகின்றது என, சமந்தா அவர்களுக்கு எதற்கு வேண்டும்? என்பது ஒரு டுவிஸ்ட்டுடன் தெரியவர, எப்படி அந்த கும்பலிடம் இருந்து சமந்தாவை விக்ரம் காப்பாற்றினார் என்பதை 1000 எண்றதுக்குள்ள கூறியிருக்கிறார் விஜய் மில்டன்.

டுவிஸ்ட் சண்டைக்காட்சிகள் மட்டுமே ஆறுதல்.க்ளாப்ஸ் விக்ரம் எந்த கதைக்கும் நான் ரெடி என்பது போல் இதிலும் கலக்கியுள்ளார் பசுபதியின் பரிதவிப்பு ரசிகர்களை கிச்சுகிச்சு மூட்டுகிறது, கிளைமேக்ஸில் வரும் டுவிஸ்ட், அதன் பின் வரும் காட்சிகள் கை தட்டு வாங்குகின்றது.

இருப்பினும் படத்தின் முதல் பாதி எதை நோக்கி செல்கிறது என்று யாருக்குமே தெரியவில்லை.

மொத்தத்தில் 10 எண்றதுக்குள்ள டைட்டிலுக்கு ஏற்ற விறுவிறுப்பு எங்கே என்று கேட்க தோன்றுகின்றது

## ருத்திரமா தேவி

குணசேகர் இயக்கத்தில் அல்லு அர்ஜ/ன், ராணா அனுஷ்கா, நித்யாமேனன் நடிப்பில் வெளியான

திரைப்படத்தின் திரை விமர்சனம் அடுத்த வார இயத்தில்



## விஜயை இயக்கப்போகும் இயக்குனர்



இளைய தளபதி விஜய் ஒரு படம் நடித்துக் கொண்டிருக்கும் போதே அடுத்த படத்தை பற்றி யோசிக்க கூடியவர். தற்போது இவர் அட்லீ இயக்கத்தில் புதிய படத்தில் நடித்து வருகிறார். இப்படத்திற்கு பிறகு விஜய் நடிக்கப்போகும் அடுத்த படத்தின் இயக்குனர் இவர்தான் என்று நிறைய இயக்குனர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டது. இந்நிலையில் ஒரு புதிய தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. அட்லீ படத்திற்கு பிறகு விஜய்யின் 60வது படத்தை எஸ்.ஜே. சூர்யா தான் இயக்கப்போகிறார் என்ற தகவல் வந்துள்ளது. அதோடு இளையதளபதி 61வது படத்தை மோகன்ராஜா இயக்க இருக்கிறார் என்ற தகவல் பரவலாக பேசப்பட்டு வருகிறது.

## விவேக்கின் மகன் இறைபாதத்தில்

நீண்ட இடைவேளைக்கு பிறகு மீண்டும் சினிமாவில் பிஸியாக நடித்து வருகிறார விவேக். இந்நிலையில் இவரின் மகன் பிரசன்னா (15வயது) சில நாட்களாகவே மூளைக-காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வந்துள்ளார். சமீபத்தில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இச்செய்தி அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தி-யுள்ளது. சினி உலகம் தன் ஆழ்ந்த இரங்கலை விவேக் அவர்களின் குடும்பத்தினக்கு தெரிவித்து கொள்கின்றது

## ரஜினியின் தீவிர ரசிகர்

**கபாலி** படப்பிடிப்புக்காக அண்மையில் மலேசியா சென்றிருந்தார் சூப்பர் ஸ்டார் ரஜினி. கோலாலம்பூர் விமான நிலையத்தில் இறங்கிய போது சிறப்பான முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. அதோடு உலகின் மிக நீளமான கார்களில் ஒன்றான லிமோசின் காரில் பயணித்தார் ரஜினி. ஓய்வில் இருந்த ரஜினி மலேசியாவில் உள்ள மலேகா என்ற மாகாணத்தின் கவர்னரை மரியாதை நிமித்தமாக சந்தித்துள்ளார். ரஜினிக்கு வாழ்த்து தெரிவித்த கவர்னர் ரஜினி மற்றும் தாணுவிற்கு சிறப்பான முறையில் தேனீர் விருந்து அளித்துள்ளார். அதோடு மலேசியா கவர்னரும் ரஜினியின் முத்து படத்தில் இருந்தே தீவிர ரசிகராம்.



## முதன் முதலாக பார்த்த திரைப்படம்

நயன்தாரா திரையரங்கிற்கு சென்று பார்த்த முதல் திரைப்படம் நானும் ரவுடிதானாம், இந்தத் தகவலை படத்தின் இயக்குநர் விக்னேஷ் சிவன் சமீபத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். 50 திரைப் படங்களில் நடித்து தென்னிந்திய சினிமாவில் தனக்கென்று ஒரு இடத்தைப் பிடித்திருக்கும் நயன்தாரா இதுவரை தான் நடித்த எந்தப் படத்தையும் திரையரங்கிற்குச் சென்று பார்த்தது கிடையாதாம்.

தனது திரை வாழ்வில் முதன்முறையாக நயன்தாரா தான் நடித்த நானும் ரவுடிதான் படத்தை திரையரங்கிற்கு சென்று பார்த்து ரசித்திருக்கிறார்.

## ...ட்டில் லிங்கு

பையா என்ற படம் மூலம் தமிழ் சினிமாவில் முக்கிய இயக்குனராக அறியப்பட்டவர் லிங்குசாமி. தற்போது இந்த படத்தின் ரீமேக் மூலம் பாலிவுட்டில் களமிறங்க இருக்கிறாராம். சிங் ஈஸ் பிலிங் படத்தை தயாரித்த டவல் காடாவுடன் லிங்குசாமி இணைய இருப்பதாகவும் கார்த்தி வேடத்தில் வித்யூ ஜம்வால் நடிப்பதாகவும் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

## INFOMATION TECHNOLOGY

### MOBILE

## நகரும் வீடுகள்



நகரும் வீடுகள் தற்போது அதிக அளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. காடு. மலை என எந்த இடத்துக்கும். கால நிலைக்கும் தாக்கு பிடிக்கக்கூடிய முட்டை வடிவிலான அழகிய வீடுகளை வடிவமைத்துள்ளது ஸ்லோவோக்கியா நாட்டைச் சேர்ந்த ஒரு நிறுவனம்.

இதற்கு எக்கோ கேப்சூல்ஸ் என்று பெயரிட்டுள்ளனர். இது ஒரு உலகம் முழுவதும் பெயர்வுத்திறன் கொண்ட வளைந்து கொடுக்கும் தன்மை கொண்டது. அவசர உலகத்திற்கு இது மிகவும் ஏற்றது. மேலும் இது நீரிலும் மிதந்து செல்லும் வண்ணம் தயாரிக்கபட்டுள்ளது.

## அதிவேக ஸ்மார்ட் சார்ஜர்



கைப்பேசிக்கு மிக வேகமாக சார்ஜ் ஏற்றும் ஸ்மார்ட் சார்ஜரை யுஎஸ்பிடிஐ என்கிற நிறுவனம் வடிவமைத்துள்ளது. இந்த சார்ஜர், மிகக் குறைவான நேரத்தில், இரண்டு மடங்கு வேகத்தில் சார்ஜ் ஏறுகிறது.

இந்த சார்ஜரின் முனையில் மின்சக்தியை சேமித்து வைக்கும் வசதி இருப்பதால் இந்த சார்ஜரையே சார்ஜ் ஏற்றி வைத்துக் கொள்ளலாம். இந்த சார்ஜரில் எல்இடி இண்டிகேட்டர் உள்ளது. சார்ஜிங் அளவுக்கேற்ப வண்ணங்கள் ஒளிரும். மிக விரைவில் இது விற்பனைக்கு வர உள்ளது.

## களவாக வயர்லெஸ்ஸை பாவிக்கின்றார்களா??!!

முதலில் நாம் இணைய வசதியை பெற வயர்கள் மூலமாக இணைய வசதியை பெற்றோம். ஆனால் இப்பொழுது அனைவரும் வயர் ப்ரீ அல்லது வயர்லெஸ் மூலமாக வேகமாக இணையத்தில் உலா வருகிறோம். ஆனால் அதிலும் சில சிக்கல்கள் உள்ளது.

நம் வீட்டில் வயர்லெஸ் மோடம் வைத்து நாம் அடுத்த ரூமில் இருந்து கொண்டு லேப்டாப்பில் இணையத்தில் வேலை செய்வோம். அதே நேரத்தில் நம் வீட்டுக்கு வெளியே காரில் இருந்து கொண்டு அல்லது பக்கது வீட்டில் இருந்து கொண்டு யாராவது நம் வயர்லெஸ் மோடம் வழியாக நம் காசில் இணையத்தில் உலாவந்தால் என்ன ஆகும்.

இது போல நடந்தால் கண்டு பிடிக்க நம் கணனி தவிர வேற எந்த கணனிகள் நம் வயர்லெஸ் மோடம் வழியாக இயங்குகிறது என்று தெரிந்து கொள்ள Who is on my Wifi என்ற மென்பொருள் உதவுகிறது.

இந்த மென்பொருளின் உதவியுடன் நம் வயர்லெஸ் மோடத்தை தவறாக பயன்படுத்துபவரை கண்டு பிடிக்




### OTHER

## அப்பிளுடன் இணைந்ததா சம்சுங்




ஏட்டிக்கு போட்டியாக மொபைல் சாதன உற்பத்தியில் ஈடுபட்டுவரும் சம்சுங் மற்றும் அப்பிள் நிறுவனங்கள் என்பன ஒரு நிறுவனத்தின் உற்பத்தியை நகல் செய்தமை காரணமாக நீதிமன்றம் வரை சென்று வந்தமை தெரிந்ததே.

இவ்வாறான நிலையில் அப்பிள் நிறுவனம் வடிவமைக்கும் ஸ்மார்ட் கடிகாரத்திற்கான தொடுதிரையினை வடிவமைத்துக் கொடுக்க சம்சுங் நிறுவனம் சம்மதித்துள்ளது.

## Samsung Galaxy S7

Samsung நிறுவனம் அண்மையில் தனது புதிய ஸ்மார்ட் கைப்பேசிகளான Samsung Galaxy S6 Plus, Samsung Galaxy S6 Edge Plus ஆகியவற்றினை அறிமுகம் செய்திருந்தது.



இந்நிலையில் விரைவில் Samsung Galaxy S7 எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்யவுள்ள அந்நிறுவனம், புதிய முயற்சி ஒன்றினையும் மேற்கொள்ளவுள்ளது.

இதன்படி ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் ஏற்ற வகையில் வெவ்வேறு Processor இனைக் கொண்டதாக அறிமுகம் செய்ய தீர்மானித்துள்ளது.

அதாவது Samsung Exynos 8990 processor, Qualcomm Snapdragon 820 மற்றும் Samsung Exynos 7422 ஆகிய Processor களை உள்ளடக்கியதாக இக்கைப்பேசி வடிவமைக்கப்படவுள்ளது.

## நவீனரக சப்பாத்து




சுயமாகவே லேஸினை (Lace) கட்டிக்கொள்ளக்கூடிய நவீனரக சப்பாத்தினை Nike நிறுவனம் அடுத்த வருடம் அறிமுகம் செய்யவுள்ளது.

கால்களின் அளவுகளுக்கு ஏற்ப தானாகவே இசைந்துகொடுக்கக்கூடியதாக இருக்கும் இந்த சப்பாத்துக்களின் வடிவமைப்பு தொடர்பான அறிவிப்பு 2014 ஆம் ஆண்டின் ஜுலை மாதத்தில் வெளியிடப்பட்டிருந்தது.

## சூரிய சக்தியில் இயங்கும் சீன விமானம்

பல்வேறு நாடுகள் இராட்சத விமானங்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் நிலையில் சீனா சத்தமின்றி தனது சூரிய சக்தியில் இயங்கும் இராட்சத விமானம் ஒன்றினை கடந்த வாரம் பறப்பில் ஈடுபடுத்தி பரீட்சித்துள்ளது.




சூரிய சக்தியில் இயங்கக்கூடியதாக இருக்கும் இவ் விமானத்தில் சூரிய சக்தியை மின் சக்தியை சேமிக்கக்-கூடிய நவீனரக மின்கலமும் காணப்படுகின்றது.

இம் மின்கலமானது ஒருமுறை சார்ஜ் செய்து ஆறு மாதங்கள் வரை பயன்படுத்தக்கூடியதாக காணப்படுகின்றது.

சீன மொழியில் Yuanmeng (கனவு) எனும் பெயரிடப்பட்டுள்ள இவ் விமானத்தின் நீளம் 75 மீற்றர் களாகளாகவும், உயரம் 22 மீற்றர் களாகவும் காணப்படுகின்றதுடன், கொள்வளவானது 18,000 கனமீற்றர்களாகவும் இருக்கின்றது.

இவ்விமானம் 4.5 தொடக்கம் 6.3 மெட்ரிக் தொன் வரையான பொருட்களை காவிச் செல்லக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் 48 மணிநேரம் பறப்பில் ஈடுபடுத்தப்பட்டு வெற்றிகரமாக பரீட்சிக்கப்பட்டுள்ளதுடன், இதன் போது தரைமட்டத்திலிருந்து 20 கிலோமீற்றர்கள் உயரம் வரை விமானம் பறந்துள்ளது.

## டேப்ளெட்டை கையாள்வதில் சிரமமா??



தற்போது மடிக்கணனிகளின் பாவனை வெகுவாகக் குறைந்த டேப்லட்களின் பாவனை அதிகரித்து வருகின்றது. இவ்வாறான டேப்லட்களை வசதி போன்று எந்தவொரு இடத்திலும் வைத்து இலகுவாக பாவிப்பதற்கு Booy எனும் சாதனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

60 டொலர்களே பெறுமதி வாய்ந்த இந்தச் சாதனம் தற்போது விளம்பரப்படுத்தல் மற்றும் நிதி திரட்டல் நோக்கங்களுக்காக Kickstarter தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## HTML தமிழில்....

கடந்த பதிவில் பத்திக் குறி ஒட்டில் (Paragraph Tag) இசைவுப் (Align) பண்புகளைப் (attributes) பற்றிப் பார்த்தோம்.

இப்பதிவில் <CENTER> மற்றும் </CENTER> ஆகிய குறி ஒட்டுகளைக் காண்போம். இந்தக் குறிஒட்டுகளுக்கு (Tags) இடையில் உள்ள உரை உலவித்திரையில் கிடைமட்டமாக (Horizontal) மையப்படுத்திக் காட்டப்பட பயன்படுத்தப்படுகிறது. அதாவது வலைப்பக்கத்தில் மையப்படுத்தி (Center) காண்பிக்கும்.

கீழ்க்கண்ட நிரல் வரிகளை notepade-ல் எழுதி வழக்கம் போலவே .html என்ற விரிவுடன் சேமித்து, உங்கள் கோப்பை Internet Explorer> Google Chrome> Firefox போன்ற உலவிகளில் திறந்துப் பாருங்கள். உரையானது மையப்படுத்திக் காண்பிக்கப்பட்டிருக்கும்.

## Center Tag

```
<HTML>
<HEAD>
<TITLE>THIS IS MY OWN PAGE</TITLE>
</HEAD>
<BODY>
<CENTER>HI THANGAMPALANI BLOG VIEWERS</CENTER>
</BODY>
</HTML>
```

இதன் வெளிப்பாடு இவ்வாறு இருக்கும்.

HI THANGAMPALANI BLOG VIEWERS

இவ்வாறு ஒரு உரையை நடுவில், மையப்படுத்தி காண்பிக்க இந்த <center></center>குறிஒட்டுகள் காண்பிக்கப் பயன்படுகிறது.

கீழ்காணும் எடுத்துக்காட்டைக் கவனியுங்கள் இதன் பதிவுகள் அடுத்த வார இதழிலில் பார்ப்போம்.

```
<HTML>
<HEAD>
<TITLE>THIS IS MY OWN PAGE</TITLE>
</HEAD>
<BODY>
<CENTER>tzf;fk; ez;gu;fNs><br>
```




நன்றி நண்பர்களே ...!! இதன் தொடர்ச்சி அடுத்த வார இயத்தில்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# மன தைரியம்

தன்யா

தம்பலகாமம் என்ற ஊரில் ராமசாமி என்ற விறகுவெட்டி இருந்தான். நல்ல உழைப்பாளி. அவனுக்கு அன்பு என்ற பையன் இருந்தான். அவன் அரசு பள்ளியில் எட்டாவது வகுப்பு படித்துக் கொண்டு இருந்தான். அவன் நன்றாக படிக்கக் கூடியவன்.

அன்பு பேருக்குத் தகுந்தாற் போல் அனைவரிடத்திலும், அன்பாகவும், பணிவாகவும் இருப்பான். படிப்பை தவிர மற்றவர்களுக்கு என்ன தேவையோ உதவி செய்வான்.

அன்பு பள்ளிவிட்டு வந்தவுடன், அம்மாவிற்குத் தேவையான உதவி செய்துவிட்டு, பின்னர் இரவு பத்து மணி வரை தெருவிளக்கில் படித்துவிட்டு, தூங்கச்செல்வான். அவன் படிப்பில் முதல் மாணவனாக திகழ்ந்தான். அவன் அம்மா அவனிடம் அடிக்கடி நமக்கு பணவசதி கிடையாது, நன்றாக உழைத்துப் படித்தால் பிற்காலத்தில் நல்ல வசதியுடன் வாழலாம் என்று சொல்லுவார்.

அவன் அப்பா பள்ளி விடுமுறை நாட்களில் அவனுக்கு நீதி போதனைக் கதைகளைக் கூறுவார். இவனுடன் படிக்கும் மாணவர்கள் எல்லாம் நல்ல வசதியுடன் இருந்தனர்.

இவனுடைய ஊருக்கு ஒரு மருத்துவமனை கட்டுவதற்கும், பழைய கோவிலைப் புதுப்பிக்கவும், இவனுடைய பள்ளிப் மேல்நிலைப் பள்ளியாக மாறுவதற்கும் ஒரு விழா ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

அந்த விழாவிற்கு அடிக்கல் நாட்ட ஒரு மகானை அழைத்து வருவதாக செய்தி வந்தது. அந்த மகான் வந்தால் ஊருக்கு நல்ல அதிர்ஷ்டம் வரும் என்று மக்கள் நம்பினர்.

யாரரருக்கு எவ்வளவு நன்கொடைகள் கொடுக்க முடியுமோ அவர்கள் எல்லாம் அந்த ஊர் தலைமையாளிடம் கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. மக்களும் அவரவர் சக்திக்குத் தகுந்த நன்கொடைகளைக் கொடுத்தனர்.

ஆனால் அன்பு அப்பா ஒரு விறகுவெட்டி என்பதால், ஒருநாள் சாப்பாடு சாப்பிடுவதே பெரிய கஷ்டம். இதில் நன்கொடை எங்கே கொடுப்பது என்று மிகவும் கவலைப்பட்டார்.

அன்புக்கு நம்மால் பணம்கொடுக்க இயலாது. ஆனால் பணத்தைதவிர வேறு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று மனதில் நினைத்தான்.

நாட்களும் கடந்தன. இரண்டு நாட்கள் இருக்கும் நிலையில், ஊரில் மகானை வரவேற்பதற்காக எல்லாரும் ஒற்றுமையாக வேலை செய்து கொண்டு இருந்தனர்.

அவனுடைய கிராமத்தில் பழைய கோவிலைச் சுற்றி புதுப்பிக்கப்பட்டது. அன்பு நினைத்தான், பெரியவர் வருவதற்கு ஒற்றையடிப் பாதை மட்டும் சுத்தம் செய்யப்பட்டது. மீதியுள்ள இடங்களில் தேவையில்லாத செடி, கொடிகள் படர்ந்து இருந்தன. இவற்றை நாம் சுத்தம் செய்தால் என்ன என்று தோன்றிற்று.

அதனால் இரவு பகல் பார்க்காமல் மும்முரமாக அவன் நெருஞ்சி முட்கள் நிறைந்த பகுதி எல்லாம் அழகாக சுத்தம் செய்து, ஒருவழிப் பாதையாக அல்லாமல், எந்தப்பக்கம் வந்தாலும், மக்கள் வருவதற்கு அழகானப் பாதையை ஏற்படுத்தி இருந்தான்.

இவன் இவ்வளவு சுத்தமாக செய்ததைப் பற்றி யாரும் புகழ்ந்து சொல்லவில்லை. மகானும் வந்தார். கோவிலை அழகாகப் புதுப்பிக்க ஏற்பாடு செய்ததை மிகவும் மகிழ்ச்சியுடன் பார்த்தார். மருத்துவமனை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார். மக்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்தனர்.

கடைசியாகப் பள்ளிக்கு வந்தார்.

அந்த ஊரில் உள்ள அனைவருக்கும் அருள் என்ற வியாபாரி அன்னதானம் அளிக்க முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டதால் அனைவருக்கும் சாப்பாடு போடப்பட்டது.

அனைவரும் சாப்பிட்ட பிறகு பள்ளி மைதானத்தில் கூடினர்.

மகான் சொன்னார், எந்த ஒரு விஷயத்திற்கும் ஊர் கூடி செய்யும் பொழுது, அதன் பலன் பலமடங்கு அதிகமாகும். இந்த ஏழூர் மக்கள் இவ்வளவு ஒற்றுமையாக செய்தது மனதிற்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

அந்த ஊர் மக்களுக்கு நல்ல அறிவுரை வழங்கினார். அப்பொழுது அந்த ஊர் தலைவர் யார் யார் அதிக தொகை கொடுத்துள்ளார்களோ, அவர்கள் பெயர்களை வாசித்தார். அவர்களுக்கு எல்லாம், அந்த மகான் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.



இந்த பொன்னாடை போர்த்திய போது, அன்புவிற்கு, மனதில் சிறிது வருத்தம் இருந்தது. அவனுடன் கூடப்படிக்கின்ற பையன்களின் பெற்றோர்கள் எல்லாம், அந்த மகானிடம் ஆசி வாங்கினர்.

நம்மால் இந்தக் கிராமத்திற்கு சிறிய நன்கொடையைக் கூடக் கொடுக்க முடியவில்லையே என்று மனதில் ஆதங்கம் எழுந்தது.

இதனிடையில் அனைவரது பெயரும் வாசித்து முடிந்த போது, மகான் அவர்கள் ஒரு காசோலையை இந்தக் கிராமத்திற்காக வழங்கினார். இந்த ஏழூர் கிராம் நல்ல செல்வச் செழிப்போடும், மனநிம்மதியோடும் மக்கள் வாழ வேண்டும் என இறைவனை ப்ரார்த்திக்கின்றேன் என்று சொன்னார்.

கோவில், மருத்துவமனை, பள்ளி ஆகிய மூன்று இடத்திற்கும் பணம் கொடுத்தாகி விட்டது. இன்னும் ஒரு காசோலை இருக்கிறது. அது தகுந்த இடத்திற்கு செல்ல வேண்டும். எந்த இடம் என்று மக்களால் யூகிக்கமுடிகிறதா என்று ஒரு கேள்வி கேட்டார்.

மக்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு விழித்தனர். அப்பொழுது அந்த மகான், மைக்கில் அன்பு என்ற பையன் யார்?. அவன் எங்கு இருந்தாலும், உடனே வரவேண்டும் என்று கூறினார். அன்பிற்கும், அவன் பெற்றோருக்கும் ஒன்றுமே புரியவில்லை.

ஒரு வழியாக அன்பு அவர் இருக்கும் இடத்திற்குச் சென்றான். அவரை விழுந்து வணங்கினான்.

அப்பொழுது அந்த மகான் சொன்னார். இரண்டு நாட்கள் முன்பு என்னுடைய சீடனை இந்தக் கிராமத்தின் நிலவரத்தைப் பற்றி அறிய அனுப்பி வைத்தேன். இந்த அன்பு என்ற மாணவன் தனி ஒரு ஆளாக அனைத்து நெருஞ்சி முட்களையும் வெட்டி, பாதையை அழகாக சரி செய்து கொண்டு இருந்தான். இவ்வளவு சிறிய வயதில், தன்னம்பிக்கையுடன் அந்த வேலையை முடித்து இருப்பதாக என் சீடன் சொன்னான்.

இந்தச் சிறுவனிடம் இருந்து நாம் ஒரு பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். தன்னால் பணத்தால் முடியாததை, தன் மன பலத்தால் உடல் உழைப்பால் செய்துள்ளான். இது மிகப்பெரிய நன்கொடை. வழியில் ஒரு சிறு முள் இருப்பதைப் பார்த்து அதை எடுத்து ஒரு ஓரமாகப் போடாமல், அப்படியே விட்டு விட்டால், யார் காலிலாவது குத்திப் புண்ணாக்கி விடும். என்று தெரிந்த போதும் அந்த முள்ளை எடுத்து ஓரமாகப் போட விரும்பாமல் பார்த்துக் கொண்டே செல்லும் நிலையில்தான் பலர் இருக்கின்றனர். ஆனால் இந்த ஊரில் உள்ள தேவை இல்லாத முட்கள் அனைத்தையும் இந்தச் சிறுவன் அகற்றி விட்டான். இது பணத்தால் செய்த நன்கொடைக்கு மேலானது. நல்மனத்தால் செய்த இந்தச் செயல் சிறப்பானது.

இந்தக் காசோலையை இந்த அன்பின் படிப்புச் செலவிற்காக நன்கொடையாக அளிக்கிறேன். அன்புக்கும், அவனது பெற்றோருக்கும், மனது மிகவும் சந்தோஷமாக இருந்தது.

---

சாதாரணமானவனின் மனது

# பிரதியெடுக்கப்பட்ட கனா காலங்கள்

சஞ்சயன் செல்வமாணிக்கம்

அன்றொரு நாள் எனது கணணி மக்கர் பண்ணத் தொடங்கியது. எனவே அதில் உள்ள ஆவணங்களை பாதுகாப்பாக சேமிக்கத்தொடங்கினேன். அப்போது பல காலமாக கண்ணில் படாத சில புகைப்படங்கள் கண்ணில்பட்டன. புகைப்படங்கள் எத்தனை எத்தனை கதைகள் சொல்லிப்போகக்கூடியவை என்பதையும், மயிலிறகு போல் மனதை மிருதுவாய் வருடக்கூடியவை என்பதையும் கடந்த சில நாட்களாகப் புரிந்துகொண்டிருக்கிறேன். நினைவுகள் பின்னோக்கிப் போய் அந் நாட்களில் வாழ்ந்துகொண்டிருந்தன.

17.08.2006ம் திகதி காலை, வடமேற்கு நோர்வேயில் ஒரு சிறிய கிராமத்தில் வாழ்ந்திருந்தோம் நாம். அன்று காலை எங்கள் வீட்டின் காற்றில் கூட விறுவிறுப்பு கலந்திருந்தது.

என்னை தூக்கத்திலிருுந்து வலுக்கட்டாயமாக எழுப்பிக்கொண்டிருந்தாள் எனது இளைய மகள் பூக்குட்டி.

அப்பா, நேரமாகிறது எழும்பு என்று சிணுங்கினாள் பின்பு கடுமையான குரலில் கட்டளையிட்டாள். நான் அவை ஒன்றும் கேட்காதது போல் இழுத்துப் போர்த்திக்கொண்டு தூங்குவது போல நடித்தேன். இரண்டு தரம் அழைத்துப் பார்த்தாள். பின்பு வந்து போர்வையை இழுத்தெறிந்து என்னை உலுப்பினாள். கோபப்பட்டாள். சிரித்தபடியே அவளைத் தூக்கியபடியே எழுந்து குளியலறைக்கு அழைத்துபோனேன். கட்டியணைத்து முத்தமிட்டாள்.

அவள் அன்றுதான் முதன் முதலாக பாடசாலைக்குச் செல்கிறாள், எனவே அவள் இருப்புக்கொள்ளாமல் பரபரத்துக்கொண்டிருந்தாள். யார் யார் பாடசாலைக்கு இன்று வருவார்கள், என்ன அங்கு நடக்கும், தனது ஆசிரியை கண்டிப்பானவரா, விளையாட விடுவாரா என்ற அவளின் கேள்விகளுக்கிடையில் அவள் பல் துலக்கி, குளிப்பாட்டி, கிறீம் பூசி உடையணிவித்தேன்.

உன்னுடன் சிறுவர்பூங்காவில் படித்தவர்கள் தானே அங்கு வருவார்கள், நீ அந்த ஆசிரியரை ஏற்கனவே சந்தித்துப் பேசியிருக்கிறாய், உங்களை அதிக நேரம் விளையாட விடுவார்கள் என்றெல்லாம் கூறியபடியே குளிக்கவைத்து, தலைமயிரை சிக்கெடுத்து அழகாக வாரிவிட்டேன்.

சில நாட்களுக்கு முன், பாடசாலை முதல்நாளுக்கு என்று அவள் உடைகள் வாங்கியிருந்தாள். எனக்கு உடைகள் வாங்கும் கலை பற்றிய பேரறிவு இல்லாததால் அந்த விடயத்தில் நான் தலையிடுவதில்லை.

என்னுடன் வந்து புத்தகப் பையை வாங்கிக் கொண்டாள். முதல் நாள் இரவு பென்சில்களை தீட்டி அவளது பென்சில் பெட்டியினுள் வைத்துக் கொண்டாள். அடுத்த நாளுக்கான உடைகளை மினுக்கி வைக்க உத்தரவிட்டாள், துங்குவதற்கு முன் ஆயிரம் கேள்விகள் கேட்டாள். எனது பாடசாலை அனுபவத்தை கேட்டறிந்தாள். அக்காவின் அனுபவங்களை சொல்லச் சொல்லி பல கேள்விகளைக் கேட்டாள். நானும் காவியா அக்காவும் அவளருகில் படுத்திருந்து அவளின் கேள்விகளுக்கு பதிலளித்தபடியே அவளுக்கு முன் தூங்கிப் போனோம்.

குளித்து தயாரானதும் உச்சம் தலையில் இருந்து சப்பாத்து வரை அழகான உடை, தலைமயிர் கிளிப், நெட் போன்றதொரு hair band, சிறிய அழகான தோடு, நீண்ட காட்சட்டை என்பவற்றை அணிந்து கொண்டாள்.

உணவு உண்ண பொறுமையில்லாதபடியே கட்டாயத்துக்கு பாணை விழுங்கினாள். சப்பாத்தை அணிந்து கொண்டு புத்தகப்பையுடன் வீட்டுக்கு வெளியில் காத்திருந்தாள். நான் தயாராகும் வரையில் 4 - 5 தரம் என்னை "என்ன செய்யுறீங்க அப்பா, நேரம் போகுது" என என்னையும், அக்காவையும் அழைத்துக் கொண்டிருந்தாள். அதன் பின்னான காலங்களில் நான் தினமும் 4-5 முறை "என்ன செய்யுறீங்க பூக் குட்டி, நேரம் போகுது" என்று அழைக்கவேண்டியிருந்தது.

வெளியில் மழை தூறிக் கொண்டிருந்தது. வாகனத்தில் ஏறும் போது. வழமை போல் யார் அப்பாவுக்கு அருகில் உட்கார்வது என்ற பிரச்சனை வந்த போது அவளே வென்றாள். வேகமாக ஓடு, நேரம் போகிறது என்றபடியே கடந்து போன அறிமுகமானவர்களுக்கெல்லாம் கைகாட்டிக்கொண்டு வந்தாள். காவியா கண்ணாடியில் என்னைப் பார்த்துச் சிரித்தாள். நானும் சிரித்தேன். தனது தங்கை தனது பாடசாலையில் கல்வி பயில்வது அவளுக்கு பெருமையாயிருந்தது. தங்கையின் நடவடிக்கைகள் அவளுக்கு சிரிப்பாகவும் இருந்தது.

வாகனத்தை நிறுத்தி வெளியே வந்து போது என் கையைப் பிடித்துக் கொண்டாள். அவளது முகத்தில் விறுவிறுப்பின் பயம் தெரிந்தது. போகும் வழியில் ஒரு படம் எடுத்தக்கொண்டேன். அழகாய் சிரித்தாள்.

ஆசிரியர் வாசல் வரை வந்து பூக்குட்டியின் கையைப் பற்றி குலுக்கி அழைத்துப் போனார். திரும்பிப் பார்த்தாள், புன்னகைத்துக் கொண்டோம். என் மனதுக்குள் அவள் பாடசாலை தொடங்கியதை ஜீரணிக்க முடியாத தவிப்பு ஏற்பட்டது. அவள் இனி குழந்தையில்லை என்பதும் புரிந்தது. இன்று நான் இதை எழுதும் போது அவளுக்கு 12 வயதாகிறது. இருப்பினும் குழந்தையாகவே எனக்குள் இருக்கிறாள்.

பல பெற்றோர்கள் அங்கிருந்தார்கள். எல்லோரும் சிறுவர்பூங்கா மூலமாக ஏற்கனவே அறிமுகமானவர்கள். நாம் பேசிக் கொண்டிருந்தோம். சில குழந்தைகள் அடிக்கடி வந்து தத்தமது பெற்றோரின் கைகளுக்குள் அடைக்கலமாகினர். என் பூக்குட்டி வரவே இல்லை. மணியடித்த போது தனது நண்பிகளுடன் அவள் மறைந்து போனாள்.

ஏறத்தாள ஒரு மணி நேரத்தின் பின், ஆசிரியர் என்னிடம் நீங்கள் விரும்பினால் போகலாம் என்ற போது பூக்குட்டியை அழைத்து பாடசைலை முடிந்ததும் என்ன செய்ய வேண்டும் என்று கூறி, விடைபெற்றபோது கட்டியணைத்து முத்தம் கொடுத்தேன். வெக்கப்பட்டு நெளிந்தாள்.

வெளியே வந்து ஜன்னலினால் பார்த்தேன். ஆசிரியரின் பேச்சை கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். திரும்பிப் பார்க்கமாட்டாளா என்று ஏங்கியபடியே நின்றிருந்தேன், சில நிமிடங்கள்.

என் உடல் நகர்ந்தாலும் மனம் நகர மறுத்தது.

ஒரு புகைப்படத்திற்கு இவ்வளவு ஞாபகசக்தியிருக்குமா என்று சிந்தித்துக்கொண்டிருந்தேன். எத்தனை எத்தனை நினைவுகளை தூண்டிவிடுகிறது ஒரு புகைப்படம்.

அந்த நாட்கள் என் வாழ்வினை அழகுபடுத்திய மிக அற்புதமாதமான நாட்கள் என்பதை மறுபபதற்கில்லை. இதே போல் பல புகைப்படங்கள் இருக்கின்றன. அவற்றினுள்ளும் ஏறாளமான கதைகள் ஒளிந்திருக்கலாம்.

**இன்றைய நாளும் நல்லதே ...**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நொச்சிக்குளத்தில் தொடரும் கொலைகள் மூன்றாவது அப்பாவியும் படுகொலை.....



திருகோணமலை மாவட்டத்தில் பன்குளம் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நொச்சிக்குளம் கிராமத்தில் வசித்து வந்த சிவசெம்புக்கு பிறந்த மகனான சிவதுசாந்தன் (அம்பு) என்றழைக்கப்படும் 28 வயதுடைய தர்சன் கடந்த தசாப்தங்களில் இரண்டு கொலைகள் செய்ததாக விளக்கமறியலில் மூன்று வருடங்கள் சிறை வாழ்க்கையை அனுபவித்து பிணையில் வெளியில் வந்தான்.

நொச்சிக்குளம் கிராமத்தில் கணவரை இழந்து வாழ்கைச் செலவிற்காக அதிகாலை நேரத்தில் எழும்பி தனது வயிற்றுப்பசியை போக்குவதற்காக காலையில் அப்பம் மற்றும் வடைகளை செய்து கொண்டு நொச்சிக்குளம் கிராமத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பெரியவிளான்குளம் சென்று அதனைக் கடைகளுக்கு விற்று ஏழ்மைத்தனத்தில் தமது வாழ்க்கையை கழித்து வந்தார் தங்கம்மா.

அந்த நாட்களில் மகன் உறவு முறையான தர்சன், தங்கம்மாவின் வீட்டிற்கு வந்து சென்றிருந்தான்.

ஒரு நாள் அவன் "நாங்கள் வாழ்வில் இவ்வளவு கஸ்டப்பட தேவையில்லை. உங்களுக்கு மந்திரங்கள் தெரியும் தானே பெரியம்மா? புதையலொன்று ஒரு இடத்தில் இருக்கு. எடுத்தால் நல்லா இருக்க முடியும், வாங்க போவோம்" என அழைத்துச் சென்றதாக ஊரவர்கள் தெரிவித்தனர்.

புதையலெடுக்கச் சென்று மூன்று நாட்களின் பின்னர் 2011-10-11ம் திகதி பொன்னம்பலம் தங்கம்மா நொச்சிக்குளம் வயல் பகுதியிலுள்ள கொட்டிலொன்றில் தகரத்தின் மேல் கல்லால் அடித்துக் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

எனது தாயை கொலை செய்தது தர்சன் என தங்கம்மாவின் மகளான தேவிகா சிறிவானி காவல்துறையினரிடம் கதறியழுத வண்ணம் கூறினாள்.

தர்சன் சந்தேகத்தின் பேரில் ஒரு வருடம் விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் சிறை வாழ்கையை அனுபவித்த தர்சன் பியையில் விடுதலையானான்.

தமது அம்மாவின் மரணத்தில் தர்சனின் தொடர்பை நிரூபிக்கும் விசாரணைகள் நீதிமன்றால் முன்னெடுக்கப் பட்டிருப்பதால் தங்கம்மாவின் குடும்பத்தினர் முடிவை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

சிறையிலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் தர்சன் பிணையில் விடுவிக்கப்பட்டான். அதனையடுத்து நொச்சிக்குளத்தில் இரண்டு வருடங்களாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காவல் நிலையத்திற்கு சென்று கையொப்பமிட்டதுடன் கூலித்தொழில் புரிந்து காலத்தை கழித்து வந்தான்.

தங்கம்மாவின் கொலையை மக்கள் மறக்கத்தொடங்கினர்.

இந்தக்காலப்பகுதியில் தர்சன் சத்தியசீலனுடன் நெருக்கமான நட்பை வளர்த்துக் கொண்டான்....

சோமநாதனின் மூத்த மகனான சத்தியசீலனுடன் ஆறு மாதங்களுக்கும் மெலாகத் தொடர்ந்தது நட்பு. ஒரே கோப்பையில் சாப்பிடும் அளவிற்கு அந் நட்புப் பெருகியது.

சத்தியசீலன் ஒரு கடும் உழைப்பாளி...2013-09-29ம் திகதி சத்தியசீலன் பகல் முழுவதும் வெயிலில் கருவாடாக வாடிக் காய்ந்து குடும்பத்தின் கஸ்ட நிலையை கருத்திற்கொண்டு கூலிக்காக மணல் ஏற்றி விட்டு வீட்டுக்கு வந்து "அம்மா சாப்பாட்டை போடுங்க" என கூறியவன் பக்கத்து வீட்டுக்குச் சென்று படம் பார்க்க சீடி ஒன்றினை வாங்கி வர சென்றான்.

சென்றவன் நீண்ட நேரத்தின் பின்னரே திரும்பி வந்தான். சாப்பிடாமல் அவ்வளவு நேரம் தாமதித்தது ஏன்? என தாய் கேட்டபோது தான் தர்சனுடன் கதைத்துக்கொண்டிருந்ததாகவும் நாளை முதல் எமது கஸ்டநிலை தீர்ந்துவிடும் என்று தெரிவித்ததாகவும் சத்தியசீலனின் குடும்பத்தார் தெரிவித்தனர்.

மறுநாள் சத்தியசீலன் காணாமற் போய்விட்டான்.... சத்தியசீலனை கிராமத்தவர்கள் அனைவரும் தேடத் தொடங்கினர்... தர்சனும் அவர்களுடன் தேடுதலில் இறங்கினான்.

சத்தியசீலன் மறு நாள் நொச்சிக்குளம் குளத்து காட்டுப்பகுதியில் சேற்றினுள் புதைக்கப்பட்ட நிலையில் சடலமாக கண்டெடுக்கப்பட்டான்.

சத்தியசீலனின் சடலத்தை காவல்துறையினர் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அப்போதும் கொலையாளியாக சந்தேகிக்கப்படும் தர்சன் (அம்பு) சத்தியசீலனின் சடலத்தை பார்வையிட்டுவிட்டே கொலை செய்யப்பட்ட தங்கம்மாவின் வழக்கிற்காக நீதிமன்றம் சென்றான்.



சத்தியசீலனின் மரணம் தொடர்பில் நான்கு பேரில் சந்தேகம் இருப்பதாக தந்தையான சோமநாதன் காவல் நிலையத்தில் வாக்குமூலம் அளித்தார். கொலை நடந்த நான்காம் நாள் தீவிர விசாரணைகளை மேற்கொண்ட காவல்துறையினர் மோப்ப நாயை கொண்டு வந்தனர்.

அந்த மோப்ப நாய் சத்தியசீலனின் தந்தை சோமநாதன் சந்தேகிக்கும் நபருள் ஒருவனான தர்சனின் (அம்பு) வீட்டிற்கு சென்றது. அங்கு கதவு மூடப்பட்டிருந்த போதிலும் காவல்துறையினரின் உதவியுடன் கதவு உடைக்கப்பட்டது.

மோப்ப நாயானது தர்சன் அணியும் செய்யும் ஜம்பர் மற்றும் டிசேட் போன்ற உடைகளை கட்டிலொன்றுக்கு அடியில் இருந்து கண்டெடுத்தது. அவ்வுடைகளில் குளத்தின் சேறு அப்பியிருந்தது......

முதலாவது கொலை வழக்கிற்காக சென்ற தர்சன் மீண்டும் இரண்டாவது கொலையுடன் தொடர்புடையவர் என காவல்துறையினரினால் சந்தேகத்தின் பேரில் நீதிமன்றத்திற்கு முன்னாள் நிறுத்தப்பட்டான்.

1995-03-12ம் திகதி பிறந்த சத்தியசீலனை 2013-09-30ம் திகதி கொலை செய்த சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தர்சன் என்றழைக்கப்படும் அம்பு மீண்டும் 2015-07ம் மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டான்.

இரண்டாவது சிறைவாழ்வில் அவனுடன் பழக்கமானவர்களுள் ஒருவர் தான் திருகோணமலை, உவர்மலை, லோவர் வீதியில் வசித்து வந்த ஒரு ஆண் குழந்தையின் தந்தையான புவனேந்திரன் தேவராசா, 43 வயதுடையவர்.

திருகோணமலை விளக்கமறியலில் சிறை அனுபவித்து வந்த தேவராசா தர்சனும் தண்டனை காலத்தில் நண்பர்கள் ஆகினார்.

கடந்த 2015-06-10ம் திகதி தேவராசா பிணையில் விடுவிக்கப்பட்டார். அதனையடுத்து தர்சனை பார்வையிட தேவராசாவின் மனைவியும், தேவராசாவும் சிறைச்சாலைக்கு சென்றனர்.

இரண்டாவது கொலையுடன் சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தர்சன் விடுதலையாகி பிணையில் வந்தான்.

கடந்த 2015-08-27ம திகதி தேவராசாவான கணவர் 100 ருபாய் பணத்துடன் போன் காட் வாங்கிக்கொண்டு வருகின்றேன் என கூறிச்சென்றதாக மனைவி சிவரஞ்சனி தெரிவித்தார்.

அன்றைய இரவு 7-22 மணியளவில் தேவராசா கதவை திறந்து வைத்துக்கொண்டு தூங்குமாறும் தான் வீட்டுக்கு வருவதாக கூறியதாகவும் தேவராசாவின் மனைவி தெரிவித்-தார்.

ஆனாலும் கணவர் இரவு வீட்டுக்கு வரவில்லை.

மறுநாள் தர்சன் (அம்பு) காலை 6 மணியளவில் துவிச்சக்கர வண்டியில் வீட்டுக்கு வந்து தேவராசாவை காட்டில் தடுத்து வைத்துள்ளதாகவும் அவரை மீடபதற்குப் 10 இலட்சம் ரூபாய் பணம் தேவைப்படுவதாகவும் அந்த பணம் இல்லாவிட்டால் கடிதம் எழுதி கையொப்பம் வைத்து கொடுத்து விட்டு வரலாம் எனவும் பின்னர் அப்பணத்தை கொடுக்க முடியும் என கூறியதாகவும் மனைவி தெரிவித்தார்.

சந்தேகநபரான தர்சனை நம்பி தனது 10 வயது மகனுடன் நொச்சிக் குளத்துக்கு அருகிலுள்ள பெரியகுளம் காட்டுப்பகுதிக்கு தேவராசாவின் மனைவி சென்றார்.

அவர்களைக் கண்ணுற்ற புளியம்பழம் பறிக்கச் சென்ற சிங்கள சகோதரர்கள் காட்டுப் பகுதிக்குள் சென்ற தாயையும், மகனையும் விசாரித்த போது சம்பவத்தை சொல்லியதாகவும் அதன் பிறகு அவர்களை செல்ல வேண்டாம் என



தடுத்து இருவரையும் பஸ்ஸில் ஏற்றி அனுப்பியதாகவும் மனைவி தெரிவித்தார்.

கணவரை தடுத்து வைத்துள்ளதாகவும் அவரை மீட்டுத்தருமாறு கூறியும் தர்சனுக்கு இது விடயமாக தெரியும் எனவும் திருகோணமலை தலைமையக காவல் நிலையத்தில் 2015-08-28ம் திகதி மனைவியின் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

அம்முறைப்பாட்டையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட காவல்துறையினர் மன்னார், பேசாலை பகுதியில் வைத்து தர்சனை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்ததாகவும் தெரிவித்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட தலைமையக காவல்துறையினர் தேவராசாவின் உடலைக் கண்டுபிடிக்க சந்தேகநபரை உரிய இடத்திற்கு அழைத்து வந்த வேளை கொலை செய்யப்பட்ட இடத்தினையும் அடித்துக் கொன்ற கல்லையும் காட்டியதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

கொலை புதைக்கப்பட்ட இடத்தில் மீட்கப்பட்ட எழும்புக்கூடு தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

அங்கு மீட்கப்பட்ட உடைகள் தேவராசா வீட்டிலிருந்து போன்கார்ட் வாங்குவதாக கூறிச்செல்லும் போது அணிந்திருந்தவை என மனைவியால் உறுதி செய்யப்பட்டது.

சடலம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சட்ட வைத்திய நிபுணருக்கு உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து விசாரணைகளை திருகோணமலை சட்ட வைத்திய நிபுணர் றாஜபக்ஸ மேற்கொண்டு வருகின்றார்.

சந்தேகநபர் தடுப்புக்காவல் இடப்பட்டுள்ளார்.

களத்தில் இருந்து தகவல்களுடன்

அப்துல் சலாம் யாசிம்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# குழப்பங்களின் போது ஒரு முஃமின்

***மண்ணயிறைல் ஏற்படும் குழப்பம்***

மண்ணறை வாழ்வை மனிதர்கள் அனைவரும் சந்தித்தே தீரவேண்டும். அதில் ஏற்படவிருக்கும் குழப்பங்கள் பாரியதாகவே இருக்கும் என்பதை நபி (ஸல்) அவர்களின் பின்வரும் அறிவுரை மூலம் அறிந்து கொள்ளலாம்.

தஜ்ஜாலின் குழப்பத்திற்கு ஒத்த குழப்பம் போன்று நீங்கள் உங்கள் மண்ணறைகளில் சோதிக்கப்பட இருக்கின்றீர்கள் என ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டார்கள். (புகாரி).

நபி (ஸல்) அவர்கள் பாதுகாப்புத் தேடியவைகளில் மண்ணறையின் வேதனை என்று தனியாகவும், மண்ணறையின் குழப்பமான நிலை என்று வேறாகவும் பிரார்த்தித்திருப்பது இதன் பாரதூரத்தை விளக்கிடும் ஒரு வழிமுறையாகக் கொள்ள வேண்டி உள்ளது.

***குழப்பங்களின் போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்:***

இஸ்லாமிய மார்க்கம் அனைத்திற்கும் வழிகாட்டி இருப்பது போன்று குழப்பங்களின் போதும் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளையும் போதித்திருக்கின்றது. அந்த வகையில் பின்வரும் நடைமுறைகள் பதிவு செய்யப்படுகின்றன.

***நிதானமாக நடந்து கொள்ளல்:***

குழப்பங்களின் போது ஒரு மு.ீமின் தனது மன உறுதியை இழந்துவிடக் கூடாது. குழப்பமான சூழ்நிலைகள் வரும் சந்தர்ப்பங்களில் எல்லாம் அவர் எச்சரிக்கையாவும் நிதானமாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

நம்பிக்கை கொண்டவர்களே! உங்களின் பாதுகாப்பை நீங்கள் உறுதி செய்து கொள்ளுங்கள். (எச்சரிக்கையாக இருங்கள்), பிரிந்தவர்களாகவோ, சேர்ந்தோ போருக்குப் புறப்படுங்கள். (அந்நிஸா: 71)

எதிரிகளின் சூழ்ச்சிகள், தாக்குதல்களில் இருந்து எச்சரிக்கின்ற வசனமாக இவ்வசனம் அமைந்துள்ளது. குழப்பமான நிலைகளில் இருந்து பாதுகாப்புப் பெறுவதும் அவ்வாறே!

தொடரும் .. ..

**– எம்.ஜே.எம். ரிஷ்வான் –**

# சிறிய இறைவாக்கினர்கள் வரலாறு

ஏழைகளிடமிருந்து கையூட்டுப் பெறவும் மறப்பதில்லை. நீதி பணத்திற்கு விலை போகிறது.



5:21-24 இறை வழிபாட்டுக்குத் திருவிழாக்கள், பலிகள், பாடல்கள், இசைகள் முக்கியமே. எல்லா மதங்களுமே இவைகளை ஏற்றுக் கொள்கின்றன. ஏன்யாவே கடவுளும் இஸ்ரயேல் மக்களிடமிருந்து இவைகளைக் கேட்டுப் பெற்றார். தனக்காகக் கோவில் ஒன்றை அமைக்கச் சொன்னார். பலவகையான பலிகளை, தகனப்பலி, பாவப்பரிகாரப்பலி, சமாதானப்பலி, ஒப்புக்கொடுக்கச் சொன்னார். இசை அமைத்து தன்னைப் போற்றச் சொன்னார். ஆனால் இங்கே, இஸ்ரயேலின் பலிகள் வேண்டாம், இசைகள் வேண்டாம், திருவிழாக்கள் வேண்டாம் என்று கூறுகிறார். மேலும் இஸ்ரயேல் வீட்டாரே, பாலைவனத்தில் இருந்த அந்த நாற்பதாண்டுகளில் பலிகளும், காணிக்கைகளும் நமக்குக் கொடுத்தீர்களோ? என்று கேட்கின்றார். அதாவது, இந்தப் பலிகளெல்லாம் மக்களைக் கடவுளிடம் எடுத்துச் செல்வதாக அமைய வேண்டும். அதற்கு இவைகள் பயன்படவில்லை யென்றால், வெளிக் கொண்டாட்டங்களெல்லாம், வீண் ஆடம்பரமாகவே அமைந்துவிடும். சுருக்கமாகக் கூறின், இறைவன் எதிர்பார்ப்பது இந்த வெளிக் கொண்டாட்டங்களையல்ல, மாறாக நல்ல வாழ்க்கையே. நீதி வெள்ளமெனப் பொங்கி வருக! நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்து வருக என்கிறார் இறைவாக்கினர்.

8:4-6 இஸ்ரயேல் மக்கள் வாழ்வில் அமாவாசை ஒரு புனித நாள். அத்தோடு ஓய்வு நாளாகவும் கொண்டாடப்பட்டு வந்தது. இப்போது பெரிய பெரிய வியாபாரிகள், இந்த நாட்களை அனுசரிக்கத் தங்களுடைய வியாபாரங்களையெல்லாம் நிறுத்தி விட்டு, செல்கிறார்கள். ஆனால் அங்கு சென்றாலும், அவர்களுடைய உள்ளங்களில் இறைவனைத் தியானிப்பதற்குப் பதிலாக அந்த இழப்பைப்பற்றி நினைத்து மனம் வருந்திக் கொண்டு இருக்கின்றனர். இந்த ஓய்வு நாள் எப்போது முடியும், எப்போது நம் வியாபாரத்தை மீண்டும் ஆரம்பிக்கலாம் என்று ஆவலோடு காத்துக் கொண்டிருக்கின்றனர்.

தொடரும் .. ..

www.bible.me

# மதுவிற்கு அடிமையானவரா உங்கள் கணவர்?

பெண்கள் தங்களுக்கு மதுவுக்கு அடிமையாகாத மாப்பிள்ளை கிடைக்க வேண்டும் என எதிர்பார்ப்பது எதிர்கால வாழ்க்கைக்கு நன்மை பயக்கும். ஏனெனில், மது பாட்டில் வாசல் வழியாக வந்தால், பணமும் படிப்பும் ஜன்னல் வழியாக ஓடிவிடும்.

ஆனால், சிலர் திருமண பந்தத்தில் இணைந்த பிறகு மதுவுக்கு அடிமையாகிவிடுவார்கள், அவர்களை எப்படி திருத்துவது???



பெரும்பாலும் நண்பர்களால்தான் கணவர் மதுப்பழக்கத்துக்கு அடிமை ஆகிறார். அதனால் அவரது நட்பு வட்டத்தை கண்காணிப்பது அவசியம். உங்கள் கணவருடன் திறந்த மனதுடன் பழகுங்கள்.

அவர் திருந்துவதற்கு போதுமான கால அவகாசம் கொடுங்கள் பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையுடன் அணுகுங்கள்.

சிலர், போதை ஊசி, போதை பாக்கு, போதை மாத்திரை, கஞ்சா போன்றவற்றை பயன்படுத்துகிறார்கள். இவர்கள் பெரும்பாலும் மன நோயாளிகளாகவே மாறி விடுகிறார்கள். இவர்களை மனரீதியான பயிற்சியாலும், முறையான மருத்துவ சிகிச்சை மூலமும் குணப்படுத்த முடியும்.

திருமணம், பிறந்தநாள், விழா, பண்டிகை கொண்டாட்டம் போன்ற நிகழ்ச்சிகளில் மதுபானம் அருந்துவது ஒரு கலாச்சாரமாக மாறிவிட்டது. இந்த நிலை மாறினால் குடிகாரர்கள் பெருகுவது குறைய வாயப்புள்ளது.

எதுவாயினும், அன்பு என்ற ஒன்றால் இந்த உலகத்தை ஆளலாம் என்பது போல, உங்கள் கணவன்களையும் ஆளலாம் என்பதை தெரிந்துகொள்ளுங்கள்.



***பஸ்ஸில் கண்டெக்டர் : எங்க போகணும்?***

பயணி: அதோ அந்த ஜீன்ஸ் போட்ட பொண்ணு பக்கத்தில. கொஞ்சம் வழி விடுறீங்களா?

***டாக்டர்: நீங்க இவரை 1 மணிநேரம் முன்னாடி கொண்டு வந்திருந்தீங்கன்னா காப்பாத்தியிருக்கலாம்....***

உறவினர் : என்ன செய்ய? இவங்களுக்கு விபத்து நடந்தே கால்மணி நேரந்தானே ஆச்சு?



**படிப்பு** அறிவு **தரும்**
**அறிவு** பணம் **தரும்**
**பணம்** திமிரை **தரும்**
**திமிரு** ஆணவம் **தரும்**
**ஆணவம்** அழிவை **தரும்**
**அதனால்**

படிப்பை **எதிர்ப்போம்**
ரெஸ்ட் **எடுப்போம்**

## இவ்வார ராசிபலன்கள்

**மேஷம்** : நீண்ட நாள் முயற்சி வெற்றி பெறும். மனதில் உற்சாகம் உண்டாகும். ஆரோக்கியம் பலம் பெறும். பணக்கடனில் பெரும் பகுதியை அடைப்பீர்கள்.

**ரிஷபம்** : சாதுர்யமாக செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். எதிரியும் பாராட்டும் சூழ்நிலை உருவாகும். வேலையில் முன்னேற்றம் காணப்படும். சுமுக வாழ்வு உருவாகும்.

**மிதுனம்** : எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பகைமை குணம் உள்ளவரும் அன்பு பாராட்டுவர், தொழில் வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும்.

**கடகம்** : சமூகத்தில் நற்பெயருடன் திகழ்வீர்கள். குடும்பத் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். எதிரியும் விலகிச் செல்லும் சூழல் உருவாகும்.

**சிம்மம்**: பொது இடங்களில் எவருடனும் அதிகம் பேச வேண்டாம். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். மாணவர்கள் பாதுகாப்பற்ற இடங்களுக்கு செல்வது கூடாது.

**கன்னி** : பணிகளில் ஒருமுகத்தன்மையுடன் ஈடுபடுவது அவசியம். குடும்பத் தேவைக்கான செலவு அதிகரிக்கும். கடந்த கால நற்செயலுக்கான பலன் வந்து சேரும்.

**துலாம்** :கருத்து பேதம் கொண்டவர்களிடமிருந்து சமயோசிதமாக விலகுவீர்கள். வியாபாரத்தில் அதிக பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**விருச்சிகம்** : பணவரவுக்கான வழி உருவாகும். உடல் நலனில் கவனம் தேவை. மந்த நிலைமாறி லாபம் அதிகரிக்கும். பிறருக்காக எவ்வித பொறுப்பும் ஏற்க வேண்டாம்.

**தனுசு** : மனதில் அமைதி நிறைந்திருக்கும். புதிய முயற்சி மூலம் வளர்ச்சிக்கு வழிவகுப்பீர்கள். நிலுவைப் பணம் வசூலாகும். லாபம் பன்மடங்கு அதிகரிக்கும்.

**மகரம்** : தடைப்பட்ட பணி விரைவாக நிறைவேறும். பணவரவு அதிகரிக்கும். எதிரிக்கும் உங்கள் மீது நல்ல எண்ணம் ஏற்படும். வருமானம் பன்மடங்கு உயரும்.

**கும்பம்** : புதியவர்களின் நட்பும், உதவியும் கிடைக்கும். ஆரோக்கியம் சீராக இருக்கும். உழைப்பால் முன்னேற்றம் காண்பீர்கள். லாபம் பெருகும். அதிக பலன் கிடைக்கும்.

**மீனம்** : எதிரி தொல்லை விலகும். பணி நிறைவேற புதிய உத்தியைக் கையாள்வீர்கள். வியாபாரத்தில் வளர்ச்சிக்கான காலகட்டம், ஆதாயம் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 01

01. பேச்சு வழக்கு சொற்களை எழுத்து வழக்கில் மாற்றி எழுதுக
1. கலாச்சாரம் ..........................

ii. சவக்காரம் ..........................................

02. வாக்கியத்தின் கருத்தினை ஆங்கில எழுத்துக்களில் எழுதுங்கள்
i. எனக்குப் பசிக்கிறது : ..........................................

ii. தயவு செய்து துரிதமாக செய்யவும் : .........................

03. தரப்பட்ட வாக்கியத்தின் கருத்தினை சிங்கள உச்சரிப்பினை தமிழ் எழுத்துக்களில் எழுதுக
i. தேனீர் குடியுங்கள் : ....................................................

ii. மீண்டும் வாருங்கள் : ...................................................................

04. ஒரு மாம்பழம் ரூ. 18.00 எனின் ரூ. 324.00 இற்கு எத்தனை பழங்கள் வாங்கலாம்?

.............................................................................


05. 609 தேங்காய்களை மூன்று குவியல்களாகப் பிரிக்கப்பட்டன ஒரு குவியலில் உள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

.............................................................................

06. ஒரு இனிப்புப் போத்தலில் உள்ள இனிப்புப்பானத்தின் அளவு 175ml தகும். அத்தகைய 6 போத்தர்களில் உள்ள இனிப்புப் பானத்தின் கனவளவைக் கணிக்க?


.............................................................................

07. கீழ்வரும் உருவின் சுற்றளவைக் கணிக்க




.............................................................................

08. கம்பி வளையல் ஒரு அடைப்பின் நீளமும் அகலமும் முறையே $25cm^2$ ஆகும் கம்பிவளையினுள்ளே $16Cm^2$ பரப்பளவைக் கொண்ட ஒரு வடிவத்தை நிழற்றுக.



.............................................................................

09. நூலகம் ஒன்றிலுள்ள இறாக்கைகளில் 9564 புத்தகங்களை அடுக்கலாம் 7674 புத்தகங்கள் இருந்தன. இறாக்கையில் அடுக்க இன்னும் எத்தனை புத்தகங்கள் தேவை?

.............................................................................

10. போத்தல் ஒன்று 1l 500ml நீரைக் கொள்ளும் 9l நீர் கொள்ளக்கூடிய பாத்திரம் ஒன்றை முற்றாக நிரப்ப இப்போத்தலினால் எத்தனை தடவை நீர் ஊற்ற வேண்டும்?

.............................................................................

11. 200 இன் ½ வாசியுடன் 5கூட்டும் போச வரும் விடை யாது?

.............................................................................

12. காடுகளை அழிக்காமல் பாதுகாத்து மழை வளத்தை பெறுவோம் உயிர்களை காப்பாற்றுவோம்... 5 வாக்கியம் எழுதுக.

1. .............................................................................

2. .............................................................................

3. .............................................................................

4. .............................................................................

5. .............................................................................



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு



## சிறுவர்களுக்கான குட்டிக் கதை



## தங்கையின் பிறந்தநாள் பரிசு



அன்று வெள்ளிக்கிழமை. நாளை மறுநாள் பீமனின் பிறந்தநாள். இன்றே அவன் துள்ளிக்குதித்துக் கொண்டிருந்தான். நண்பர்கள் அனைவரையும் வீட்டிற்கு அழைக்க திட்டமிட்டிருந்தான்.

விருந்திற்குப் பின்னர் விளையாடுவதற்காக சில விளையாட்டுக்களையும் தயார்படுத்தினான்.

பீமனின் தங்கை துஷாலா, அவனுக்கு வரும் பரிசுகளை அடுக்கி வைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள். மேலும் அவளை பதினைந்து சிறு அட்டைகளில் வண்ணமயமான ஓவியம் வரைந்து கொடுக்குமாறு கேட்டான். அவ்வட்டைகளை அவன் நண்பர்களுக்கு அழைப்பிதழ்களாக கொடுக்க எண்ணினான்.

துஷாலா! என் பிறந்தநாள் விழாவிற்கான அழைப்பிதழ்கள் எங்கே? என கேட்டான்

அதற்கு அவளோ சட்டை செய்யாமல் இன்னும் ஒரு நாள் இருக்கின்றது தானே அண்ணா! என்ன அவசரம் உனக்கு? என்றாள்.

கோபம் மேலிட்டவனாய் இன்று பாடசாலையில் வைத்தே அழைக்கலாம். சரி என் திட்டம் எல்லாம் பாழாகிப் போனது என புலம்பினான். தங்கையோ சிரித்துக் கொண்டு அருகில் வந்து இந்தா அண்ணா என அழகிய கண்ணைக் கவரும் பதினைந்து அட்டைகளைக் கொடுத்தாள். மகிழ்ச்சியில் தங்கைக்கு கட்டி அணைத்து ஒரு முத்தத்தை பகிர்ந்தான்.

இருவரும் பாடசாலை சென்றனர். அனைவருக்கும் அழைப்பிதழ்களை பீமன் வழங்கி வைத்தான். அனைவரும் தங்கை துஷாலாவின் ஓவியங்கள் கண்டு வியந்தனர்.

அன்று சனிக்கிழமை நித்திரைக்குச் செல்லுமுன் தங்கையை அழைத்து இந்தா இந்த பையை கவனமாக வை என பீமன் ஓர் பையை நீட்டினான். என்ன பை அண்ணா என்றவாறே பையினுள்ளே பார்த்தாள். கண்ணாமூச்சி விளையாட சில அழகிய துணிகளும், பந்துகளும் பல வர்ண பலூன்களும் காணப்பட்டன.

தன் அறைக்குச் சென்ற அவள் அதை பத்திரமாக தன் மேசை மீது வைத்தாள்.

மறுநாள் காலை எழுந்ததும் அப்பையை பார்த்தாள் பையைக் காணவில்லை. அழுகை வந்தது. பயமும் சேர்ந்து கொண்டது. அண்ணா திட்டுவானே!. பிறந்தநாளன்று அவனை கோபப்படுத்தப் போறனே என எண்ணியவள் அழுது கொண்டே வெளியில் சென்றாள்.

அழுத வண்ணம் வந்த தங்கையை பார்த்ததும் திடுக்குற்ற அண்ணா ஓடி வந்து துஷாலா! என்ன நடந்தது? ஏன் அழுகின்றாய் என வினவினான்.

அண்ணா! அண்ணா! அழுதாள்......

அழாமல் கூறும்மா என்றான் கரிசனையுடன்.

அண்ணா! நீ என்னிடம் தந்த பையைக் காணவில்லை என்றாள்.

இதற்கு அழலாமா வா இருவரும் சேர்ந்து தேடுவோம் என கூறிக்கொண்டே தங்கையின் அறையை நோக்கிச் சென்றான்.

போனதும் இந்த யன்னல் இரவு முழுதும் திறந்தா இருந்தது என்றான். ம்ம் என தலையை ஆட்டினாள். அவளையும் கூட்டிக் கொண்டு வீட்டின் பின் பக்கம் சென்றான். இவளுக்கோ ஒன்றும் புரியவில்லை. பின்னே சென்றாள். அவர்களது ரோஜா மரத்தின் கீழ் ஓர் அழகிய பூனைக்குட்டி அப்பையை வைத்து விளையாடிக் கொண்டிருந்தது. இவர்களைக் கண்டதும் பையை விட்டு விலகிச் சென்றது.

ஐ! பூனைக்குட்டி என்றவாறே தங்கை ஓடிச்சென்று தூக்கினாள். சென்று அக்குட்டியை வளர்ப்பதற்காக அம்மாவிடம் அனுமதி பெற்றவள் அக்குட்டியை தன் அண்ணாவின் பிறந்தநாள் பரிசாக அழைத்தாள்.

அனைவரும் சேர்ந்து பீமனின் பிறந்தநாளைக் கொண்டாடினர்.

### சிந்திக்க .. ..

குறை இல்லாதவன்
மனிதன் இல்லை:
அதை குறைக்கத் தெரியாதவன்
மனிதனே இல்லை!!

## விடுகதைகளும் விடைகளும்

1. வெள்ளிக் கிண்ணத்தில் தங்க காசு
2. குண்டுச்சட்டியில குதிரை ஓட்டறான்.
3. வெள்ளி ஓடையில கருப்பு மீனு துள்ளி விளையாடுது.
4. டாக்டர் வந்தாரு, ஊசி போட்டாரு, காசு வாங்காமல் போனாரு.
5. மழையில் பூக்கும் பூ
6. ஊரெல்லாம் சுத்துவான், ஆனால் வீட்டிற்குள் வரமாட்டான்.

**விடைகள்**
1. முட்டை
2. ஆட்டுக்கல்
3. கண்
4. நுளம்பு
5. குடை
6. செருப்பு

கே. பிரணவி,
தரம் -05
திருகோணமலை



வீ. கருணாகரன்
புன்னைத்தோட்டம்



ம. சோபிதராஜ்
தரம் - 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு....






இதற்கிடையில் உங்களுக்கொரு சந்தேகம் எழலாம். இலங்கை எந்த வகையை சேர்ந்த நாடு? என்று. பெயரிலே "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு" என பெயர் தாங்கியிருக்கும் இந்த நாட்டின் குடிமகனாகிய நீங்கள் அரசைப் பார்த்துக் கேளுங்கள், "இந்த நாட்டில் சோசலிசம் எங்கே இருக்கிறது?" என்று கேளுங்கள். அப்பொழுது புரியும் உங்களுக்கு இலங்கை எந்த வகையைச் சேர்ந்த நாடு என்று. முடிவுகளுக்கு நான் பொறுப்பல்ல...

உண்மையில் நூற்றைம்பது வருடங்களாக வளர்த்துக் கொண்ட அமெரிக்காவிற்கும், வெறும் நாற்பது வருடங்களில் அசுர வளர்ச்சி கண்ட சோவியத் ஒன்றியத்திற்கும், இரண்டாம் உலகப் போரின் பின்னர் யார் இந்த உலகின் வல்லரசு? யார் உலகினை ஆளுவது? வர்த்தக வாணிபத்தில் யார் முதலாளி? என்கின்ற பல நிலைகளைத் தீர்மானிக்க இந்த நாடுகள் முட்டி மோதிக்கொண்டன. பொதுவாக மேற்குலகத்தை அமெரிக்காவும், கிழக்குலக நாடுகளை சோவியத்தும் பிரித்து வைத்துக் கொண்டன என்றும் சொல்லலாம். ஆனால் எங்குமே இந்த இரு நாடுகளும் நேருக்குநேராக போர் செய்ததில்லை.

ஆனாலும் போர் பதட்ட நிலை ஒன்று 1962 இல் உருவானது. (Cuban Missile Crisis) என்று அமெரிக்காவின் முள்ளாக இருந்த, இருக்கிற கியுபாவில் தனது ஏவுகணை நிலையை சோவியத் அமைக்க முயன்றதால் ஏற்பட்டது. இதற்கு அடிப்படைக் காரணமாக அமேரிக்கா- ஐரோப்பா எங்கும் தனது அணு ஏவுகணை நிலை-களை நிறுவியது காரணமாக இருந்தது. பின்னர் நிலைமை விபரீதமாக போனதை உணர்ந்த இரு நாடுகளும் ஒருவரை ஒருவர் தாக்குவதில்லை என்ற முடிவுடன் சில ஏவுகணை நிலைகளை திரும்பிப் பெற்றுக் கொண்டன. உலகம் தப்பித்துக் கொண்டது.

இந்த இரு பேராசை பிடித்த நாடுகளும் தாம் நேர மோதிக் கொள்ளவதில்லை என்று ஒப்பந்தம் போட்டு விட்டு, தமது நாடுகளை விட்டு உலகில் பல நாடுகளில் மறைமுகமாக மோதிக் கொண்டதுடன், அந்த நாடுகளை சுடுகாடாக்கியது மட்டுமல்ல, பல்லாயிரம் மக்களையும் கொன்று குவித்தன. அந்த போர்கள் பலநாடுகளின் உள்நாட்டு யுத்தமாகவும், சில நாடுகளுக்கிடையிலான யுத்தங்களிலும் இந்த வல்லரசு ஆசை நாடுகள் களமிறங்கின. அவன் நூறு ஆயுதங்கள் கொடுத்தால், இவன் நானூறு கொடுப்பான், அதற்கு அவன் நாலாயிரம் பேரை கொன்று குவிப்பான், பதிலாக பதின்னான்காயிரம் பேரின் இரத்தத்தைக் குடிக்கும் அடுத்த நாடு. இதைத்தான் இந்த இருநாடுகளும் தலைமைதாங்கி நடத்திய 45 வருட மங்கள திருவிழா!

இப்பொழுது சற்று உங்களுக்குப் புரியும் 2009 இல் இலங்கையில் என்ன நடந்தது என்று? பனிப்போரின் சாயல்களில், அவற்றுள் மறைமுகமாக பங்கு கொண்ட நாடுகளின் அரக்கத்தனம் புரிகிறதா? தமது தேச சுயலாபங்களுக்காக ஒரு இனத்தையே கருவறுக்க துணைபோன நாடுகளின் முகங்கள் மிகவும் கேவலமானவை. ஆனால் அதை இன்று எமது தமிழர் சமூகமும், சந்ததியும் மறந்து போய், யாரோ ................ க்காக பால் ஊற்றிக் கொண்டாடுகிறது.

இருநாடுகளும் தொடர்பு படாத போர்கள், பனிப்போரின் பகுதிப்போராக பார்க்கப் படுகிறது. உதாரணமாக Korean வார் (1950–1953), Bay of Pigs Invasion (Cuba - 1961), Vietnam War (1965–1973, Invasion of Grenada (1983) இப்படியான யுத்தங்களை சொல்லலாம்.

அட நாசமாகப் போன இவங்கட ஆசை, கொலைவெறிய பாருங்க... இரண்டாம் உலக யுத்தம் முடிந்து நான்கு வருடங்களில், அந்த யுத்தங்களால பாதிக்கப்பட்ட நாடுகள் நிம்மதி மூச்சு விட்டதோ தெரியல, ஆனால் இவங்கள் 1950-1953 இல் திருப்பி தொடங்கி விட்டார்கள்.

அமெரிக்காவும், சோவியத் ஒன்றியமும் தமது வால்லரசு, உலக நாயகன் நிலைக்கு போட்டி போட தொடங்கிய வேளையில், நேருக்கு நேராக யுத்தங்களை செய்யாமல், வேறொரு இடத்தில், தமக்கு பதிலாக, தமது உதவியுடன் போரை செய்தன. இந்த வகையான போர்களை "proxy wars" என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். சுத்த தமிழில் எப்படி சொல்வது என்று எனக்கு தெரியவில்லை. ஆனால் கொச்சைத் தமிழில் "வக்காலத்து போர்கள்" என்று சொல்லலாம்.

மேலும் சம்மந்தப்பட்ட அமெரிக்காவும் சோவியத் ஒன்றியமும் மட்டுமல்ல, அவர்களது வால்களும் அவர்களுக்குப் பின்னால் ஆடிக் கொண்டு இருக்கும். அதிலும் அமெரிக்காவிற்குப் பின்னால் வால்கள் நீண்டு கொண்டே இருக்கும்.

# நிகழ்வுகள்

## "பேச்சும் செயலும்" "ஏக்கம்"

### இரு நூல்களின் வெளியீடு

ஊடகவியலாளர் சேனையூர் அ.அச்சுதன் எழுதிய பேச்சும் செயலும் கவிதை நூல் மற்றும் கலாபூஷனம் சிவஸ்ரீ. அ.அரசரெத்தினம் (சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலய பிரதம குரு) அவர்கள் எழுதிய ஏக்கம் கவிதை நூல் வெளியீட்டு விழாவும் 28.10.2015 புதன் கிழமை மாலை 4.00 மணிக்கு திருகோணமலை நகரசபையின் பொது நூலக கேட்போர் கூடத்தில் நீங்களும் எழுதலாம் கவிதை இதழின் ஆசிரியர் எஸ்.ஆர். தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது தனபாலசிங்கம் தலைமையுரை ஆற்றினார். ஊடகவியலாளர் அ.அச்சுதனின் பேச்சும் செயலும் கவிதை நூலின் முதற்பிரதியை வீரகேசரி பத்திரிகையின் திருகோணமலை மாவட்ட முகாமையாளர் து.சஞ்சீவனுக்கு நூலாசிரியர் வழங்கி வைத்ததுடன் ஏக்கம் கவிதை நூலின் முதற்பிரதியை நூலாசிரியர் சிவஸ்ரீ அ.அரசரெத்தினம் கிரியா ஞான வித்தகர் சிவஸ்ரீ ஹரி ஓம். நா.செல்வரத்தினம் குருக்கஞக்கு வழங்கி வைத்தார். இந் நிகழ்வின் அதிதிகளான திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம், திருகோணமலை நகரசபையின் முன்னாள் நகரசபைத் தலைவர் க.செல்வராஜா, நகரசபையின் செயலாளர் ஏ.எல்.எம்.நபீல் ஆகியோர் சிறப்புரையாற்றினர். நூலின் மதிப்பீட்டு உரைகளை சிரேஷ்ட சட்டதரணி ஆ.ஜெகஜோதி மற்றும் ஓய்வு நிலை முதல்வர் கட்டைபறிச்சான் க.கனகசிங்கம் நிகழ்த்-தியதுடன் சிறார்களின் கும்மி நடன நிகழ்வும் இடம்பெற்றது.












### ஜீனியஸ் சிறுவர் முன்பள்ளியின் கலைவிழா [27.10.2015]

ஜுனியஸ் சிறுவர் முன்பள்ளியின் வருடாந்தக் கலைவிழா கடந்த 27ம் திகதி திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடந்தேறியது. திரு.திருமதி.சுதர்சன் ஆகியோரின் நிர்வாக வழிநடத்தலில் இயங்கிவரும் இப்பள்ளியின் ஐந்தாவது வருடாந்தக் கலைவிழாவாக இவ்விழா அமைந்திருந்தது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட உதவி அரச அதிபர் திரு.பிரதீபன், சிறப்பு விருந்தினராக எகெட் கரித்தாஸ் நிலைய இயக்குனர் அருட்தந்தை நிதிதாசன், விசேட விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேசலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளை ஆசிரியைகள் திருமதி.டி.ஜெனீபர், செல்வி.தர்சினி, செல்வி.டினோசி ஆகியோர் தொகுத்து வழங்கி-யிருந்தனர். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக கலாசார உத்தியோகத்தர் குணபாலா செயற்பட்டிருந்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் அரசி...

ஸ்ரீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தமிழ் அரசியல் கைதிகளிடம் எடுத்துச் சென்றிருந்தார். அந்த உறுதிமொழியில் நவம்பர் 7ம் திகதிக்கு முன்னர் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான தீர்க்கமான முடிவொன்றை ஸ்ரீலங்காவின் சனாதிபதி மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்ததை அடுத்து தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டம் தற்காலிகமாக ஓய்விற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

தமக்குப் பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே அரசியல் கைதிகள் இப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் கடந்த 27ம் திகதி பிரதமர் ரணில் தலைமையில் கூடிய கூட்டத்தில் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப் பொவதில்லை என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதானவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்குவது தொடர்பாக தமது மறுப்பை சட்டமா அதிபர் திணைக்களத்தினர் வெளியிட்டதை அடுத்தே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பிணை வழங்கக்கூடியவர்களுக்குப் பிணை வழங்குவது தொடர்பாக ஆராயுமாறு பிரதமர் அறிவுறுத்தியுள்ளார்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் மனோ கணேசன் பிணை வழங்கும் முடிவானது அரசியல் கைதிகளின் பிரச்சனைக்குரிய தீர்வுக்கான முதற்படி எனத் தெரிவித்திருந்தார்.

## தனிநாட்டுக்குச்...

தனிநாடொன்றைப் பெற்றுக்கொள்ளச் சர்வதெசம் ஒருபோதம் அனுமதிக்காது என்று திருகொணமலை மாவட்ட தமிழத் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தரைரெட்ணசிங்கம் தெரிவித்தள்ளார்.

கடந்த 28ம் திகதி சேனையூர் அச்சுதன் எழுதிய சொல்லும் செயலும் மற்றும் அவரது அப்பா அரியரெத்தினம் எழுதிய ஏக்கம் ஆகிய இரண்ட கவிதைப் பத்தக வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே துரைரெட்ணசிங்கம் இதனைத் தெரிவித்தார்.

தமிழர்களுக்கென்று தனி நாடொன்றைப் பெற்றுக் - கொள்வதற்குச் சர்வதேச சமூகம் ஒருபோதும் ஒத்தாசையாக இருக்கப்போவதில்லை.

அதனால்தான் அதற்கேற்ற வழிகளில் தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ளத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் நடவடிக்கைகளை முன்கொண்டு செல்கின்றார் என அவர் தெரிவித்திருந்தார்.

திருகோணமலையின் முன்னணி ஊடகவியலாளர்களுள் ஒருவரான அச்சுதன் மலைமுரசின் பகுதிநேரச் சுதந்திர ஊடகவியலாளராகத் தொழிற்படுவது குறிப்பிடத்தக்கது.

## எரிக் சொல்....

பல்வேறு வழிகளில் போராட்டங்களை மேற்கொள்வதன் ஊடாகவே தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும், சிங்களவர்கள் தமிழர்களின் அரசியல் உரிமைகளை ஒருபோதும் அன்பளிப்பாகத் தரப்போவது கிடையாது என்றும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்காவில் இடம்பெற்ற தேர்தலில் பெரும்பான்மையான சிங்கள மக்கள், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிற்கே வாக்களித்தி-ருப்பதாகவும், தமிழர்களும், முஸ்லீம்களும் இணைந்தே ஆட்சிமாற்றத்தைக் கொண்டுவர முடிந்தது என்றும் சுட்டிக்காட்சிய அவர், புதிய அரசு நேர்த்தியான வழியில் சமாதான முயற்சிகளில் ஈடுபட சர்வதேச சமூகம் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## 3வது கொலை....

உவர்மலையை வசிப்பிடமாகக் கொண்டிருந்த புவனேந்திரன் தேவராசா என்பவர் கடந்த ஒகஸ்ட் மாதம் 27ம் திகதி மாலையில் இருந்து காணாமற் போயிருந்தார். அவரை விடுவிப்பதற்குப் பத்து லட்சம் ரூபா கப்பம் கோரப்பட்டிருந்த நிலையில் விடயம் காவல்துறைக்குத் தெரிய வந்ததை அடுத்து கப்பம் கோரிண நபர் ஏற்கனவே இரண்டு கொலைகளுடன் சம்பந்தப்பட்டவர் என்பதைக் காவல்தறையினர் கண்டறிந்து கொண்டனர்.

எனினும் அச் சந்தேகநபரும் காணாமற் போயிருந்ததை அடுத்து அவரைக் கண்டு பிடிக்கும் பணிகள் முடுக்கி விடப்பட்டிருந்தன.

குறித்த நச்தேக நபர் மன்னாரில் கைதான பின்னர் அவராலேயே புதைக்கப்பட்ட சடலமொன்று காட்டப்பட்டுள்ளது.

அச்சடலத்தின் அருகில் புவனேந்திரன் தேவராசா காணமற்பொனபோது அணிந்திருந்த உடைகள் கண்டு பிடிக்கப்பட்டன. அவ் உடைகளைத் தனது கணவருடையது என காணாமற் போனவரின் மனைவி அடையாளம் காட்டியதை அடுத்து கண்டுபிடிக்கப்பட்ட உடல் எச்சங்கள் மீது சட்ட வைத்திய அதிகாரியின் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## கிண்ணியா...

30 ஆண்டுகளுக்கு மேலாக தமிழக மீனவர்கள் எமது நாட்டு மீன்களை சூறையாடி வந்தனர். அந்தக் காலத்தில் ஏற்பட்டிருந்த அசாதாரண சூழ்நிலை காரணமாக கடற்றொழிலை தடுக்க முடியவில்லை. இங்குள்ள மீனவர்களின் நலன் கருதி எனது 5 வருட காலத்தில் மூன்று வருட திட்டமொன்றை கொண்டு வரவுள்ளேன். இதனுடாக மீனவர்களின் எதிர்கால மேம்படுத்தலுக்கான மீனவர் நலத் திட்டங்களை மேற்கொள்வேன். இங்கு வந்துள்ள மீன்பிடித் திணைக்கள அதிகாரிகள் மீனவர்களின் குடும்ப நிலைப்பாட்டை நன்கு அறிந்தவர்கள். இவர்களின் உதவியுடனும் கடற்றொழில் அமைச்சரின் அனுமதியுடனும் இம்மாவட்ட மீனவர்களின் தொழிலை மேம்படுத்துவதற்கான சகல வேலைத் திட்டங்களையும் மேற்கொள்ளவுள்ளேன்

## ஐநா தீர்மானத்திற்கு...

அவமானப்படுத்தும் நடவடிக்கைகளாக அவை அமைகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

கடந்த 6ம் திகதி நாடாளுமன்ற உறுப்பி -னர்கள் சிலரால் நாடாளுமன்றத்தில் பதாதைகள் தாங்கிய போராட்டம் ஆரம்பமானதுடன் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன.

அதனைத் தொடர்ந்து ஒன்பது அரசியல் கட்சிகள் மஹிந்த ராசபக்சவின் பங்களிப்புடன் நடாத்திய நாடு தழுவிய எதிர்ப்பு நடவடிக்கைகள், பல்கலைக்கழகப் புலமையாளர்கள் எழுபத்தொருவர் தமது கையொப்பத்-துடன் ஐநாவின் தீர்மானத்திற்கு எதிராக எழுதிய மனு, 19 ஒக்டோபரில் அரசியல் கட்சிகள் கொழும்பில் மேற்கொண்ட ஊர்வலம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரால் ஸ்ரீலங்காவின் நாடாளுமன்ற-த்தில் மேற்கொள்ளப்பட்ட விவாதங்கள் உட்பட இறுதியாக வெளிவந்துள்ள மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழுவின் அறிக்கை ஆகியனவே ஐநாவின் மனித உரிமைத் தீர்மானத்தைக் கடுமையாக விமர்சிக்கும் நடவடிக்கைகளாக அமைந்ததுடன் அத் தீமானத்தை வறிதாக்க முயலும் நிகழ்சிநிரலாகவும் பார்க்கப்படுவதாக ச.வி. கிருபாகரன் மேலும் தெரிவித்துள்ளார்.

## லங்கா-இந்திய...

தற்காக 2005ஆம் ஆண்டு முதல் இந்த பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்க இந்தியக் கடற்படையின் சாவித்ரி, கோரா, கிர்பன் ஆகிய போர்க்கப்பல்கள். திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடைந்தன.

இந்தக் கூட்டுப் பயிற்சி இரண்டு கட்டங்களாக இடம்பெறவுள்ளன. முதற்கட்டமாக தற்போது, துறைமுக பயிற்சிகள் இடம் பெற்று வருகின்றன.

இதன்போது, நிபுணத்துவ, கலாசார, சமூக செயற்பாடுகள் இடம்பெறும். இதையடுத்து, இரண்டாவது கட்டமாக கடற்பயிற்சிகள் 30ஆம் நாள் ஆரம்பமாகும்.

மூன்று நாட்கள் நடக்கவுள்ள இந்தக் கடற்பயிற்சியில், கடற்கொள்ளை முறியடிப்பு, துப்பாக்கிச்சூடு, உலங்குவானூர்தி நடவடிக்கைகள், தற்காப்பு பயிற்சிகள் உள்ளிட்ட தள நடவடிக்கைகள் குறித்த பயிற்சிகள் இடம்பெறவுள்ளன என கடற்படை இணையம் தெரிவித்துள்ளது.

## நாவற்.....

அபிவிருத்தித் திணைக்களம், பிரதேசச் செயலாளர் மற்றும் கிராம சேவை அலுவலருக்குத் தெரியப்படுத்தியிருந்த போதும் அவர்கள் நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை என அவ்வீட்டின் உரிமையாளர் வை. முத்துக்குமார் தெரிவித்தார்.

வறுமையின் நிமித்தம் தனது மகள் அரேபிய நாடொன்றுக்கு வேலைக்குச் சென்றுள்ளதாகவும் அவரத குழந்தைகள் அச்சமயம் வீட்டில் இல்லையென்றும் அவர் தெரிவித்தார்.

குறித்த மகளின் கணவர் காக்கியுடை தரித்தவர்களால் கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்டவர் எனத் தெரிவித்த முத்துக்குமார் சேதமான வீட்டைத் திருத்தும் பணிக்கு தம்மால் தேர்வு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உதவி செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## அரியநேத்.....

ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வரும் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுறை சந்திரகாந்தனுக்கும் தனக்கும் தற்போது எவ்வித தொடர்பும் இல்லை எனவும், புலிகள் அமைப்பில் இணைந்த செயற்பட்ட காலத்தில் தொடர்பினை பேணியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் குற்றவாளியென நீதிமன்றம் தீர்ப்பு அளிக்கும் வரை ஒருவரை குற்றவாளியென எவரும் குறிப்பிட முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தான் பிரதியமைச்சராக இருந்த காலத்தில் வன்னியில் இருந்த உள்ளக இடப்பெயர்விற்கு உள்ளான மக்களின் முகாமினை அகற்றி மக்களை மீளக்குடியேறச் செய்தமை உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி பணிகளை தான் மேற்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் தன்னை பயன்படுத்திக்கொண்டதாக பரவலாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதாகவும் எனினும் தானே அரசாங்கத்தை பயன்படுத்திக்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கல்வி அமைச்சின்...

கூட்டாக தெரிவித்துள்ளனர்.

முகாமைத்துவ சேவையின் முதற்தரத்தில் உள்ள இவ்வலுவலரை இடமாற்றும் காரணம் அவர் அதிசிறப்பு (சுப்றா) வகுப்பைப் பெற்றிருக்காததே என தெரிவிக்கப்பட்ட போதிலும், அத்தரத்தைப் பெற்றுக்கொள்ளமலே கடந்த இரண்டு வருடங்களுக்கு மேல் அவர் நிர்வாக அதிகாரியாகச் செயற்பட விட்டது எவ்விதத்தில் தகும் என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது.

குறித்த அலுவலரை இடமாற்றும் நடவடிக்கைக்கான பின்னணி அரசியலை மறைப்பதற்காகவே தற்போது சுப்றா தரம் பற்றிய கதை பேசப்படுவதாகவும் தெரிகின்றது.

## 3 வருட.....

உடனடியாகவே அவர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் கிடைக்கப்பெற்றதாகவும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அண்மையில் கூட பட்டமேற்படிப்பை மேற்கொண்டுவிட்டுத் திரும்பிய ஆசிரியை ஒருவர் இங்கு நியமனம் பெற்றதாகவும் அவர் உடனடியாகவே கிழக்கு மாகாண முக்கிய அமைச்சரொருவரின் தலையீட்டால் திருகோணமலை நகரை அண்டிய பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுள்ளதாகவும் தெரிகின்றது.

குறித்தவிடயத்தைப் பலமுறை மக்கள் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்த போதும் அவ்விடயம் தொடாபாக நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லை.

## கிழக்கு.....

நேரங்களில் கிழக்கு முதலமைச்சர் அஹமட் மற்றும் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி ஆகியோரால் திறந்துவைக்கப்பட்டன.

ஒரே கட்டடங்களை இருவர் திறந்து வைத்ததன் பின்னர் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

**பகுதி 02**

01. மோகன் சுய தொழிலுக்காகப் பாதணிகளை உற்பத்தி செய்கின்றான். பாதணிச் சோடி ஒன்றின் உற்பத்தி விலை ரூ. 500 ஆக இருக்கும் அதே வேளை, அதன் மூலப் பொருட்களுக்கான செலவும் வேலைக் கூலிக்குமிடையே உள்ள விகிதம் 3 : 2 ஆகப் பிரிக்கப்படுகின்றது. அவர் அப்பாதணிச் சோடி ஒன்றை ரூ. 625 இற்கு விற்கின்றார்.

a.
   01. பாதணிச்சோடி ஒன்றை உற்பத்திச் செய்கையில் மூலப்பொருள்களுக்கான செலவையும் வேலைக் கூலியும் தனித்தனியாகக் காண்க.
   02. பாதணிச்சோடி ஒன்றை விற்பதன் மூலம் மோகனிற்குக் கிடைக்கும் இலாபச் சதவீதத்தைக் காண்க.

b. மூலப் பொருட்களுக்கான செலவு 12% இனால் அதிகரிக்கும் போது மூலப் பொருள்களுக்கான செலவுக்கும் கூலிக்குமிடையே உள்ள விகிதம் 4 : 3 ஆக இருக்குமாறு கூலி அதிகரிக்கின்றது.
அதற்கேற்ப,
   01. பாதணிச் சோடி ஒன்றின் தற்போதைய உற்பத்திச் செலவு யாது?
   02. முன்னர் பெற்ற அதே இலாபச் சதவீதத்தைப் பெறுவதற்குப் பாதணிச் சோடி ஒன்று தற்போது விற்கப்பட வேண்டிய விலை யாது?

## பாடம் : வரலாறு

01. ஐரோப்பியர், ஆசியாவை வந்தடைவதற்கான புதிய கடற்பாதைகளைத் தேடியமைப்பதற்கு ஏதுவான பிரதான காரணம்
   (1) பாதுகாப்பான கடற்பிரயாணங்களுக்கு பயனுடைய திசைகாட்டி கண்டு பிடிக்கப்பட்டமை.
   (2) கொன்ஸ்தாந்தின் நோபிளைக் கைப்பற்றிய துருக்கியரான முஸ்லீம்கள் ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்குமிடையிலான வர்த்தகத்தைத் தடை செய்தமை .
   (3) புதிதாக எழுச்சி பெற்ற தேசிய அரசுகளின் மன்னர்கள் புதிய கடற்பிரயாண வழிகளைத் தேடியமைக்கு ஆதரவு அளித்தமை.
   (4) இஸ்லாமின் பரவலைத் தடுத்து கிறிஸ்தவத்தைப் பரப்புவதற்கான தேவை.

02. சோவியத் நாடு தகர்ந்தமையால் உண்டாகிய பாதகமான விளைவாகக் கருதத்தக்கது எது?
   (1) உலக அதிகாரச் சமநிலை அற்றுப்போதல்
   (2) வார்சோ அமையத்தைக் கலைதல்
   (3) சமூகவுடைமைவாத முறைமை பரவுவதற்கு இருந்த வாய்ப்பு குறைதல்
   (4) சமூகவுடைமைவாத நாடுகளுக்கு ருசிய உதவி கிடைக்காமை

03. 1ம் பராக்கிரமபாகுவிற்கும் 2ம் கஜபாகுவிற்குமிடையே ஏற்பட்ட வரலாற்று ரீதியான சமாதான உடன் படிக்கை பற்றி குறிப்பிடுவது
   (1) சங்கமுவிகாரைச் சாசனத்தில் (2) கல்பொத்த சாசனத்தில்
   (3) தெவனகலச்சாசனத்தில் (4) ஹபெஸ்ஸ சாசனத்தில்

04. ஒரு முஸ்லீமாக இருந்த போதிலும் சமயச் சகிப்புத் தன்மையை மக்களுக்கு வழங்கிய ஆட்சியாளன் யார்?
   (1) பாபர் (2) ஹீமாயுன்
   (3) மகா அக்பர் (4) ஜகாங்கீர்

**வரலாறு – யாப்பு**
**ஆசிரியர் . திரு.த.ராஜ்குமார்**
**Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.**

## பாடம் : பௌதீகவியல்

01. பின்வருவனவற்றுள் எந்த உபகரணத்தில் மின் காந்தக் கோட்பாடு பிரயோகிக்கப்படுவதில்லை
   (1) மின்மானி (2) மின் விளக்கு
   (3) செவிபன்னி (4) மின் பாரம் தூக்கி

02. ஓய்வில் இருக்கும் ஒரு திரவத்தின் யாதேனும் புள்ளியின் அமுக்கத்தைத் தீர்மானிக்கும் காரணி அல்லாதது எது?
   (1) திரவத்தின் அடர்த்தி (2) ஈர்வை ஆர்மூடுகலின் பருமன்
   (3) திரவம் அடங்கியுள்ள பாத்திரத்தின் மேற்பரப்புப் பரப்பளவு
   (4) திரவத்தின் சுயாதீன மேற்பரப்பில் இருந்து குறித்த புள்ளிவரையிலான ஆழம்

03. கொள்ளளவியொன்றின் கொள்ளளவு பின்வருவனவற்றுள் எது?
   (1) தகடுகளுக்கிடையிலான அழுத்த வித்தியாசம்
   (2) தகடுகளின் பரப்பளவு
   (3) தகடுகளுக்கு இடையிலான தூரம்
   (4) தகடுகளுக்கு இடையில் உள்ள மின்னுழைவுத்தன்மை

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

### அருஞ் சொற்கள்

1. அகதி – கதியற்றவன்
2. அங்காடி – சந்தை கடைத்தெரு கடை
3. அனு – நுண்மையானது
4. அறிவியல் - விஞ்ஞானம்
5. ஆணைக்குழு – அதிகாரம் பெற்ற குழு
6. ஆணையாளர் - அதிகாரம் பெற்றவர்
7. ஆர்ப்பாட்டம் - எதிர்ப்பு ஆரவாரம் குழப்பம்
8. ஆன்மிகம் - இறைவனுக்கும் ஆன்மாவுக்கு முள்ள தொடர்பு
9. இங்கிதம் - பண்பு
10. இயக்கம் - பொது நோக்கின் பொருட்டு செயற்படுவது
11. உச்ச வரம்பு – மேலெல்லை
12. உயிரியல் - உயிரின விஞ்ஞானம்
13. எக்களிப்பு – செருக்குடன் கூடிய மகிழ்ச்சி
14. எடு கோள் - சான்றாக எடுத்துக் கொள்வது
15. ஏக போகம் - தனியுரிமை
16. ஏகாதிப்பத்தியம் - தனியரசாட்சி
17. ஒய்யாரம் - உல்லாசம்
18. கண்டனம் - மறுப்பு எதிர்ப்ப
19. கணனி –கணிப்பப் பொறி
20. கருது கோள் - இப்படியிருக்கலாம் எனக் கொள்ளப்படுவது.
21. காப்புறுதி - இழப்பீட்டிற்கான உறுதிப்பத்திரம்.
22. கான் முளை – மகன் குழந்தை தோன்றல்
23. குடிப்பரம்பல் - சனச் செறிவு
24. குடியரசு – மக்களாட்சி
25. கூட்டுறவு – பலரின் ஒத்துழைப்பு
26. கெழுதகமை – நெருங்கிய நட்பு
27. பக்க விளைவு – ஒரு நோக்கு கருதி ஒரு பொருளை பயன்படுத்துகையில் எதிர் பாராது நிகழ்வது
28. சஞ்சீவி – உயிர் தரும் மருந்து
29. சர்வாதிகாரம் - முழு அதிகாரமுடமை
30. சன நாயகம் - மக்களாட்சி
31. சான்றிதழ் - அத்தாட்சிப் பத்திரம்
32. சுரண்டல் - தன்னலத்துக்காகப் பிறர் சொத்தை அல்லது உழைப்பை பயன்படுத்தல்
33. சுற்றறிக்கை – சுற்று நிருபம்
34. சுற்றுலா – உல்லாசப்பயணம்
35. சூக்குமம் - மேலோட்டமாகத் தெரியாத நுணுக்கம்
36. செயலகம் - அரசுப் பணி நிலையம்
37. தட்டச்சு – கையச்சுப் பொறி
38. தவிசு – ஆசனப் பொறி
39. தவிசாளர் - அவைத் தலைவர்
40. திணைக்களம் - அரச இலாகா
41. திறனாய்வு – நலனாய்தல்
42. திறை சேரி – அரசாங்கப் பொக்கிசம்
43. தேற்றம் - கணிதத்தில் நிறுவப்படத்தக்க விதப்புரை தெளிவு
44.நிதியம் - நிதிக்குவியல் செல்வம்



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

**Complete the following paragraph using the words in brackets to form a word that fits the blank space.**

We all love to see birds in their (1) ................ (differ) range of colours. Recently a three day (2) ............... (exhibit) of photographs featuring birds was held in Galle. The title of it was 'The feathers.' The young (3) ........... (photograph)who had organized it told us that he became a bird watcher quite unexpectedly. His (4) ............ (curious) about birds turned into a love of bird-watching and then he had started to photograph them. The (5) .......... (select) on display showed how far and wide he had traveled. His photographing of birds had made him quite (6)............ (knowledge) about the birds and their habitats.

தன்மை

05. வலுவை அளப்பதற்கு பயன்படும் அலகு எது?
   (1) அம்பியர் (2) வோல்ற்
   (3) வாற்று (4) ஓம்

06. குறுக்கு அலைகளுக்கும் நெட்டாங்கு அலைகளுக்கும் இடையிலான பிரதான வேறுபாடு.
   (1) குறுக்கு அலைகளின் துணிக்கைகள் அலை ஊடுகடத்தப்படும் திசைக்கு செங்குத்தாக அசையும் எனினும் நெட்டாங்கு அலைகளில் துணிக்கைகள் அவை ஊடுகடத்தப்படும் திசையிலேயே அசையும்
   (2) குறுக்கு அலைகள் மூலம் சக்தி ஊடுகடத்தப்படுவதில்லை யாயினும் நெட்டாங்கு அலைகளால் சக்தி ஊடுகடத்தப்படும்
   (3) குறுக்கு அலைக் ஊடுகடத்தப்படுவதற்கு ஊடகம் தேவை யாயினும் நெட்டாங்கு அலைகள் ஊடுகடத்தப்படுவதற்கு ஊடகம் தேவைப்படாமை
   (4) குறுக்கு அலைகளின் மீடிறன் மிகக் குறைவானதாயின் நெட்டாங்கு அலைகளின் மீடிறன் மிகக் கூடுதலாக இருத்தல்

07. வெப்பக் குடுவையில் வைக்கப்பட்ட பொருளின் வெப்பநிலை ஏறத்தாழ பல மணி நேரங்களுக்கு அதே வெப்பநிலையில் பேணப்படுவதற்கு காரணம்.
   (1) கடத்தல் மூலம் வெப்ப இழப்பு தடை செய்யப்பட்டுள்ளது.
   (2) கதிர்ப்பு மூலம் வெப்ப இழப்பு தடை செய்யப்பட்டுள்ளது.
   (3) உடன்காவுகை மூலம் வெப்ப இழப்பு தடை செய்யப்பட்டுள்ளது.
   (4) மேற்கூறிய மூன்று முறைகளாலும் வெப்ப இழப்பு தடை செய்யப்பட்டுள்ளது.

**விஞ்ஞானம் (பௌதிகவியல்)**
**பல்தேர்வு**
**ஆசிரியர் . பொன்னுத்துரை தவசீதன் BSC**
**மாணவர் ஒளி கல்வி அபிவிருத்தி மையம், திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

# விளையாட்டு முரசு

## தற்காப்பு பயிற்சிகள்– திருகோணமலையில்

### கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள ஏற்பாட்டில்

திருகோணமலையில் யுனிபைட் நிறுவனம் மற்றும் கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தற்காப்பு விளையாட்டு பயிற்சிகள் கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் திருகோணமலை கடற்கரையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் நூற்றிமுப்பது இராணுவ, கடற்படை, சிறைச்சாலை அதிகாரிகள் கலந்துகொண்டு Sk தற்காப்பு பயிற்சிகளை பெற்றனர்.

இப்பயிற்சியில் கலந்துகொண்ட வீரர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக் கப்பட்டது. இந்நிகழ்வில், யுனிபைட் நிறுவனத்தின் தலைவர் கொமாண்டோ யூ.டபிள்யு.பீரிஸ், கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக் களத்தின் பணிப்பாளர் மதிவதணன் உட்பட கடற் படை அதிகாரி கள் பலரும் கலந்து கொண்டனர்.



## வெண்கலம் வென்றது இலங்கை

### துப்பாக்கி சுடுதல் போட்டி

மலேஷியாவின் ஜொஹா நகரில் இடம்பெற்ற உலக துப்பாக்கி சுடுதல் போட்டியில் இலங்கை சார்பில் பங்கு கொண்ட காவல்துறை விசேட அதிரடிப்படையின் வீரரான காவல்துறை பரிசோதகர் சுசிர திவுல்வெல வெண்கலப்பதக்கத்தை வெற்றிகொண்டுள்ளார்.

துப்பாக்கி சுடுதல் போட்டியின் திறந்த பிஸ்தோல் பிரிவிலேயே அவர் இந்த பதக்கத்தினை வெற்றிகொண்டுள்ளார். இலங்கை ரைபிள் சங்கம் மற்றும் மலேஷியாவின் ஐ.பீ.எஸ்.பீ. துப்பாக்கி சுடுதல் சங்கம் ஆகியன இணைந்து இந்த போட்டித் தொடரை ஏற்பாடு செய்திருந்தன.

இப்போட்டித் தொடரில் பங்கேற்க இலங்கையில் இருந்து முப்படை வீரர்கள் பலர் சென்றிருந்த போதும் காவல்துறை பரிசோதகர் சுசிர திவுல்வல மட்டுமே பதக்கம் ஒன்றினை வெற்றிகொண்டுள்ளார்.




## 45 கோடிக்கு விளையாட்டு கார்

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல குத்துச் சண்டை வீரர் **பிளாயிட் மேவெதர்** சுமார் 45 கோடி ரூபாவுக்கு கார் ஒன்று வாங்கியுள்ளார். தான் மோதிய 49 போட்டிகளிலும் வென்று தோல்வியை தழுவாமல் சமீபத்தில் ஓய்வு பெற்றார். சுப்ப பெதர் வெயிட், லைட் வெயிட், லைட் வெல்டர் வெயிட் வெல்டர் வெயிட், லைட் மிடில் வெயிட் ஆகிய 5 பிரிவுகளில் உலக சம்பியன் பட்டம் வென்றவர். 12 உலக பட்டத்தை வென்ற அவர் குத்துச் சண்டை போட்டி மூலம் கோடிக் கணக்கில் பணம் சம்பாதித்துள்ளார்.

இந்த நிலையில் மேவெதர் விலை உயர்ந்த விளையாட்டுக் கார் ஒன்றை வாங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மிக விரைவில் 6000 ஓட்டங்கள்

இடம்பெற்ற இந்திய அணியுடனான போட்டியில் அம்லா 6000 ஓட்டங்களைக் கடந்திருந்தார். இதன் மூலம் குறைந்த போட்டிகளில் 6000 ஓட்டங்களைக் கடந்தவர் எனும் சாதனையை அம்லா தனதாக்கினார். இவர் தனது 123 ஆவது இனிங்ஸில் இந்த சாதனையை படைத்திருந்தார்.

இதற்கு முன்னர் கோஹ்லி (136 இனிங்ஸ்) வசமே இந்த சாதனை காணப்பட்டது.

மேலும் விரைவாக 2000, 3000, 4000, 5000 ஓட்டங்களைக் கடந்தவர் என்ற சாதனையும் அம்லா வசமே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




## மூன்றாவது முறையாகவும் பங்களாதேஷில்

தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாக பங்களாதேஷில் ஆசியக் கிண்ணத்தை நடாத்துவது என சிங்கப்பூரில் இடம்பெற்ற கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஐந்து நாடுகளைக் கொண்ட இந்தப் பிராந்திய கிரிக்கெட் தொடரில் போட்டியை நடாத்தும் நாடான பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, ஒரு துணைக் கண்ட நாடு பங்கேற்கவுள்ளது. இம்முறை தொடர் எதிர்வரும் பெப்ரவரி 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதுடன், இறுதிப்போட்டி எதிர்வரும் மார்ச் மாதம் 6ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாக்கிஸ்தான் லீக்கில் சங்ககார

பாகிஸ்தான் சுப்பர் லீக் போட்டியில் இலங்கை அணியின் முன்னாள் ஜாம்பவான் குமார் சங்கக்கார விளையாட உள்ளார்.

ஐ.பி.எல். பாணியில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையினால் நடத்தப்படும் பாகிஸ்தான் சுப்பர் லீக் போட்டியின் முதல் தொடர் அடுத்த வருடம் பெப்ரவரி 4ம் திகதி முதல் 24ம் திகதி வரை துபாய் மற்றும் சார்ஜாவில் நடக்கவுள்ளது.

இதில் விளையாட பல்வேறு நாடுகளை சேர்ந்த 150இற்கும் மேற்பட்ட வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் நட்சத்திர துடுப்பாட்ட வீரருமான குமார் சங்கக்கார பாகிஸ்தான் சுப்பர் லீக் போட்டிகளில் விளையாட உள்ளார்.




## ஷேவாக் நீக்கப்பட்டதற்கு டோனிதான் காரணமா???

இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரரான ஷேவாக், தனது 37வது பிறந்த நாள் அன்று சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெற்றார். இந்நிலையில் இந்திய அணித்தலைவர் டோனி பற்றி சமீபத்தில் ஊடகங்கள் ஷேவாக்கிற்கும் அணித் தலைவர் டோனிக்கும் பிரச்சனை இருந்ததாகவும், அவர் தான் ஷேவாக்கை அணியில் இருந்து நீக்கியதாகவும் பரபரப்பாக பேசப்பட்டது.

இது பற்றி கருத்து தெரிவித்த ஷேவாக், டோனி முதன்முதலாக தலைவர் பொறுப்பு ஏற்றவுடன் அவரது தலைமையின் கீழ் ஆடிய மூத்த வீரர்களான நாங்கள் அவருக்கு ஆலோசனைகளை வழங்கினோம். இதனை அவர் உடனடியாக நடைமுறைப்படுத்தியும் உள்ளார். இது ஊடகங்களின் பொய்யான கணக்கு. அணியிலிருந்து நான் நீக்கப்படுவதற்கு டோனி தான் காரணம் என்று கூறப்பட்ட கருத்து தவறு என்றே நான் கருதுகிறேன் என கூறினார்.



## இரண்டாமிடத்திற்கு தள்ளப்பட்டார் சாய்னா

இந்திய பூப்பந்தாட்ட வீராங்கனையான சாய்னா நெவால், தனக்கு ஏற்பட்டுள்ள உடற்தகுதிப் பிரச்சினைகளால் முழுமையான திறமையை வெளிப்படுத்த முடியாத நிலையை ஏற்படுத்துவதாகத் தெரிவித்துள்ளார். முதல்நிலை வீராங்கனையாகக் காணப்பட்ட சாய்னா, காயங்கள் காரணமாக சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தாமல் போக, தரப்படுத்தலில் இரண்டாமிடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது போட்டிகளில் பங்குபற்றுகின்ற போதிலும், 100 சதவீத உடற்தகுதி இன்னமும் ஏற்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.




## அனுஷ்கா – கோஹ்லியை திருமணம் செய்ய மறுப்பு

நான் தற்போது திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்ற செய்தி தவறானது என்று அனுஷ்கா சர்மா கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "நான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று வெளியான செய்தி தவறானது. நான் எனது சொந்த வாழ்க்கையை பற்றி வெளிப்படையாக தான் இருந்து வந்துள்ளேன். இந்நிலையில் ஊகங்கள் முறையான அறிவிப்பு வரும் வரை காத்திருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியநேத்திரனுக்கு ஆப்பு வைக்கும் கருணா

# கிங்ஸ்லி கொலை தொடர்பில் அரியநேத்திரனிடம் விசாரியுங்கள்





தமிழ் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கிங்ஸ்லி ராஜநாயகம் படுகொலை தொடர்பில் அவருக்கு பிரதியீடாக நாடாளுமன்றத்திற்கு தெரிவாகிய பா.அரியநேத்திரனிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட காலகட்டத்தில் கிங்ஸ்லி ராஜநாயகம் உள்ளிட்ட பலர் படுகொலை செய்யப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

17

# கல்வி அமைச்சின் நிர்வாக அதிகாரிக்கு இடமாற்றம் ???

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் நிர்வாக அதிகாரிக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களும் பத்து மாதங்களும் கல்வி அமைச்சின் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றிய திருமதி. சுசந்தி ஹெட்டிஹே அவர்கள் உடனடியாகச் செயற்படுத்தப்படும் வகையில் திணைக்கள மொன்றுக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

திடமும், நேர்மையும் மிகுந்த இவ்வதியாரியின் இடமாற்றத்தில் கிழக்கு மாகாண அரசியல் பின்நிற்பதாக பெயரை வெளிப்படுத்த விரும்பாத அலுவலர்கள்

17

# கிண்ணியா மீனவர்களின் பிரச்சனைகளைக் கேட்டறிந்தார் தௌபீக் நா.உ



வடதிருகோணமலை மாவட்ட மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து சுமூகமான முறையில் மீன்பிடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக ஐ.தே.க.வின் திருகோணமல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மகரூப் தெரிவித்தார். திருகோணமலை மாவட்டத்திலுள்ள மீனவச் சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பு, கிண்ணியா மீன்பிடி நிலையத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இங்கு மேலும் தெரிவித்த அவர்,

"சட்டத்துக்கு முரணாக மீன்பிடி வலைகள் மற்றும் உபகரணங்களான டிஸ்கோ வலை, டைனமட், அதிகூடிய மின்னொலி போன்றவற்றை பயன்படுத்தாமல் ஏற்றுக்கொள்ளப்பட்ட வலைகள் மற்றும் உபகரணங்களை பயன்படுத்தி மீன் பிடித் தொழிலில் ஈடுபடமுடியும், கடந்த

17

# நாவற்சோலையில் விபத்து! மரம் முறிந்து வீட்டில் விழந்தது



தெருவில் நின்ற மரம் மறிந்து வீழ்ந்ததில் வீடு சேதமான சம்பவமொன்று நாவற்சோலையில் நடந்துள்ளது. கடந்த 28ம் திகதி அதிகாலையில் நடைபெற்ற இச்சம்பவத்தில் வீட்டில் யாரும் அச்சமயம் இல்லாதிருந்ததால் உயிராபத்துக்கள் எவையும் நடைபெறவில்லை என எமது செய்தியாளர் தெரிவித்தார்.

குறித்த மரம் தொடர்பாக பல தடவைகள் வீதி

17

தமிழர்கள் தமது தனித்துவ. இன அடையாளங்களைப் பேணிப் பாதுகாப்பது தலையாய கடமை! தனித்துவ அடையாளங்களே தேசிய இன அடையாளமாக கணிக்கப்படும். அடையாளங்கள் ஊடாக தேசிய இனம் என்பதை உலகிற்குச் சொல்வோம்!

"தமிழ்த் தேசம் நோக்கிப் பயணிப்போம்"

முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஒவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.



159A, கடல் முக வீதி.
திருகோணமலை.
0777 555 738

# 3 வருடங்களாக குச்சவெளி விவேகானந்தாவிற்கு விஞ்ஞான ஆசிரியை இல்லை

அரசியல் தலையீட்டால் ஆசிரியை இடமாற்றம்
தமிழ் அமைச்சர் அமைதி காப்பு

குச்சவெளி விவேகானந்தா மகாவித்தியாலத்திற்குக் கடந்த மூன்று வருடங்களாக விஞ்ஞான பாட ஆசிரியை நியமிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை மக்கள் முன்வைத்துள்ளனர்.

கடந்த 2013ம் ஆண்டு தொடக்கம் விஞ்ஞான பாட ஆசிரியரின்றி இப்பாடசாலை இயங்குவதாகத் தெரிவித்த பெற்றோர் க.பொ.த சாதாரண தரத்தினைக் கொண்ட இப்பாடசாலைக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்கள் தமது அரசியல் செல்வாக்குகளைப் பயன்படுத்தி இடமாற்றம் பெற்றுச் செல்வதாகவும் தெரிவித்தனர்.

இம்முறை க.பொ.த சாதாரண தரத்திற்கு பதினைந்து மாணவர்கள் தோற்றவுள்ள நிலையில் விஞ்ஞான பாட ஆசிரியர் இன்மை அவர்களது அடைவு மட்டத்தைப் பாதிக்கும் எனவும் மக்கள் அஞ்சுகின்றனர்.

2013ம் ஆண்டில் இருந்து இன்று வரை மூன்று ஆசிரியர்கள் இப்பாடத்திற்காகப் பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட போதும் அவர்கள் நியமிக்கப்பட்ட கடிதங்கள் மட்டுமே பாடசாலைக்குக் கிடைத்ததாகவும் அதன் பின்

17

# பேஸ்புக் குற்றங்களுக்கு விசேட காவல்துறை

பேஸ்புக் ஊடாக (Facebook) பெண்களை ஏமாற்றுபவர்கள் தொர்பில் 011-2423947,011-2423945 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி அல்லது cybercrime@police.lk என்ற இணையதள முகவரிக்கு முறைப்பாட்டினை வழங்குமாறு காவல்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# கிழக்கின் முதலமைச்சருக்கும் மத்திய இணை அமைச்சருக்கும் முறுகல் ???

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட்டிற்கும் கிராமிய பொருளாதாரப் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலிக்கும் இடையிலான அரசியல் போட்டி மிகவும் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது.

அண்மையில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் ஓட்டமாவடி பாத்திமா பாலிகா வித்தியாலயம் மற்றும் மீறாவோடை அல்ஹிதாயா பாடசாலைகளில் அமைக்கப்பட்ட இரு பாடசாலைகளின் விஞ்ஞான ஆய்வு கூடங்களை ஒரே நாளில், வெவ்வேறு

17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 31.10.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.